
புதிய கொலம்பியா ரிகார்டு!
கான ஸரஸ்வதி
D.K. பட்டம்மாள்
பாடிய
GE. 6212
தூக்கிய திருவடி
பாகம் 1 & 2 (ராகம் சங்கராபரணம்)
ஸரஸ்வதி ஸ்டோர்ஸ், மதராஸ்.

கல்கி
பொருளடக்கம்

மலர் 4 } இதழ் 25 } 1945 ஜனவரி 28 { தாரண ௵ தை 15

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் வரும் பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.



கர்நாடக சங்கீத வித்தை மிக அருமையான வித்தை: அந்த வித்தையில் தேர்ச்சி யடைதல் எளிய காரியமன்று. அதற்கு இயற்கையோடு பிறந்த இசை உணர்ச்சி வேண்டும்: இடைவிடாத உழைப்பும் பயிற்சியும் வேண்டும். இப்படி அரிதில் பெற்ற வித்தை நன்கு சோபிப்பதற்கு இனிய சாரீரம் வேண்டும். இந்த மூன்று அம்சங்களும் நன்கு பொருந்திய பாக்யசாலியாவாள் ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள். மதுரமும் கம்பீரமும் பொருந்திய சாரீரம், அசாதாரண ஸ்வரஞானம், அழுத்தமான கமகப் பிடிகள், தெளிவான சாஹித்ய உச்சரிப்பு இவை ஸ்ரீமதி பட்டம்மாளின் பாட்டின் விசேஷ அம்சங்கள்.

சவுக்க கால தீக்ஷிதர் கிருதிகளைப் பூரண ராகபாவத்துடன் பாடுவதிலும், அபூர்வ லய வேலைப்பாடுகள் பொருந்திய பல்லவிகள் பாடுவதிலும் பெயர் பெற்றவர். தமிழிசை இயக்கத்தின் முன்னணியில் நிற்பவர். ஸ்ரீமதி பட்டம்மாளின் கச்சேரிகளில் சாதாரணமாக எப்போதுமே தமிழ்ப் பாடல்கள் நிறைய இருக்கும். அவருக்கே தனி உரிமையான துக்கடாக்களில் கரகோஷம் நிச்சயம் உண்டு.

கலைமகளின் அருளினாலும் ஈசுவராநுக்ரகத்தினாலும் கர்நாடக சங்கீத உலகில் ஸ்ரீமதி பட்டம்மாளின் புகழ் மேலும் மேலும் வளர்ந்தோங்க வேண்டுமெனப் பிரார்த்திக்கிறோம்.

கல்கி

மலர் 4 } தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் { இதழ் 25

என்ன சேதி?

தொழிலாளர் கோரிக்கை

இங்கிலாந்திலே டிரேட் யூனியன் காங்கிரஸ் என்னும் தொழிலாளர் ஸ்தாபனம் மிகவும் பலம் பெற்று நடந்து வருகிறது. அதை யொட்டி நமது இந்திய நாட்டிலும் டிரேட் யூனியன் காங்கிரஸ் பல வருஷ காலமாய் நடந்து வருகிறது. நாட்டிலுள்ள பல தொழிலாளர் ஸ்தாபனங்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்து கூடி வருஷம் ஒரு முறை டிரேட் யூனியன் காங்கிரஸ் மகா நாடும் நடத்துகிறார்கள். இந்த வருஷம் மேற்படி அகில இந்தியத் தொழிற் சங்கக் காங்கிரஸின் 21-வது மகாநாடு சென்னையில் சென்ற வாரத்தில் நடைபெற்றது. முந்திய வருஷங்களைக் காட்டிலும் மிகச் சிறப்பாக நடந்தது. அகில இந்தியாவிலிருந்தும் சுமார் ஐந்தரை லட்சம் தொழிலாளரின் சார்பாகச் சுமார் ஆயிரம் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். பார்வையாளர் பல்லாயிரக் கணக்கில் வந்திருந்தார்கள்.

இந்தியாவின் சுதந்திரக் கோரிக்கையை ஆதரித்தும், உடனே தேசிய அரசாங்கம் ஏற்பட வேண்டும் என்று வற்புறுத்தியும், சிறையிலுள்ள காங்கிரஸ் தலைவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரியும் தீர்மானங்கள் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டன. இந்த அரசியல் தீர்மானங்களைத் தவிரத் தொழிலாளர் முன்னேற்றம் கருதிய தீர்மானங்களும் பல நிறைவேறின. கம்யூனிஸ்டு தொழிலாளர் தலைவர்கள், காங்கிரஸ் தொழிலாளர் தலைவர்கள், இரண்டுமில்லாத வெறும் தொழிலாளர் தலைவர்கள் — எல்லாரும் சேர்ந்து சண்டை சச்சரவில்லாமல் ஏக மனதாக மேற்படி தீர்மானங்களை நிறைவேற்றினார்கள். ரொம்ப சந்தோஷமான காரியம்.

தொழிலாளரும் பஞ்சப்படியும்

நமது மாஜி மந்திரி ஸ்ரீ வி. வி. கிரி மேற்படி தொழிலாளர் காங்கிரஸில் பேசும்' போது, தொழிலாளர்களுக்கு ஒரு நல்ல 'டோஸ்' கொடுத்தார். தொழிலாளர்கள் தேசத்தின் சுயராஜ்யத்தைக் காட்டிலும் 'டியர்னஸ் அலவுன்'ஸை அதாவது பஞ்சப்படிக் கோரிக்கையைப் பிரதானமாகக் கருதி விட்டார்களாம்! அதனால்தான் தேசம் உருப்படாமல் இந்த நிலைமையில் இருக்கிறதாம்!

தொழிலாளர்கள் பஞ்சப்படி கோரியது அவ்வளவு பெரிய குற்றமாக நமக்குத் தோன்றவில்லை. தேசத்தில் மாதம் இரண்டாயிரம் ரூபாய் சம்பளம் பெறும் உத்தியோகஸ்தர்கள் தங்களுக்கும் பஞ்சப்படி வேண்டுமென்று சமீபத்தில் கூடித் தீர்மானித்திருக்கிறார்கள். அப்படியிருக்கும் போது,— நாட்டில் நிஜமாகவே சாமான்களின் விலை ஒன்றுக்கு நாலு மடங்காகவும் எட்டு மடங்காகவும் ஆகி யிருக்கும்போது, — தொழிலாளர்கள் பஞ்சப்படி கேட்பது இயற்கையே யாகும். பஞ்சப்படி கேட்டு வாங்கி அரை வயிற்றுக்காவது சாப்பிட்டால்தானே சுயராஜ்யம் கேட்பதற்குக் குரலில் தெம்பு இருக்கும்?

வீண் புகார்

தொழிலாளர் சுயராஜ்யத்துக்குப் பாடுபடவில்லையென்பதும் வீண் புகார். மற்றவர்கள் சுபராஜ்யத்துக்காக என்ன பாடு பட்டார்கள், என்ன வெற்றியடைந்தார்கள், — தொழிலாளர் மீது மட்டும் குறை கூறுவதற்கு? சிறை புகுந்த காங்கிரஸ் தலைவர்கள் சுயராஜ்யத்துக்காக ஏதாவது திட்டம் வகுத்து, "இதைச் செய்யுங்கள்!" என்று சொல்லி விட்டுப் போனார்களா? ஒன்றுமில்லை. வேலைத் திட்டம் போடுவதற்

குள்ளே தலைவர்கள் சிறைக்கு அனுப்பப் பட்டார்கள். அவர்கள் போட்ட திட்டம் என்று தவறாக எண்ணிச் சிலர் சில காரியங்களைச் செய்தார்கள். அவர்களே பிற்பாடு, "அமெரியின் ரேடியோ பேச்சைக் கேட்டு ஏமாந்து போனோம்" என்று ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அப்படியிருக்கும் போது, பெரிய பெரிய தலைவர்களே சுயராஜ்யம் அடைவதற்கு இன்னது செய்ய வேண்டுமென்று தெரியாமல் விவாதித்துக் கொண்டிருக்கும் போது, ஏழைத் தொழிலாளர்கள் மீது குற்றம் சொல்வதில் என்ன பயன்? ஏதோ இந்த மட்டில் பஞ்சப்படி வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டு உயிரோடு இருக்கிறார்களே, அதுவே தொழிலாளர்கள் சுயராஜ்யத்துக்காகச் செய்திருக்கும் பெரிய கைங்கரியம் ஆகும். 'சுவரை வைத்துக் கொண்டுதானே சித்திரம் எழுத வேண்டும்?' என்பது போல், உயிர் இருந்தால்தானே எந்தக் காரியமும் செய்ய முடியும்?



சரோஜினியின் தீர்ப்பு

ஸ்ரீமதி சரோஜினி தேவியைப் பஞ்சாப்புக்குள் நுழையக் கூடாதென்று பஞ்சாப் சர்க்கார் முன்னொரு உத்தரவு போட்டார்கள். அந்த உத்தரவை அவர் மீறி உடனே சிறைக்குப் போகாமல் வெளியிலேயே சால்ஜாப்புச் சொல்லிக் கொண்டிருப்பதைப் பற்றி நமது தேசபக்த வீரர் ஸ்ரீ எம். பக்தவத்ஸலம் ஒரு 'டோஸ்' கொடுத்தார். அதற்குக் கூட மசியாமல் ஸ்ரீமதி சரோஜினி பஞ்சாப்புக்குப் போவதற்குப் பதில் சென்னைக்கு வந்தார். வந்து, உற்சாகம் ததும்பும் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். மனச் சோர்வையும் தோல்வி மனப்பான்மையையும் போக்கினார். அவருடைய பிரசங்கங்களைக் கேட்டவர்களிலும் பத்திரிகைகளில் படித்தவர்களிலும் பலர் சுயராஜ்யமே வந்து விட்டது போல் சந்தோஷமடைந்தார்கள்.

ஸ்ரீமதி சரோஜினி தேவியின் பேரில் நமது ஸ்ரீமான் பக்தவத்ஸலத்துக்குக் கோபம் வந்த காரணம் என்னவென்றால், அவர் கல்கத்தாவில் புதிய காங்கிரஸ் சங்கங்களின் போக்கை அவ்வளவாக ஆதரியாதவர் போல் பேசியதாகப் பத்திரிகைகளில் வந்திருந்த செய்திதான்.

சென்னைக்கு வந்திருந்த சமயத்திலும் ஸ்ரீமதி சரோஜினி மேற்படி விஷயமாகத் தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்தார். அந்த அபிப்பிராயம் நாம் அறிந்து கொண்ட வரையில் இதுதான்:

1. காங்கிரஸ் மகா சபையிலிருந்து யாரையும் விலக்க யாருக்கும் அதிகாரம் கிடையாது.
2. புதிய காங்கிரஸ் சங்கங்களில் இஷ்டப் பட்டவர்களைச் சேர்த்துக் கொள்ளவும், இஷ்டப்படாதவர்களை விலக்கவும் மேற்படி சங்கம் அமைப்பவர்களுக்கு உரிமை உண்டு.
3. புதிய காங்கிரஸ் சங்கங்கள் தனிப்பட்ட காங்கிரஸ் வாதிகளின் கூட்டமே தவிர, காங்கிரஸ் கமிட்டிகளின் அதிகாரம் அவற்றுக்குக் கிடையாது.
4 கம்யூனிஸ்ட்டுகள் நல்ல தேசபக்தர்கள். அவர்கள் எவ்வளவோ நல்ல தொண்டுகள் செய்திருக்கிறார்கள். அவர்கள் மேல் வீண் பழி சுமத்துவதும், அவர்களைத் தூற்றுவதும் தவறு. இந்தச் சண்டையினால் தேச நன்மைக்குப் பாதகம் ஏற்படும்.

ஏறக்குறைய நாம் இந்தப் பத்திரிகையில் வெளியிட்ட கருத்துக்களைத்தான் ஸ்ரீமதி சரோஜினி தேவியும் வெளியிட்டிருக்கிறார்.

புதிய காங்கிரஸ் சங்கங்களுக்கு யாரை வேண்டுமானாலும் சேர்த்துக் கொள்ளவும், யாரை வேணுமானாலும் விலக்கவும் உரிமை உண்டு. ஆனால் அந்த உரிமையைக் 'கம்யூனிஸ்டு'கள் விஷயத்தில் உபயோகப் படுத்துவது நியாயமா என்பது கேள்வி. நியாயம் ஏதேனும் இருந்தாலும், அந்த உரிமையை இவ்வளவு பறை யறைந்து படாடோபமாக உபயோகப் படுத்துவது புத்திசாலித்தனமா என்பது இன்னொரு கேள்வி. இதற்கு நமது பதில் கர்னல் அமெரியின் பெயர்பெற்ற ஒரு வார்த்தைதான்; அதாவது, "இல்லை!"

ஐந்து ரூபாய் பரிசு: *சென்ற இதழில் வெளியான "இன்னும் கஷ்டம்!" என்னும் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: எம். ஆர். ஸரோஜா, பெரம்பூர் பாரக்ஸ், சென்னை.*

நிகழ்ச்சிச் சித்திரம்



-உம்மன்


'இந்தியத் தொழிலாளிகளின் ஐக்ய பலம்'
இந்தியதேசிய கோரிக்கைகள்
சென்னையில் கூடிய அகில இந்திய தொழிலாளிகள் சங்கக் காங்கிரஸ் இந்தியதேசிய கோரிக்கைகளைப் பலமாக ஆதரித்துத் தீர்மானங்கள் செய்தது.
தென்னாப்பிரிக்க சர்க்கார்
இந்தியர்களுக்கு விரோதமான சட்டங்கள்.
குடியேறிய இந்தியர்கள்.
“என்ன! ரொம்ப கசப்பாக இருக்கிறதோ!”
இந்தியாவில் எடுத்துக்கொள்ளப் பட்ட பதில்நடவடிக்கைச் சட்டங்கள் தென்னாப்பிரிக்கர்களுக்கு ரொம்பக் கசப்பாய் இருக்கின்றனவாம்.

சுதந்திரத் திருநாள்

தாயின் மணிக்கொடி வானளாவிப் பறக்கிறது!

இமய மலையின் உச்சியில் மேக மண்டலத்துக்கு மேலே பறக்கிறது!

குமரி முனையின் இளந் தென்றலில் ஆடிப் பறக்கிறது!

பாரத நாட்டில் நாடு நகரமெல்லாம் அழகிய மூவர்ணக் கொடி பறக்கிறது!

அந்த சுதந்திரக் கொடியின் கீழ் ஆயிர மாயிரம் ஜனங்கள் அணி வகுத்து நிற்கிறார்கள்.

ஆடவரும் பெண்டிரும் நிற்கிறார்கள்; முதியோரும் வாலிபரும் நிற்கிறார்கள்; ஹிந்துக்களும் முஸ்லிம்களும் நிற்கிறார்கள்; கிறிஸ்துவர், சீக்கியர், பார்ஸிகள் நிற்கிறார்கள்.

"ஜய பாரத!" என்று கோஷிக்கிறார்கள். "வாழ்க சுதந்திரம்" என்று முழங்குகிறார்கள்.

பாரதத் தாய் சுதந்திர சிம்மாசனத்தில் மணிமுடி தரித்து வீற்றிருக்கிறாள்.

இந்திய தேசத்தில் இந்திய மக்களின் பிரதிநிதிகளான இந்தியத் தலைவர்கள் சுதந்திர ஆட்சி செலுத்துகிறார்கள்.

பாரத நாட்டை அதன் வீரப் புதல்வர்களின் கரங்கள் காத்து நிற்கின்றன.

எதிரிகள் ஏறெடுத்துப் பார்க்கவும் அஞ்சுகிறார்கள்.

சுதந்திர இந்தியாவில் ஏழை என்றும் அடிமை என்றும் யாரும் இல்லை. வறுமை என்பதும் பஞ்சம் என்பதும் அடியோடு கிடையாது.

அறியாமை என்பது இல்லை; அச்சம் என்பதும் அறவே கிடையாது.

எங்கும் செல்வத்தின் வளம்; எங்கும் கலைகளின் மணம்.

* * *

மேலே கூறியது, இந்தியாவின் சுதந்திரத் திருநாளைப் பற்றித் தேச பக்தர்கள் காணும் கனவு.

எத்தனையோ காலமாக எவ்வளவோ ஆயிரக் கணக்கான தேச பக்தர்கள் இந்தக் கனவைக் கண்டு வருகிறார்கள். இரவில் தூக்கத்திலும் காண்கிறார்கள்; விழித்துக் கொண்டிருக்கும் போதே பகற் கனவாகவும் காண்கிறார்கள்.

ஆனால் கனவு லோகத்திலிருந்து நனவு லோகத்துக்கு வந்து பார்க்கும் போது, நிலைமை முற்றும் வேறு விதமாக இருப்பதைக் காண்கிறோம்.

பதினைந்து வருஷத்துக்கு முன்னால் லாகூர் காங்கிரஸின் பூரண சுதந்திரத் தீர்மானம் நிறைவேறியதிலிருந்து பிரதி வருஷமும் ஜனவரி 26உ சுதந்திர தினமாகக் கொண்டாடி வருகிறோம்.

இந்த வருஷமும் நேற்று வெள்ளிக் கிழமை இந்தியா எங்கும் சுதந்திரத் திருநாள் கொண்டாடப் பட்டது.

எப்படிக் கொண்டாடப்பட்டது?

இமயமலை முதல் குமரிமுனை வரையில் எங்கெங்கும் தடை உத்தரவு மயம்!

அதிகாரிகளிடையே ஒரே பரபரப்பு! போலீஸாரிடையே சுறுசுறுப்பு!

கூட்டம் போடக்கூடாது! ஊர்வலம் விடக்கூடாது! கொடி வணக்கம் செய்யக் கூடாது! சுதந்திரப் பிரதிக்ஞையைப் படிக்கக் கூடாது!

பேசக் கூடாது! பாடக் கூடாது! வாயைத் திறக்கக் கூடாது; திறந்தால் மூடக் கூடாது!

இந்தியா சுதந்திர தேசமல்ல என்பது ஜனவரி 26உ அன்று வெகு நன்றாய் எடுத்துக் காட்டப் பட்டது!

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி அமுல் நடக்கிறது என்பது ஐயந்திரிபுக் கிடமில்லாமல் நிரூபிக்கப்பட்டது.

இவ்வளவு தடைச் சட்டங்களுக்கும் அதிகார அமுல்களுக்கும் மத்தியில் சில தேச பக்தர்கள் ஆங்காங்கு சுதந்திர தினத்தைக் கொண்டாடினார்கள்; கொடி வணக்கம் நடத்தினார்கள்; சுதந்திரப் பிரதிக்ஞையும் செய்து கொண்டார்கள்.

அவர்களுடைய சிந்தையின் வீரத்தை வாழ்த்துகிறோம்; அவர்களுடைய திடசங்கல்பத்தை மனமாரப் போற்றுகிறோம்.

ஆனாலும், இந்தியாவின் சுதந்திரம் இன்னும் வெகுதூரத்தில் இருப்பதாகத் தோன்றுகிறதே, கண்ணுக்

கெட்டிய தூரம் பார்த்தாலும் காண வில்லையே, — என்னும் எண்ணமும் கூடத் தோன்றத்தான் செய்கிறது. இதன் காரணம் என்னவென்றும் ஆராயத் தோன்றுகிறது.

* * *

சுதந்திரம் நமது பிறப்புரிமை.

சுதந்திரம் இந்திய நாட்டின் முழு உரிமை.

பிரிட்டிஷார் இந்தியாவுக்கு வந்ததற்கு எவ்வித நியாயமும் இல்லை.

இன்று இங்கே இருப்பதற்கும் எவ்வித நியாயமும் இல்லை.

பிரிட்டிஷ் ஆட்சி போக வேண்டும்; இந்தியா சுதந்திரம் பெற வேண்டும்.

இதிலெல்லாம் யாதொரு சந்தேகமும் இடையாது.

ஆனால் அந்தப் பிறப்புரிமையாகிற சுதந்திரத்தை நாம் ஏன் இன்னும் அடையவில்லை யென்பதைச் சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும். சுதந்திரத்தை இனிமேலாவது அடைவதற்கு எந்த வழி சாத்தியம், எந்த வழி சாத்தியமில்லை யென்பது பற்றியும் யோசிக்க வேண்டும்.

ஜப்பானையோ, ஜெர்மனியையோ நம்பி ஒரு நாளும் நாம் சுயராஜ்ய மடைய முடியாது.

பிரிட்டன் தானாக மனமொப்பி மகிழ்ந்து இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுத்து விடுமென்றும் நாம் நம்ப முடியாது.

பொதுஜனச் சட்ட மறுப்பு முதலிய முறைகள் யுத்த காலத்துக்குப் பயன்படாது என்று நாம் மூன்று வருஷத்துக்கு முன்பு சொன்னதை இன்றைக்கும் சொல்கிறோம். இந்த மூன்று வருஷ அநுபவத்தில் அது இன்னும் தெள்ளத் தெளிவாகி யிருக்கிறது.

பின், எதுதான் வழி?

* * *

இந்தியா சுதந்திர மடைவதற்குரிய மார்க்கம் யுத்தத்துக்கு முந்தி ஒன்றாயிருக்கலாம்; யுத்தத்திற்குப் பிறகு வேறொன்று யிருக்கலாம்.

ஆனால் யுத்த காலத்தில் இந்தியாவின் சுதந்திரத்தைப் பின் வரும் மூன்று வழிகளில் தான் தேடவேண்டும் என்பது நமது திடமான நம்பிக்கை.

அந்த மூன்று வழிகள் வருமாறு :—

1. தேசிய ஒற்றுமை

அரசியல் தலைவர்களும் சமூகத் தலைவர்களும் ஒன்று பட்டு ஒரு முகமான தேசியக் கோரிக்கையையும் சுயராஜ்யத் திட்டத்தையும் வகுத்துக் கொள்ள வேண்டும்.

2. அதிகாரத்தைக் கைப்பற்றல்

தேசத் தலைவர்கள் தங்கள் கையில் வந்த அரசியல் அதிகாரங்களைக் கைவிடாமல், மேலும் மேலும் கிடைத்த வரையில் அரசாங்க ஸ்தாபனங்களையும் அரசியல் அதிகாரங்களையும் கைப்பற்ற வேண்டும்.

3. சர்வதேச அபிப்பிராயம்

இந்தியாவின் சுதந்திரக் கோரிக்கைக்கு அநுகூலமாகச் சர்வதேச அபிப்பிராயத்தைத் திருப்ப எல்லா முயற்சிகளும் செய்ய வேண்டும்.

* * *

துரதிர்ஷ்டவசமாக மேற் கூறிய மூன்று வழிகளையும் நாம் கடைப்பிடிக்கவில்லை; கடைப்பிடித்த போதிலும் அந்த வழிகளில் தக்கபடி முன்னேறவில்லை; 'பின்வாங்கி யிருக்கிறோம்' என்றும் சொல்லலாம்.

முதலாவது, தேசீய ஒற்றுமை என்பதில், ஹிந்து — முஸ்லீம் ஒற்றுமைதான் மிகவும் முக்கியமானது. காங்கிரஸும் முஸ்லீம் லீக்கும் ஒற்றுமையடைந்து விட்டால், சுயராஜ்ய பாதையில் நாம் முக்கால்வாசி முன்னேறியதாக வைத்துக் கொள்ளலாம்.

அது விஷயத்தில் ஓயாத முட்டுக்கட்டை நேர்ந்து வருகிறது. 'கல்லைக் கண்டால் நாயைக் காணோம்; நாயைக் கண்டால் கல்லைக் காணோம்' என்பது ஹிந்து முஸ்லிம் பிரச்னைக்கு மிகப் பொருத்தமா யிருக்கிறது.

யுத்தம் ஆரம்பித்ததும் காங்கிரஸ் தலைவர்களும் முஸ்லீம் லீக் தலைவர்களும் கூடி ஆலோசித்து ஒற்றுமையான திட்டம் தயாரித்திருக்கவேண்டும்.

அல்லது ஸ்டாபோர்டு கிரிப்ஸ் வந்த போதாவது மேற் கண்டவாறு செய்திருக்க வேண்டும்.

பிறகு ராஜாஜி கூறிய யோசனையை யாவது ஒப்புக்கொண்டிருக்கவேண்டும்.

அப்படி யெல்லாம் செய்யாதபடியால், ஜனாப் ஜின்னா கணக்கு வழக்கில்லாத உயரத்தில், உச்சாணிக் கிளையில் போய் உட்கார்ந்து விட்டார். மகாத்மா காந்தி. அவர் வீடு தேடிச் சென்று எவ்வளவு கேட்டுக் கொண்டும் பயன்படவில்லை. எங்கே பாகிஸ்தான் கிடைத்து விடுமோ என்று பயந்து

ஒளிந்து கொண்டவர்போல் காணப்பட்டார்.

அதே ஜனாப் ஜின்னா இப்போது ஆமதாபாத்திலும் மற்ற இடங்களிலும், "என் வண்டியில் வந்து ஏறுங்கள்; நான் உங்களைச் சுதந்திரத்துக்குக் கொண்டு போய்ச் சேர்க்கிறேன்!" என்று பறை சாற்றுகிறார்.

இவ்விதம் ஒற்றுமைக்குரிய சந்தர்ப்பங்களை ஒருவர் மாற்றி ஒருவர் நழுவவிட்டுக் கொண்டே வந்திருக்கிறோம்.

• • •

இரண்டாவது. 'அதிகாரத்தைக் கைப்பற்றும் முறை' விஷயத்தில், நோக்கத்தில் பெருந் தவறுகள் நடந்திருக்கின்றன.

அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்குப் பதிலாகக் கையிலுள்ளதையும் கைவிட்டு வந்திருக்கிறோம்.

உண்மையான தியாகத்துக்கும், வீண் வீரியத்துக்கும் வித்தியாசம் தெரியாதபடி குழப்பம் ஏற்பட்டிருக்கிறது.

உத்தியோக வேட்டை, பதவி ஆசை ஆகியவைகளுக்கும், தேச நலத்துக்காக அதிகாரங்களைக் கைப்பற்றுவதற்கும் வித்தியாசம் இல்லாமல் குழம்பிப் போயிருக்கிறது.

ஒரு நாள் பிரிட்டிஷார் இந்தியர்களின் கையில் பூரண சுதந்திரத்தை விண்ணாமல் விரியாமல் ஒப்புவித்து விட்டுக் கப்பி நீட்டப் போகிறார்கள் என்று சிலர் கண்டு வரும் அசட்டுத்தனமான பகற் கனவும் மேற்படி மனக் குழப்பத்தை அதிகமாக்கியிருக்கிறது.

என்றைக்கிருந்தாலும், இந்தியாவின் சுதந்திரத்தைப் பகுதி பகுதியாகவே பிரிட்டிஷாரிடமிருந்து நாம் கைப்பற்றியாக வேண்டும்.

இதைத் தள்ளிப் போடப் போடச் சுதந்திரமும் தள்ளிப் போய்க் கொண்டேயிருக்கும்.

தேச சேவையில் பழுத்த தலைவர்களும் அதிகாரத்துக்கு வந்தால் தேசத்துரோகிகளாகப் போய் விடுவார்கள் என்ற அபிப்பிராயத்தைத் தேச பக்தர்களே பரப்பி வருகிறார்கள்.

தேசம் சுதந்திரம் அடைவதற்கு இதுவே பெரிய முட்டுக்கட்டையாகி வருகிறது.

• • •

மூன்றாவது. சர்வ தேச அபிப்பிராயத்தைப் பற்றிய வரையில், குழப்பம் இன்னும் அதிகமாக இருந்து வருகிறது. பெரிய பெரிய தலைவர்களிடத்திலேயே அந்த மனக் குழப்பம் இருக்கிறது.

சமீபத்தில் ஸ்ரீமதி சரோஜினி தேவி செய்த பிரசங்கமும், அதைக் குறித்து அக்கிராசனர் ஸ்ரீ வி. வி. கிரி வெளியிட்ட அபிப்பிராயமும் மேற்படி மனக் குழப்பத்தை நன்கு வெளியிட்டன.

சர்வதேச மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று ஸ்ரீமதி சரோஜினி கூறினார். "இந்தியாவில் ஒரு காலும் மாஸ்கோவில் ஒரு காலும் வைப்பது பற்றி ஏன் பரிகசிக்கிறீர்கள்? 'பண்டித' ஜவாஹர்லால் நேரு ஒரு காலை இந்தியாவிலும் இன்னொரு காலைச் சீனாவிலும் வைத்துக்கொண்டிருக்கவில்லையா?" என்று கேட்டார்.

இதை ஸ்ரீ வி. வி. கிரி ஆட்சேபித்து, 'சர்வ தேச மனப்பான்மை' என்பதையே அடித்து விளாசித் தள்ளினார்.

"நம்முடைய காரியத்தை நாம் பார்ப்போம்; மற்றவர்கள் எப்படிப் போனால் என்ன! வேறு நாடுகளைப் பற்றி நமக்கு என்ன கவலை?" என்றார். இதே கருத்தை ஸ்ரீ வி. வி. கிரி சென்னையில் நடந்த சில தொழிலாளர் மகாநாடுகளிலும் வெளியிட்டிருக்கிறார்.

ஒரு காலை இந்தியாவிலும் ஒரு காலை இன்னொரு நாட்டிலும் வைப்பதை நாமும் ஆட்சேபிக்கிறோம்.

இரண்டு காலையும் இந்தியா தேசத்திலேதான் நாம் ஊன்றி வைக்கவேண்டும். ஆனால் கூடியவரை கைகளை நன்கு நீட்டி அயல் நாடுகளின் சிநேகத்தைப் பெற வேண்டும்.

'சர்வதேச மனப்பான்மை'யைக் கண்டிப்பவர்கள் ஏதோ நம்மால் அயல் நாடுகளுக்கு உதவி கிடைத்துவிடப் போகிறது என்ற அடியோடு பிசகான கொள்கையை வைத்துக் கொண்டு பேசுகிறார்கள்.

தற்சமயம் இந்தியா பிற நாடுகளுக்கு உதவி செய்யக் கூடிய நிலைமையில் இல்லை. ஆனால் பிற நாடுகளின் சிநேகத்தினால் நமக்கு நன்மை உண்டாக இடம் இருக்கிறது.

இந்த யுத்தத்திற்குப் பிறகு உலகத்தில் ருஷியாவும், அமெரிக்காவுந்தான் ஒவ்வொரு வகையில் மிகவும் செல்வாக்குடன் இருக்கப் போகின்றன.

அந்த நாடுகளுடன் சிநேகம் பிடித்துக் கொள்வதால், அந்த நாட்டு மக்களின் சிநேக பாவத்தைப் பெறுவதால், இந்தியாவுக்கு நன்மை உண்டாக இடம் உண்டு; நிச்சயமாகத் தீமை நேராது.

பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் அமெரிக்காவுக்கு பிரிட்டனின் சிநேகம் வேண்டும் என்கிறார். பிரதம மந்திரி சர்ச்சில் ருஷியாவினால் எவ்வளவுதான் தமது நோக்கங்கள் தடைப்பட்டாலும் ருஷியாவின் சிநேகத்தைக் கை விடமாட்டேன் என்கிறார்.

பிரான்ஸையும் இதாலியையும் கூட அவர் சிநேகம் கொள்ள விரும்புகிறார்.

இந்தியாவிலே, இனிமேல் சுதந்திரம் பெற வேண்டியவர்களாயிருக்கும் நாம், "அயல் நாட்டுச் சிநேகிதர்களே நமக்கு வேண்டாம்!" என்று சொல்லுவதைப் போன்ற அர்த்த மற்ற பேச்சு வேறொன்றுமில்லை.

நம்முடைய சுதந்திரத்துக்கு நாம் அன்னிய நாட்டு உதவியை மட்டும் நம்பியிருக்கக் கூடாது; நம்முடைய சொந்த முயற்சியைத்தான் முக்கியமாக நம்ப வேண்டும்.

ஆனால் ருஷியாவின் சிநேகமும் அமெரிக்காவின் சிநேகமும் தள்ளிவிடக் கூடியவையல்ல. அந் நாடுகளின் சிநேகத்தையும், அந் நாட்டு மக்களின் நல்ல எண்ணத்தையும் பெறுவதற்காக, எவ்வளவு முயற்சி செய்தாலும் தகும்.

ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் தற்சமயம் அமெரிக்காவில் செய்துவரும் பிரசாரத்தை நாம் பெரிதும் பாராட்டுகிறோம்.

அவ்விதமே ருஷியாவுக்கும் நமது முன்னணித் தலைவர்களில் ஒருவர் சென்றால் மிகவும் பிரயோஜனமாயிருக்குமென்று நம்புகிறோம்.

இந்தியா சுதந்திரம் அடைவதற்கு மட்டுமன்றி, அடைந்த சுதந்திரத்தை நிலை நாட்டிக் கொள்வதற்கும் அயல் நாடுகளின் சிநேகம் இந்தியாவுக்குத் தேவை.

* * *

சுதந்திர விழா தினத்தில், இந்தியா சுதந்திர மடைவதற்கு அவசியமென்று நாம் கருதும் முறைகளை மேலே குறிப்பிட்டோம்.

ஆனால், வேறு எந்த முறையின் சுதந்திரம் வந்தாலும் வரவேற்கவும், நன்றி கூறவும் சித்தமாயிருக்கிறோம். மனிதப் பிரயத்தனமே இல்லாமல் தெய்வ யத்தனத்தினால் திடீரென்று சுதந்திரம் வந்து விட்டாலும் நமக்குச் சம்மதந்தான். எப்படியாவது, பல்லாயிரக் கணக்கான தேச பக்தர்களின் இந்திய சுதந்திரக் கனவு உண்மையாக வேண்டுமென்பதே நமது பிரார்த்தனை.

வானசஞ்சாரம்

இசைத்தேன்

சென்னை திருச்சி நிலையங்களில் ஜனவரி 2ல வாய்த்த கச்சேரிகள் பெரும்பாலும் நல்ல ரசமான விருந்தன. சென்னையில் மூன்று மணிக்குக் கேட்ட எம். டி. பார்த்தசாரதியின் கானம் எல்லாவற்றிலும் சிறந்து விளங்கியது. செவியை நிரப்பும் நாதப் பொழிவுள்ள பாரி சாரீரம். அரிய சாதகத்துடன் மனோதர்மமும் உருக்கமும் கலந்தது. கமலமனோஹரி, தர்பார் ராகங்கள் அழகாயிருந்தன. பந்துவராளியை விஸ்தாரமாய் வழங்கினார். 'கஞ்சதளாயதாக்ஷி'யில் நிரவல் ஸ்வரங்கள் ராகபாவம் நிறைந்திருந்தன. இறுதியில் பாடிய ராகமாலிகையும் சிறப்பாயிருந்தது.

அதே நிலையத்தில் அன்று வி. ஆர். சந்திரா நிதானமாயும் நன் நிச்சயத்துடனும் தன்யாசி அடாணா, ஸ்ரீரஞ்சனி, கல்யாணி ராகங்களையும் உருப்படிகளையும் ஒரு கை பார்த்தார். சந்திராவின் ஞானத்துக் கேற்ப, குரலின் உதவுபடியையும் மெருகையும் விருத்தி செய்தால் அவர் சங்கீதம் இன்னும் மேம்படும்.

15ல திருச்சியில் வி. நாராயணசாமி பிள்ளைக்குப் பதிலாகக் கல்யாணகிருஷ்ணய்யர் பாடினார். இயற்கை ரஞ்சகமுள்ள சாரீரமாகத் தென்பட்டது. இக்காலத்திய அவசரமே இல்லாத செளக்கமும் நிதானமும் கொண்ட வழி. ராகங்கள் ஒழுங்கு சஞ்சாரங்களுடன் பாணியாய் இலங்கின. சங்கராபரண உருப்படியில் கண்ட நிரவல் ஸ்வரங்கள் சுகபாவம் நிறைந்திருந்தன. இவர் பாணியில் மனோதர்ம வேலைப்பாடுகளுக்கு அதிக இடமில்லை போலும்.

இரண்டு இனிய குரல்கள் சேர்ந்து பாடினால் அதில் ஒரு விசேஷ அழகு தென்படுகிறதென்று முன்பு சொல்லியிருக்கிறேன். அத்தகைய சங்கீதம் 16ல சென்னையில் கேட்டது. பாடியவர்கள் என். எஸ். ரங்கநாயகியும் ருக்மிணியும். ஒருவர் மூலம் வெளிவந்த பைரவி, ஆரபி, ஹரிகாம்போதி, கல்யாணி ராகங்கள் வளப்பாயிருந்தன. உருப்படிகளில் இருவரும் சேர்ந்து நிதானமாய் இழைந்துப் பாடியது வெகு சுகமாயிருந்தது.

குன்னக்குடி வெங்கடராமய்யர் ராகதானம் பல்லவி பாடுவதற் குரியவர் என்பதற்குச் சந்தேகமில்லை. 17ல சென்னையில் அவர் ஆலாபனைக்கு எடுத்துக் கொண்ட பேகடா விஸ்தாரமாகவேயிருந்தது. பல்லவியில் ஸ்வரம் பாணியாயிருந்தது. ஆனால் தானம் மாத்திரம் எதிர்பார்த்த அளவுக்கு வரவில்லை.

19ல சென்னையில் விசேஷமாய்த் தென்பட்ட கச்சேரிகளில் வி. என். ராஜலக்ஷ்மியது ஒன்று. இனிமையும் நடுத்தர காத்திரமும் கொண்ட குரலில் ஆரபி, கல்யாணி, தோடி ராகங்களும் 'கடைக்கண் நோக்கு' உருப்படியும் தேர்ந்தியாயிருந்தன. பிர்க்காவுடன் வளைவு குழைவு கார்வைகளும் பொருந்தியிருந்தன.

பி. வி. லக்ஷ்மணன் நயமான சாரீரத்தில் நல்ல உதவுபடியுடன் நிதானமாயும் நாசூக்காயும் ராகங்களையும் உருப்படிகளையும் வழங்கினார். பிர்க்காவில் நல்ல தெளிவு. தன்யாசி, மோஹனம், பூர்விகல்யாணி மூன்றும் சிறப்புற்றிருந்தன. 'தேவி மீனாக்ஷி'யில் கல்வரமான ராகபாவப் பிடிகள் மனம் கவர்ந்தன.

20ல சென்னை நிலையத்தில் பிருந்தா முக்தா சகோதரிகளின் கானம் மதுரமாயிருந்ததென்று சொல்லத் தேவையில்லை. தேனிலும் இனிய குரல்களில் இழையும் கமகப் பிடிகளோடு அவர்கள் வழங்கிய உருப்படிகளின் அழகு பிரத்யேகம். ஒருவர் பாடிய சாரங்கா, பைரவி ராகங்களின் எழிலுக்கும் குறைவில்லை. கௌளி பந்துவில் 'குவலயாக்ஷிரோ' பதம் விசேஷ வனப்பு வாய்ந்திருந்தது. அவர்களுக்குப் பக்கவாத்தியமாய் அபிராமி லயாவின் வாசித்ததின் சிறப்பையும் குறிப்பிடாமலிருக்க முடியாது.

21ல இரண்டு நிலையங்களுக்கும் விசேஷ யோகம். ஒரே நாளில் பல உயர்தரக் கச்சேரிகள் சேர்ந்து விட்டன. பிற்பகலில் ஒரு மணி நேரம் கேட்ட ருக்மிணி ராஜகோபாலனின் கானம் எல்லாவற்றிற்கும் சிகரமாய் விளங்கியது. அமெச்சூர் சங்கீத விதுஷிகளில் முதல் ஸ்தானத்துக் குரியவர். பல அழகு அம்சங்களும் சிறந்த மனோதர்மமும் ஒருங்கே பொருந்தி யமைந்த சங்கீதம். தன்யாசி, கல்யாணி ராகங்களை வெகு நிறைவாய்க் கையாண்டார். 'ஸாகேத நகர' 'லாவண்ய' உருப்படிகளில் நிரவல் ஸ்வரங்கள் அதிக வேலைப்பாடுகளோடு ராகபாவமும் பொழிந்து நின்றன.

அங்கு அன்று காலையிலும் பிற்பகலிலும் மணக்கால் வரதராஜய்யர், கட்டை சாரீரமாயினும் சாதக பலத்தினால் மத்யகால உதவுபடி கொண்டு, பிர்க்கா உருட்டல் புரட்டல்களுடன் ராகங்களையும் உருப்படிகளையும் பொழிந்தார். ஸ்ரீரஞ்சனியும் கரஹரப்ரியாவும் ஜோராயிருந்தன.

திருச்சியில் எம். ஏ. கல்யாண கிருஷ்ண பாகவதர் வாசித்த வீணையும் சிறந்து விளங்கியது. கமகப் பிடிகளுடன் பாணியாய் வளஜி, பைரவி, காம்போதி ராகங்களையும் கடைசியில் ஒரு ராகமாலிகையையும் வெளியிட்டார்.

22ல இரவு திருச்சியில் பாடி, சென்னையிலும் அஞ்சல் செய்த தஞ்சாவூர் லக்ஷ்மிநாராயண பாகவதரின் கச்சேரி நன்றாய் வாய்த்தது. கணீர்ப்பான சாரீரம், சிறந்த மனோதர்மம், சரளமான உதவுபடி, பாணி அழகு. வேறென்ன வேண்டும்? பைரவியுடன் உதயரவிச்சந்திரிகா, சங்கராபரணம், பிற ராகங்களை வெகு தேர்ந்தியாய்க் கையாண்டார். பைரவி, சங்கராபரண உருப்படிகளில் கண்ட சங்கதிகளும் நிரவல் ஸ்வரங்களும் எழில் நிறைந்திருந்தன. 'கண்ணன் வரக் காணேனே' உருப்படியை ஸாரங்கா, யமுனா கல்யாணி, புன்னாகவராளி இவைகளாலான ராகமாலிகையில் அமைத்துப் பாடியது ரொம்ப ஜோராயிருந்தது.

பாரதி நிதிக் கச்சேரி

எட்டயபுரத்துக்கு ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்களும், நானும் சென்றிருந்தபோது, பாரதி இலக்கிய மன்றத்தைச் சேர்ந்த இளைஞர்கள், "பாரதியாருக்கு இந்த ஊரில் ஞாபகச் சின்னம் நிறுவ வேண்டும்" என்று சொன்னார்கள். அதை நடத்தி வைப்பதற்கு ஒரு யோசனையும் கூறினார்கள். "ஞாபகச் சின்ன நிதிக்காகச் சங்கீதக் கச்சேரி வைத்துப் பணம் திரட்டலாம்" என்பதுதான் அந்த யோசனை.

நல்ல காரியங்களுக்குச் சங்கீதக் கச்சேரிகள் மூலம் பணம் திரட்டுவது என்பது தமிழ் நாட்டில் பிரசித்தமாகப் போய் விட்டது. எனவே, எட்டயபுரம் நண்பர்கள் அவ்விதம் யோசனை கூறியது இயற்கைதான். ஆனால் உதவிக் கச்சேரிகளையே நம்பி ஞாபகச் சின்ன நிதி ஆரம்பிக்கும் யோசனை எனக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. பாரதியார் தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் புத்துயிர் அளித்த கவி. அத்தகையவருக்கு ஞாபகச் சின்னம் ஏற்படுத்துவது என்றால், தமிழ் மக்கள் எல்லாரும் ஒரு முகமாகச் சேர்ந்து ஏற்படுத்த வேண்டும். இலங்கை முதல் இமயம் வரையில் உள்ள தமிழர்கள் அந்தக் காரியத்துக்குப் பணம் உதவ வேண்டும். அப்படி ஏற்படுத்தும் ஞாபகச் சின்னம்தான் தேசிய மகா கவியான பாரதியாருக்கு ஏற்ற ஞாபகச் சின்னமாயிருக்கும். அதுதான் பாரதியாருக்கும் கௌரவம்; தமிழ் நாட்டுக்கும் கௌரவம்.

அவ்விதம், தமிழ் மக்கள் எல்லாரும் ஈடுபட்டுச் செய்யும் காரியத்துக்கு ஆங்காங்குள்ள உற்சாகிகள் சங்கீதக் கச்சேரியோ, அல்லது வேறு ஆடல் பாடல் கச்சேரிகளோ நடத்திப் பணம் வசூல் செய்து கொடுத்தால் சர்க்கரைப் பந்தலில் தேன் மாரி பொழிந்தது போல் பொருத்தமாயிருக்கும்.

இதை எட்டயபுரத்து நண்பர்களிடம் நான் சொன்னேன். அவர்களும் ஒப்புக் கொண்டார்கள். யார் செய்த அதிர்ஷ்டமோ, என்னமோ, அப்போது எட்டயபுரத்தில் போட்ட திட்டம் நன்கு நிறைவேறி வருகிறது; அதிலும் நினைத்தது நினைத்தபடியே. — எதிர்பார்த்ததற்கு மேலான வெற்றியுடன் — நிறைவேறி வருகிறது!

இலங்கை முதல் இமயம் வரையில் உள்ள தமிழர்கள் பாரதி ஞாபகச் சின்ன நிதிக்குப் பணம் உதவியிருக்கிறார்கள்.

அதோடு நிற்கவில்லை. பாரதி உதவி நிதிக்காக வடக்கே புது டில்லியில் ஜனவரி 20உ ஒரு கதம்பக் கச்சேரி நடந்தது.

தெற்கே திருநெல்வேலியில் வருகிற பிப்ரவரி 3உ ஒரு சங்கீதக் கச்சேரி நடக்கிறது.

திருநெல்வேலியில் நடக்கும் பாரதி நிதிக் கச்சேரி, திருநெல்வேலி தமிழிசைச் சங்கத்தின் ஆதரவில் நடக்கிறது. கச்சேரி செய்யப் போகிறவர் இந்த வருஷம் சென்னைச் சங்கீத விழா வரிசையில் ஒரு பெரிய கிளர்ச்சியையே உண்டுபண்ணி விட்ட ஸ்ரீ செம்பை வைத்தியநாத பாகவதர்; தமிழிசை விழாவில் அமோகமாகக் கச்சேரி செய்து தமிழிசைக்கே ஒரு புதிய புகழைக் கொடுத்தவர்.

திருநெல்வேலி ஜில்லா பாரதியார் பிறந்த ஜில்லா; தமிழன்புக்குப் பெயர் போன ஜில்லா. தமிழ் நாட்டின் சரித்திரத்தில் இணையற்ற ஸ்தானத்தை அடையப் போகும் எட்டயபுரம் திருநெல்வேலி ஜில்லாவில்தான் இருக்கிறது. எனவே, பாரதியார் நிதிக்காக நடக்கும் மேற்படி செம்பை கச்சேரிக்குத் திருநெல்வேலி வாசிகள் பெருந் திரளாக விஜயம் செய்து சிறப்பாக நடத்தி வைப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

* * *

மிக மிகத் தயக்கத்துடன் தொடங்கிய இந்தப் பாரதி நிதி முயற்சி தமிழ் மக்களின் உள்ளத்தை எவ்வாறு கவர்ந்து விட்டது என்பதை நினைக்க நினைக்க, ஆச்சரியமாயிருக்கிறது.

கல்கத்தா 'இண்டியன் பைனன்ஸ்' பத்திரிகையின் பிரசித்தி பெற்ற ஆசிரியர் ஸ்ரீ பி. என். ரங்கசாமி நூறு ரூபாய் அனுப்பி வைத்திருக்கிறார்.

மாஜி ஜில்லா ஜட்ஜும், ஹிந்து வேத சாஸ்திரங்களைக் கரைகண்ட விற்பன்னருமான ஸ்ரீ திவான் பகதூர் கே. எஸ். ராமசாமி சாஸ்திரிகள் ரூ. 20/- தமது ஆசிர்வாதத்துடன் அனுப்பியிருக்கிறார்.

திண்டிவனத்தில் நடந்த ஒரு பிரபல விவாகத்தில், மணமகன் ஸ்ரீ கனகசபை கல்யாணத்திற்கு விஜயம் செய்திருந்த காங்கிரஸ் பிரமுகர் ஜனாப் உபயதுல்லாவிடம் பாரதி நிதிக்காக ரூ. 25 அளித்தார். அதை நண்பர் உபயதுல்லா தமது காரியாலயத்தைத் தேடி வந்து கொடுத்து விட்டுப் போனதைப் பெரிதும் பாராட்டுகிறேன்.

கன்னிப்பட்டி பஞ்சாயத்து போர்டு தலைவர் ஸ்ரீ கே. ஆர். பரமசிவக் கவுண்டர் ஒரு அழகான கடிதத்துடன் ஒரு தங்கப் பவுனையும் சேர்த்து அனுப்பி எனக்கு ஒரு கடினமான கட்டளையையும் இட்டிருக்கிறார். எட்டயபுரத்தில் பாரதி ஞாபகார்த்த வாசக சாலை திறந்து வைக்கப்படும் போது, பாரதியாரைப் பற்றித் தக்கமான கவி பாடுகிறவருக்கு மேற்படி தங்கப் பவுனைப் பரிசாக அளிக்கவேண்டும் என்பது அவருடைய கட்டளை.

பவுன் வந்த அன்று விற்ற விலையின்படி ரூ. 51-0-0 ஸ்ரீ பரமசிவக் கவுண்டர் பெயரில் வரவு வைத்திருக்கிறேன். கட்டிடத் திறப்பு விழா அன்று, விழாவை நடத்தப் போகும் நிர்வாக சபையார் மேற்படி அன்பரின் மனோரதத்தை நிறைவேற்றி வைப்பார்கள் என்று நம்புகிறேன்.

• • •

பிப்ரவரி 10உடன் பாரதி நிதி வசூலை நிறுத்துவது பற்றிச் சில நண்பர்கள் ஆட்சேபித்து எழுதி யிருக்கிறார்கள். பங்களூரிலிருந்து பல கையெழுத்துக்களுடன் ஒரு 'மகஜர்' கூட வந்திருக்கிறது.

பல முக்கிய காரணங்களை முன்னிட்டே அத்தகைய தீர்மானம் செய்யப்பட்டதென்பதை நேயர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நிதி வசூல் செய்வது மட்டுமே நமது நோக்கமல்ல; நிதி வசூலுடன் நமது காரியம் தீர்ந்து விடவும் இல்லை.

வசூலித்த நிதியைக் கொண்டு தக்கபடி ஞாபகச் சின்னம் நிறுவுவதற்குத் திட்டங்களை அமைக்க வேண்டும். ஆண்டுதோறும் எட்டயபுரத்தில் பாரதியார் பிறந்த தினத்தைத் தேசியத் திருவிழாவாகக் கொண்டாட ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்கெல்லாம் தக்க ஸ்தாபனங்களை அமைக்க வேண்டும்.

இந்தப் பூர்வாங்க வேலைகளை நன்கு நடத்தி ஞாபகச் சின்னம் அமைக்கும் வேலையும் தொடங்கிய பிறகு, நிதி போதவில்லையென்று கண்டால், மறுபடியும் தமிழ் மக்களைக் கேட்கப் பின் வாங்கப் போவதில்லை.

ஜனவரி 24உ வரையில் வசூல்

தமிழ்நாடு டாக்கீஸ், சென்னை		250	0	0
ஸ்ரீ ஆர்.எம்.கே. முத்துசுவாமி அய்யர், தூத்துக்குடி		200	0	0
லயோலா மாணவர்கள் நிதி தமிழ் மாணவர்கள், லயோலா கல்லூரி, சென்னை		129	0	0
ஸ்ரீ கிருஷ்ண விலாஸ் ஹோட்டல், கொழும்பு		105	0	0
ஸ்ரீ பி. எஸ். ரங்கசாமி, "இந்தியன் பைனான்ஸ்", கல்கத்தா (ஸ்ரீ ஏ. வைத்தியநாதன் மூலம்)		100	0	0
ஸ்ரீ கே. ஆர். பரமசிவ கவுண்டர், பிரஸிடெண்டு, பஞ்சாயத்து போர்டு, கன்னிப்பட்டி		51	0	0
ஆசிரியர்களும் மாணவர்களும், சர்க்கார் ஹைஸ்கூல் சித்தூர், கோச்சின் ஸ்டேட் (ஸ்ரீ கே. எஸ். சிவலிங்கம் மூலம்)		27	2	0
ஸ்ரீ கே. ஆர். ராமமூர்த்தி, ஐ.ஏ.எப்., இந்தியா		25	0	0
ஸ்ரீ டி. கனகசபை, நூல் வியாபாரம், தேரூர், வடஆற்காடு (ஜனாப் வி. எம். உபயதுல்லா மூலம்)		25	0	0
ஸ்ரீ உம்மன், கார்ட்டூனிஸ்ட், 'கல்கி', சென்னை		25	0	0
ஸ்ரீ டி. கே. சுப்ரமணியன், இன்ஜினீரிங் சூபர்வைஸர், பெஜவாடா		20	0	0
திவான்பகதூர் ஸ்ரீ கே. எஸ். ராமசாமி சாஸ்திரியார், ரிடயர்ட் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ், ராயப்பேட்டை, சென்னை		20	0	0
ஸ்ரீ சந்திரா, சித்திரக்காரர், 'கல்கி', சென்னை		15	0	0
ஸ்ரீ வி. பெ. வெள்ளைச்சாமி நாடார், மதுனசீமா [?], இலங்கை		15	0	0
ஸ்ரீ கே. கே. வெங்கடாசலம், ஓமலூர்		15	0	0
* இதர நன்கொடைகள்	ரூ.	182	15	0
* அன்பர்கள் மூலம் வந்த நன்கொடைகள்	ரூ.	1077	14	0
ஏற்கெனவே வசூல்	ரூ.	21,738	0	5
ஆக மொத்தம்	ரூ.	24 020	15	5

* விவரம் அடுத்த இதழில் வெளி வரும்.


குழந்தை
தேகபுஷ்டிக்கும்
ஆரோக்கியத்திற்கும்
சார்லீஸ்
பிஸ்கட்ஸ்

சிவகாமியின் சபதம்

அத்தியாயம் 48

மழையும் மின்னலும்

சிவகாமிக்குச் சுய உணர்வு வந்த போது, தான் ஒரு பாறையில் சாய்ந்து கொண்டு தரையில் உட்கார்ந்திருப்பதையும், சக்கரவர்த்தி தனக்கு அருகில் உட்கார்ந்து சைத்யோபசாரம் செய்வதையும் கண்டாள். பயபக்தியுடன் சட்டென்று எழுந்திருக்க அவள் முயன்ற போது, மகேந்திரர் அவளுடைய கரத்தைப் பிடித்து உட்கார வைத்து, "வேண்டாம் அம்மா! எழுந்திருக்க வேண்டாம்!" என்று அரவணைத்துக் கூறினார்.

சற்று முன்னால் தன் காதில் விழுந்த விஷயம் உண்மைதானா, அல்லது தன்னுடைய சித்தப் பிராந்தியா என்று கேட்பவள்போல் மகேந்திர பல்லவரைச் சிவகாமி பிரமையுடன் நோக்கினாள்.

அப்போது சக்கரவர்த்தி, "குழந்தாய்! மாமல்லனிடம் உன்னுடைய அன்பு எத்தகையது என்பதைக் காட்டி விட்டாய். அவனுக்கு உன்னால் அபாயம் நேர்ந்தது என்றதும் உன் உணர்வையே இழந்து விட்டாய். இத்தகைய அன்பு நிறைந்த உன் இருதயத்தை நான் மேலும் புண்படுத்த வேண்டியவனா யிருக்கிறேன். நீ தைரியமாயிருக்க வேண்டும்......" என்றார்.

"ஐயோ! இன்னும் என்ன?" என்று சிவகாமி விம்மினாள்.

"ஆமாம்; முக்கியமான விஷயத்தை இன்னும் உனக்கு நான் சொல்லவில்லை. சிவகாமி! உன்னிடம் ஒரு வாக்குறுதி நான் கேட்கப் போகிறேன். மாமல்லனுடைய க்ஷேமத்துக்காக அதைக் கேட்கப் போகிறேன். நான் கேட்கும் வாக்குறுதியை நீ மறுக்காமல் தர வேண்டும்" என்றார் மகேந்திரர்.

சிவகாமியின் குழம்பிய உள்ளத்தின் அடிவாரத்தில் ஒரு சிறிது தெளிவு ஏற்படத் தொடங்கியது. சக்கரவர்த்தியின் பேரில் அவளுக்கு ஏற்கெனவே இருந்த சந்தேகங்கள் நினைவுக்கு வந்தன. "இவர் ஒருவேளை நம்மை ஏமாற்றி ஏதோ ஒரு சூழ்ச்சியில் அகப்படுத்தப் பார்க்கிறாரோ. என்னமோ, — கொஞ்சம் ஜாக்கிரதையா யிருக்க வேண்டும்!" என்று எண்ணினாள்.

தன்னால் மாமல்லருக்கு அபாயம் நேர்ந்ததாகச் சற்று முன் சக்கரவர்த்தி கூறியதிலகூட அவநம்பிக்கை ஏற்பட்டது. தன்னைத் தனிமைப்படுத்தி வைத்துக் கொண்டு எதற்காக இப்படியெல்லாம் இவர் பேசுகிறார்? இவருடைய நோக்கந்தான் என்ன?

தலை குனிந்த வண்ணம், "பல்லவேந்திரா! மன்னிக்க வேண்டும். தாங்கள் சொல்லுவது ஒன்றும் என் மனத்தில் பதியவில்லை...... மாமல்லருக்கு என்னால் அபாயம் நேர்ந்தது என்று சொன்னீர்களே? அது எப்படி?" என்று கேட்டாள்.

"குழந்தாய்! அதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறாயா? உன் மனதை அதிகமாக வருத்தப்படுத்த வேண்டாம் என்று அந்த நான் சொல்லவில்லை. நீயே கேட்கிறபடியால் சொல்கிறேன். சிவகாமி! காஞ்சியில் உன்னுடைய அரங்கேற்றம் நடந்த இரண்டு நாளைக்கெல்லாம் உங்கள் அரணிய வீட்டுக்கு நான் வந்தேனல்லவா? அப்போது உன் தந்தையிடம் சில விஷயங்கள் சொன்னேன். நீயும் கேட்டுக் கொண்டிருந்தாய்; அதை இப்போது மறுபடியும் உனக்கு ஞாபகப்படுத்துகிறேன். உன்னுடைய கலை தெய்விகக் கலையென்றும், அதைத் தெய்வத்துக்கே அர்ப்பணமாக்க வேண்டும் என்றும் சொன்னேன். அது உனக்கு நினைவு இருக்கிறதா?"

சிவகாமிக்கு நினைவு வந்தது. அதை இப்போது எதற்காகச் சொல்கிறார் என்று அவள் உள்ளம் சிந்தித்தது. முகத்தை நிமிர்த்தாமல் குனிந்த வண்ணம், "நினைவு வருகிறது. பிரபு!" என்றான்.

"குழந்தாய்! தெய்வத்துக்கு உரிமையாக வேண்டிய பொருளை மனிதர்களுக்கு உரிமையாக்க முயன்றால், அதனால் இங்கு வாராமல் என்ன செய்யும்? ஏதோ இந்த மட்டும் மாமல்லன் உயிர் தப்பிப் பிழைத்தது பல்லவ ராஜ்யம் செய்த பாக்கியம்தான்!" என்றார் மகேந்திரர்.

அப்போது சிவகாமி சட்டென்று தலையை நிமிர்த்தி நீர் ததும்பிய கண்களினால் சக்கரவர்த்தியை ஏறிட்டுப் பார்த்து, "பல்லவேந்திரா! தாங்கள் ஏதேதோ கூடமாகப் பேசுகிறீர்கள். நான் கல்வி கேள்வியற்றவள்; ஏழைச் சிற்பியின் மகள். என்னைச் சோதிக்க வேண்டாம்!" என்று விம்மினாள்.



மகேந்திரர் அப்போது சிவகாமியின் விரிந்த கூந்தலை அருமையுடன் தடவிக் கொடுத்து, அன்பு ததும்பும் குரலில் கூறினார்:—

"அம்மா! சிவகாமி! உன்னை நான் சோதிக்கவில்லை. உன் தந்தை ஆயனருக்கும் எனக்கும் எப்பேர்ப்பட்ட சிநேகம் என்பது உனக்குத் தெரியாதா? எங்களுக்குள் உடம்புதான் இரண்டே தவிர உயிர் ஒன்றுதான். அவருடைய மகளாகிய நீ எனக்கும் மகள்தான். உன்னை என் சொந்த மகளாகவே நான் எப்போதும் பாவித்து வந்தேன். இப்போதும் அப்படியே கருதுகிறேன். கனவிலும் உனக்குக் கெடுதல் எண்ண மாட்டேன். உன்னைக் கெடுக்க நினைக்க மாட்டேன். உன் தந்தை எப்படிச் சிற்பக் கலையில் ஈடும் இணையும் இல்லாத பெருமை வாய்ந்தவரோ, அது போல் நீயும் பரத கலையில் சிறந்து விளங்குகிறாய். சிலர் கலையைத் தேடிப் பயில்கிறார்கள்; சிலரைக் கலை தேடி வந்து தஞ்சமாக அடைந்திருக்கிறது. அந்த மாதிரி பரத கலையும் உன்னைத் தேடி வந்து தஞ்சம் அடைந்திருக்கிறது. உன்னுடைய கலைத்திறமை இன்னும் மகோந்நதத்தை யடைந்து பரத கண்டமெங்கும் உன்னுடைய புகழ் விளங்க வேண்டும் என்பது என் மனோரதம். அதற்கு வேறெதுவும் குறுக்கே நிற்கக் கூடாது. வேறு யாரும் தடையாயிருக்கக் கூடாது என்பது என் எண்ணம். அப்படிக் குறுக்கே தடையாக நிற்பவன் என்னுடைய சொந்த மகனாயிருந்த போதிலும், அந்தத் தடையை நான் நீக்க முயல்வேன்......"

சிவகாமி திடுக்கிட்டவளாய் மகேந்திர பல்லவரை மீண்டும் ஏறிட்டுப் பார்த்தாள். ஏற்கெனவே தான் சக்கரவர்த்தியிடம் கொண்ட சந்தேகம் உண்மைதான் என்று அவளுடைய மனம் எண்ணியதை முகத்தில் தோன்றிய அவநம்பிக்கை பாவம் எடுத்துக் காட்டியது.

"கொஞ்சம் பொறு, குழந்தாய்! முழுமையும் சொல்லி விடுகிறேன். பிறகு, உன் இஷ்டம்போல் தீர்மானம் செய்து கொள். சற்று முன் நான் ஏதோ கூடமாய்ப்

பேசுகிறேன் என்று கூறினாய். உண்மைதான். உன்னிடம் பச்சையாய்ச் சொல்வதற்குச் சங்கோசப்பட்டுக்கொண்டு தான் அவ்விதம் கூறினேன். நீ அறிவாளியாகையால் தெரிந்து கொள்வாய் என்று நினைத்தேன். ஆனால், தற்சமயம் உன் மனம் பல காரணங்களினால் குழம்பிப் போயிருக்கிறது. அதனால் நீ தெரிந்து கொள்ள வில்லை. எனவே, நான் சொல்ல விரும்பியதை, — உன்னுடைய நன்மைக்காகச் சொல்லவேண்டியிருப்பதை,—பச்சையாகவே சொல்லி விடுகிறேன். அதனால் உன் மனத்திற்கு வருத்தம் நேர்ந்தால், என்னை மன்னித்து விடு!" என்று கூறி மகேந்திர பல்லவர் ஒரு பெரு மூச்சு விட்டார். அச்சமயம் அவருடைய முகக் குறியானது மிகவும் கடினமான ஒரு காரியத்தைச் செய்வதற்கு ஆயத்தம் ஆகிறவரைப் போலக் காணப்பட்டது.

சிவகாமி மறுபடியும் தலை குனிந்து தரையைப் பார்த்த வண்ணம் இருந்தாள். ஏதோ ஒரு விபரீதத்தை எதிர் பார்த்தவள்போல் அவளுடைய இருதயம் விம்மிற்று. தொண்டை அடைத்துக் கொண்டிருந்தது. இடையிடையே இரண்டொரு சொட்டுக் கண்ணீர் பூமியில் விழுந்தது.

"சிவகாமி! கேள்! உன் தந்தை கல்லைக் கொண்டு ஜீவச் சிலைகளைச் சமைக்கிறார். அது போலவே பிரம்ம தேவன் மண்ணைக் கொண்டு பூலோகத்திலுள்ள சகல ஜீவராசிகளையும் படைக்கிறான். ஆனால் அசாதாரண அழகு படைத்த ஸ்திரீகளைப் பிரம்ம தேவன் சிருஷ்டிக்கும் போது தன்னுடைய நாலிரு கண்களிலிருந்து சொட்டும் கண்ணீரையும் மண்ணுடனே கலந்து சிருஷ்டிப்பதாகச் சொல்வதுண்டு. அப்படிப்பட்ட அசாதாரண சௌந்தரியவதிகளால் உலகத்திலே எத்தனையோ துன்பங்கள் உண்டாகுமென்று பிரம்ம தேவனுக்குத் தெரிந்த படியினால் தான் அப்படி அவன் கண்ணீர் விட்டுக் கொண்டே அவர்களைப் படைப்பானாம். குழந்தாய்! உன்னைப் படைக்கும் போதும் அவ்விதம் பிரம்ம தேவன் கண்ணீர் பெருக்கிக் கொண்டுதான் படைத்தானோ என்று நான் சில சமயம் எண்ணுவதுண்டு. அத்தகைய அற்புத சௌந்தரியம் — பூலோகத்திலே சாதாரணமாய்க் காண முடியாத அழகு — உன் மேனியில் குடிகொண்டிருக்கிறது. அது போதாதென்று, உலகிலேயே இணையற்றதான சௌந்தரியக் கலையும் உன்னிடம் சேர்ந்திருக்கிறது. நீ குழந்தையாயிருந்த வரையில் இதெல்லாம் எனக்குத் தோன்ற வில்லை. ஆயனரைப் போலவே நானும் உன்னை என் செல்வக் கண்மணியாக எண்ணி மடியில் வைத்துக் கொண்டும் தோளில் போட்டுக் கொண்டும் கொஞ்சிக் குலாவி மகிழ்ந்தேன். ஆனால் நீ யௌவனப் பிராயம் அடைந்த பிறகு, உன்னைப் பார்க்கும்போதெல்லாம் எனக்கு, 'ஐயோ! இந்தப் பெண்ணால் உலகில் விபரீதம் எதுவும் ஏற்படாமல் இருக்க வேண்டுமே!' என்ற பச்சாத்தாபம் உண்டாகும். அதற்குத் தகுந்தாற் போல் இரண்டு வருஷத்துக்கு முன்னால் விபரீதத்துக்கு அறிகுறிகள் தோன்றின. குழந்தைப் பிராயத்தில் உனக்கும் மாமல்லனுக்கும் ஏற்பட்டிருந்த குற்றமற்ற சிநேகம் திடீரென்று காதலாக மாறியதைக் கண்டேன். இந்தத் தகாத காதலை — பொருத்தமில்லாத நேயத்தை — எப்படித் தடுப்பது, உங்கள் இருவருடைய மனமும் புண்படாமல் எப்படி உங்களைப் பிரிப்பது என்று நான் யோசித்துக் கொண்டிருக்கும் போதே, இந்த மகா யுத்தம் வந்தது. நான் அவசரமாகப் போர்க்களத்துக்குப் போக வேண்டியதாயிற்று. நான் இல்லாத சமயத்தில் நீயும் மாமல்லனும் சந்திக்கக் கூடாது என்பதற்காகவே அவன் காஞ்சிக் கோட்டைக்கு வெளியே வரக் கூடாதென்று திட்டம் போட்டு விட்டுப் போனேன்......"

துடித்துக் கொண்டிருந்த சிவகாமி தன்னை யறியாத ஆத்தி



ரத்துடன் மகேந்திர பல்லவரை ஏறிட்டுப் பார்த்தாள். கண்ணீர் ததும்பிய அவளுடைய கூரிய கண்களில் தோன்றிய கோப ஜுவாலையானது. சோவென்று மழை பெய்து கொண்டிருக்கும் போது இருண்ட வானத்தில் பளிச்சிடும் மின்னலைப்போல் ஜொலித்தது! அதனால் ஒரு கணம் தயங்கி நின்ற சக்கரவர்த்தி பின்னர் தொடர்ந்து கூறினார் :—"சிவகாமி! உன்னையும் மாமல்லனையும் அவ்வாறு பிரித்து வைத்தபோது, அதனால் உங்களுடைய நேயம் குன்றி விடும் என்ற எண்ணம் எனக்கில்லை. பெரு நெருப்பு காற்றினால் கொழுந்து விட்டுக் கிளம்புவது போல், கட்டாயப் பிரிவினால் உங்களுடைய காதல் இன்னும் ஜுவாலை விட்டு வளரும் என்பதை ஒருவாறு நான் எதிர்பார்த்தேன். எனவே, உங்களுடைய காதலைத் தடுக்கும் எண்ணத்துடன் உங்களை நான் பிரித்து வைக்கவில்லை. நான் இல்லாத சமயத்தில் மாமல்லனும் நீயும் சந்தித்தால் அதனால் வேறு பெரும் அபாயம் நேரும் என்று என்னுடைய உள்ளுணர்ச்சி சொல்லிற்று. புதையலைப் பூதம் காக்கிறது என்றும், ஜீவரத்தினத்தை நாக சர்ப்பம் காக்கிறது என்றும் சொல்வார்களே, — அதுபோல, கலைப் பொக்கிஷமாகிய உன்னைக் காப்பாற்றுவதற்கோ அல்லது கபளீகரம் செய்வதற்குத்தானோ, — ஏதோ ஒரு மாய சக்தி உன்னைத் தொடர்வதாக எனக்குத் தோன்றியது. அதனால்தான் மாமல்லன் உன்னை நெருங்க முடியாதபடி நான் செய்துவிட்டுப் போனேன். நான் எதிர்பார்த்தபடிதான் ஆயிற்று. உங்களைப் பிரித்து வைத்ததினால் உங்கள் காதல் குன்றவில்லை; கொழுந்து விட்டுத்தான் வளர்ந்தது. இதை மாமல்லன் உனக்கு எழுதிய ஓலைகளினால் அறிந்தேன்......"

"என்ன?" என்று சிவகாமி அளவில்லாத வியப்புடனும் அருவருப்புடனும் சக்கரவர்த்தியை நோக்கினாள்.

"ஆம்; சிவகாமி! மாமல்லன் உனக்கு எழுதிய ஓலைகள்—நீ மரப் பொந்தில் பத்திரப்படுத்தியிருந்த ஓலைகள் — என்னிடம்தான் வந்து சேர்ந்தன. அவ்வளவு நீசத்தனமான காரியத்தை நான் செய்ய வேண்டியிருந்தது. எல்லாம் இந்தப் பல்லவ இராஜ்யத்துக்காகத்தான். சிவகாமி! சாதாரண மனிதர்களுக்குத் தர்மம் வேறு; அரச குலத்தினருக்குத் தர்மம் வேறு. உன் தந்தையைக் கேட்டால் சொல்வார். மாமல்லன் ஒரு வியாபாரியின் மகளாகவோ, ஒரு சிற்பியின் மகளாகவோ, ஒரு சாதாரணப் போர் வீரன் மகளாகவோ இருந்தால், அவனுக்கும் உனக்கும் நடுவில் நான் ஒரு நாளும் நிற்க மாட்டேன். உங்களுடைய தெய்விகமான காதலைக் கண்டு நான் எத்தனையோ களிக் கூத்தாடுவேன். ஆகா! மாமல்லன் உனக்கு எழுதிய ஓலைகளிலே எந்த மாதிரி கவிதையைப் பொழிந்திருக்கிறான்! மூழ்ந்தாய்! என் மகனை மகா வீரன் என்று மட்டுமே எண்ணியிருந்தேன்; அவன் ஒரு மகா கவி என்றும் உனக்கு எழுதிய ஓலைகளின் மூலம் தெரிந்து கொண்டேன். ஆனாலும், என்ன செய்யட்டும்! இராஜ்யத்தின் நன்மைக்காக உங்கள் இருவரையும் பிரித்து வைக்கும் கடமை எனக்கு ஏற்பட்டது......"

சிவகாமிக்கு அப்போது எங்கிருந்தோ அசாத்தியமான தைரியம் பிறந்தது. முகபாவத்திலும், குரலிலும் நிகரிலாத கர்வம் தோன்ற, "பிரபு! எங்களை நீங்கள் பிரித்து வைக்கப் பார்த்தீர்கள். ஆனால் பூலோக சக்கரவர்த்திகளைக் காட்டிலும் அதிக சக்தி வாய்ந்த விதியானது எங்கள் பக்கம் இருந்தது. ஏரி உடைப்பையும் வெள்ளத்தையும் அனுப்பி எங்களை இந்த கிராமத்தில் சேர்த்து வைத்தது!" என்றாள்.

"ஆம், சிவகாமி! உங்களைச் சேர்த்து வைத்த அதே விதி நான் செய்த ஏற்பாடு எவ்வளவு அவசியமானது என்பதையும் எடுத்துக் காட்டியது. இந்தக் கத்தியே அதற்கு அத்தாட்சி!" என்று மகேந்திர பல்லவர் மீண்டும் அந்த விஷக் கத்தியை எடுத்துக் காட்டினார்.

அத்தியாயம் 49

மகேந்திர பல்லவர் தோல்வி

சிவகாமி வெருண்ட கண்களுடன் அந்த நாகப்பிடி அமைந்த கத்தியைப் பார்த்தாள். குரல் நடுங்க, நாத் தழு தழுக்க, விசித்திர சித்தரைப் பார்த்துக் கூறினாள் :—

"பல்லவேந்திரா! எந்தப் பாவியின் கரம் இந்த விஷக்கத்தியைப் பிடித்து மாமல்லருடைய முதுகில் செலுத்த யத்தனித்தது? கிருபை கூர்ந்து அதைச் சொல்லுங்கள். என்னால் இது நேர்ந்ததாயிருக்கும் பட்சத்தில் ......" என்று மேலும் அவள் பேசுவதற்குள், சக்கரவர்த்தி குறுக்கிட்டார். "சபதம் ஒன்றும் செய்ய வேண்டாம், சிவகாமி! இது உன்னால் நேர்ந்ததுதான். ஆனால் நீ அறியாமல் நேர்ந்தது. இந்தக் கத்தி யாருடையதாயிருக்கும் என்று உனக்கு ஒன்றும் தெரியவில்லையா?" என்று கேட்டார்.

"இல்லையே! இம்மாதிரி கத்தியை நான் பார்த்ததே யில்லை, பிரபு!"

"பெயரிலேயே பாம்பை யுடைய மனிதர் ஒருவரை உனக்குத் தெரியாதா, அம்மா!"

"நாகநந்தி யடிகளா?" என்று சிவகாமி கேட்டபோது, அவளுடைய குரலில் வியப்பும் பயமும் ததும்பின.

"ஆம்! அவரே தான்!"

"ஐயோ! அவர் எதற்காக மாமல்லரை......நம்ப முடிய வில்லையே?"

"ஏன், அம்மா, நம்ப முடியவில்லை? இதை விட அதிசயமான பயங்கரமான துவேஷங்களை உலகத்திலே கேட்டதில்லையா?"

"நாகநந்தி எதற்காக மாமல்லரைத் துவேஷிக்கிறார்? எதற்காக இந்தக் கத்தியினால்......ஐயோ! காவித் துணி தரித்த புத்த பிக்ஷு!......"

"சிவகாமி! புத்த பிக்ஷுவா யிருந்தாலென்ன? ஸ்திரீ சௌந்தரியத்தினால் புத்த பிக்ஷுவின் மனம் கெட்டுப் போகாதா? விசுவாமித்திரருடைய கடுந்தவத்தையே மேனகையின் சௌந்தரியம் கலைத்து விட்டதே! புத்த சங்கங்கள் சீர்கெட்டிருக்கும் இந்த நாளில்......"

"பிரபு! என்ன சொல்கிறீர்கள்? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே? நாகநந்தி எதற்காக மாமல்லரை இந்த விஷக் கத்தியினால் கொல்லப் பார்த்தார்?"

"உன்னுடைய சௌந்தரியமாகிய விஷம் பிக்ஷுவின் தலைக்கேறியதனால் தான், அம்மா! வேறு என்ன இருக்க முடியும்? புத்த பிக்ஷுவின் கடின மனத்தையும உன் மேனி அழகு கவர்ந்தது. மாமல்லனுடைய கோமள இருதயத்தையும் கவர்ந்தது. ஆனால் நீ உனது தூய உள்ளத்தை மாமல்லனுக்கே கொடுத்தாய். பிக்ஷுவின் துவேஷத்துக்கு அதுதான் காரணம். ஒருவாறு இதை எதிர்பார்த்துத்தான் மாமல்லனை நான் கோட்டையிலேயே இருக்கச் சொல்லி விட்டுப் போனேன். அவன் வெளியிலே புறப்பட்டதும் இது நேர்ந்து விட்டது. இந்தப் பாறையில் நீயும் மாமல்லனும் நேற்று இரவு இருதய பரிபாஷை பேசிக்கொண்டிருந்த போது, இந்த பாறைக்குப் பின்னால் புத்த பிக்ஷு கையில் இந்தக் கத்தியுடன் ஒளிந்திருந்தார். கிராமத்துக் கோயில் வரையில் உங்களைப் பின் தொடர்ந்து வந்தார். கடவுளின் அருளும், குண்டோதரனுடைய சர்வ ஜாக்கிரதையும் சேர்ந்துதான் மாமல்லனை நேற்றுக் காப்பாற்றியது......"

"குண்டோதரனா காப்பாற்றினான்? எப்படி, பிரபு!"

"உங்களுக்கும் பிக்ஷுவுக்கும் தெரியாமல் குண்டோதரன உங்களைப் பின் தொடர்ந்து வந்தான். பிக்ஷு கோயில் மதில் மேல் ஏறிக் குதித்தபோது இந்தக் கத்தி தவறிக் கீழே விழுந்தது. அதை அவன் எடுத்துக் கொண்டான். பிக்ஷுவை நள்ளிரவில் கோயில் மடைப்பள்ளியில் விட்டுக் கதவைத் தாளிட்டுக் கொண்டு வந்து எங்களிடம் சொன்னான். நாங்கள் வந்து

பார்ப்பதற்குள் பிக்ஷு மடைப்பள்ளியிலிருந்து மாயமாகி விட்டார்..."

இவ்விதம் மகேந்திர பல்லவர் சொல்லி வந்தபோது சிவகாமியின் முகத்தில் ஏற்பட்ட அதிசயமான மாறுதல்களையெல்லாம் அவர் கவனிக்காமல் இல்லை.

உண்மையில், நாகநந்தியைப் பற்றிப் பேச்சு வந்ததிலிருந்து, சிவகாமியின் பாதி மனம் இங்கேயும் பாதி மனம் மடத்திலேயும் இருந்தது. மடத்து உள் அறையில் தூண் மறைவில் நாகநந்தி நின்ற தோற்றம் அவள் மனக் கண் முன் வந்து கொண்டேயிருந்தது.

இன்னும் பிக்ஷு அங்கேயே இருப்பாரா? இருந்தால், சக்கரவர்த்தி கையிலுள்ள கத்தியை வாங்கிக் கொண்டுபோய் அவரைத் தன் கையாலேயே கொல்ல வேண்டும் என்று சிவகாமிக்குத் தோன்றியது.

"பல்லவேந்திரா! அப்பா எங்கே? நான் மடத்துக்குப் போகிறேன்!" என்று சிவகாமி ஆக்ரோஷத்துடன் எழுந்தாள்.

"தாயே! என் கோரிக்கையை இன்னும் நீ கேட்கவே இல்லையே? நான் கோரி வந்த வரத்தைக் கொடுக்கவில்லையே?"

"பிரபு! இப்படியெல்லாம் பேசி ஏன் என்னை வதைக்கிறீர்கள்? சிற்பியின் மகளுக்குக் கட்டளையிடுங்கள்!"

"கட்டளை இல்லை, அம்மா! நிச்சயமாகக் கட்டளை இல்லை. உன்னிடம் வரம் தான் கோருகிறேன். அதுவும் எனக்காகக் கோரவில்லை. பல்லவ சாம்ராஜ்யத்துக்காகக் கோருகிறேன். இந்த சாம்ராஜ்யத்தைப் பெரும் விபத்திலிருந்து காப்பாற்றும் சக்தி இப்போது உன் கையில் இருக்கிறது!"

"நான் என்ன செய்ய வேண்டும்?"

"மாமல்லனுக்கு ஒரு ஓலை எழுதித் தரவேண்டும்!"

"என்ன ஓலை?" என்று சிவகாமி திகிலுடன் கேட்டாள்.

"மாமல்லனை விடுதலை செய்வதாக எழுத வேண்டும். உன்னை மறந்து விடும்படி எழுத வேண்டும்."

"பிரபு! இந்த ஏழைப் பெண்ணை ஏன் இப்படிச் சோதனை செய்கிறீர்கள்? மாமல்லரையாவது நான் விடுதலை செய்யவாவது? என்னை மறக்கும்படி அவருக்கு நான் எப்படி எழுது



வேன்? நான் சம்மதித்தாலும் இந்தக் கை சம்மதியாது, சுவாமி!"

"சிவகாமி! என் சிநேகிதரின் மகள், பழந்தமிழ் நாட்டு வீர மகளிரை யொத்தவள் என்று எண்ணினேன். இராஜ்யத்தின் நன்மைக்காகவும் உன் காதலன் நன்மைக்காகவும் இந்தத் தியாகத்தைச் செய்வாய் என்று கருதினேன். என் ஆசை பாழாயிற்று!"

"பல்லவேந்திரா! இராஜ்யத்திற்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? என்னை மறப்பதினால் மாமல்லருக்கு என்ன நன்மை?"

"சிவகாமி! காஞ்சிக்கு மூன்று காத தூரத்தில் வாதாபியின் படைகள் வந்திருக்கின்றன. ஆயினும் நான் இங்கே உன்னுடன் வாதாடிக் கொண்டிருக்கிறேன். இதிலிருந்தே என்னுடைய கோரிக்கை எவ்வளவு முக்கியமானதென்று உனக்குத் தெரியவில்லையா? உண்மையை இன்னும் பட்டவர்த்தனமாகச் சொல்கிறேன். கேள்! வாதாபி



யின் சமுத்திரம் போன்ற சைன்யங்களை எதிர்த்து நிற்பதற்கு வேண்டிய படை பலம் இப்போது பல்லவ ராஜ்யத்துக்கு இல்லை. இந்த நிலைமையில் தெற்கேயிருந்து பாண்டியனுடைய பெரும் படையும் பல்லவ ராஜ்யத்தைத் தாக்க வருகிறது. நீ மனம் வைத்து என் கோரிக்கையை நிறைவேற்றினால், பாண்டிய சைன்யம் பல்லவ சைன்யத்துடன் சேர்ந்துவிடும். இரண்டும் சேர்ந்தால் வாதாபிப் படைகளை ஒருவாறு வெற்றி கொள்ளலாம். சிவகாமி! பல்லவ ராஜ்யத்துக்கு இந்த உதவியை நீ செய்வாயா?"

"எனக்கும் பாண்டியர் படையெடுப்புக்கும் என்ன சம்பந்தம், பிரபு?"

"உன் மனத்தைப் புண்படுத்த வேண்டாம் என்று பார்த்தால், நீ விடமாட்டேன் என்கிறாய். பச்சையாகச் சொல்லுகிறேன். சிவகாமி! பாண்டிய ராஜகுமாரியை மாமல்லனுக்குக் கலியாணம் செய்து கொள்ளுமாறு தூது அனுப்பினார்கள். அதற்கு மாமல்லன் இணங்காதபடியால்தான் பாண்டியர் சைன்யம் நம்மீது படையெடுத்து வருகிறது. கலியாணம் செய்து கொள்வதாகச் சம்மதம் தெரிவிக்க வேண்டியதுதான்; உடனே பாண்டிய சைன்யம் நம்முடன் சேர்ந்துவிடும். நீ மாமல்லனுக்கு விடுதலை கொடுத்தால், அவனை இதற்கு இணங்கச் செய்வேன். என்ன சொல்கிறாய், தாயே! பல்லவ ராஜ்யத்துக்கு உயிர்ப்பிச்சை அளிப்பாயா? மாமல்லனுக்கு ஓலை எழுதிக் கொடுப்பாயா?"

சிவகாமி பூமியில் சட்டென்று உட்கார்ந்து, "மாட்டேன், மாட்டேன்! என்னால் முடியாது!" என்று அலறினாள். பின்னர், விம்மிக் கொண்டே, "பல்லவேந்திரா! உங்களுடைய கையிலுள்ள விஷக் கத்தியை என் மார்பிலே பாய்ச்சிக் கொன்று விடுங்கள். தங்கள் குமாரருக்கு விடுதலை கிடைத்துவிடும். பல்லவ ராஜ்யமும் காப்பாற்றப்படும். ஒரு பெரிய ராஜ்யத்தைக் காப்பதற்காக ஒரு அபலைப் பெண்ணைக் கொன்றால் என்ன? பிரபு! கத்தியை எடுங்கள். தங்களுக்குத் தைரியமில்லாவிட்டால் கத்தியை இங்கே கொடுங்கள்! நானே என் மார்பில் செலுத்திக் கொள்கிறேன்" என்றாள்.



"சிவகாமி! நீ ஜயித்தாய்! நான் தோற்றேன்!" என்றார் மகேந்திரர்.

• • •

பாறையடியில் மேலே கூறிய சம்பாஷணை நடந்து ஒரு நாழிகைக்குப் பிறகு சிவகாமியும் ஆயனரும் மண்டபப்பட்டுக் கிராமத்தை யடைந்தார்கள். மடத்து வாசலை அணுகியதும் சிவகாமி மிகவும் பரபரப்புடன் முதலில் பிரவேசித்து உள் அறையில் சென்று பார்த்தாள். தூண் மறைவில் பிக்ஷுவைக் காணவில்லை. மடத்திற்குள் வேறு எங்கும் காணவில்லை.

ஏதோ ஒரு சந்தேகம் உதிக்கவே, அவசரமாகச் சென்று தனது ஆடை ஆபரணப் பெட்டியைத் திறந்து பார்த்தாள். கையினால் துளாவிப் பார்த்தாள். ஆடை ஆபரணங்களை யெல்லாம் எடுத்து உதறிப் பார்த்தாள்.

சக்கரவர்த்தி கொடுத்த சிங்க முத்திரையுள்ள இலச்சினையைக் காணவில்லை!

• • •

அதே சமயத்தில் வராக நதிக் கரையில் ரத சாரதி கண்ணபிரானிடம் புத்த பிக்ஷு மேற்படி சிங்க இலச்சினையைக் காட்டிக்கொண்டிருந்தார். காட்டி, தன்னை அவனுடைய ரதத்தில் காஞ்சிமா நகருக்கு விரைவாக அழைத்துப் போகும்படி கட்டளையிட்டார். கண்ணபிரான் தயக்கத்துடன் அந்தக் கட்டளையை ஒப்புக்கொண்டு, பிக்ஷுவை ரதத்தில் ஏறும்படி கூறினான்.

இதையெல்லாம் சற்றுத் தூரத்தில் மரங்களின் மறைவில் நின்று சக்கரவர்த்தியும் சத்ருக்னனும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். சத்ருக்னன் பாய்ந்து சென்று கண்ணபிரானைத் தடுப்பதற்கு யத்தனித்தபோது, சக்கரவர்த்தி அவனுக்குச் சமிக்ஞை செய்து நிறுத்தினார்.

பிக்ஷு ரதத்தில் ஏறுவதையும், கண்ணபிரான் வேண்டா வெறுப்பாகக் குதிரைகளைத் தட்டி விடுவதையும், வீரர்கள் ரதத்தைத் தொடர்ந்து செல்வதையும் இருவரும் பார்த்துக் கொண்டு சும்மா நின்றார்கள்.

சத்ருக்னனுடைய முகத்தில் கோபம் கொதித்தது. சக்கரவர்த்தியின் முகத்திலோ பொருள் கண்டு பிடிக்க முடியாத புன்னகை தவழ்ந்தது.


பிரயாணக் கதை 8
அப்பாடா! வந்துவிட்டோம். ஆனால் ரயில் பிரயாணம் ரொம்ப மோசம். இப்பொழுது என் பர்ஸ் போய்விட்டது. கொண்டுவந்த பாக்கடையையும் யாரோ கொண்டுபோய்விட்டார்கள்.
என்ன கஷ்டம் உங்களுக்கு! எனக்குச் சொல்லாமல் சந்திரா எழுதிவிட்டாளே. இப்பொழுதெல்லாம் ரயில் பிரயாணம் ரொம்ப கஷ்டந்தான்.
ஊர் சேர்ந்தவுடன் அவர்களுக்கு நேர்ந்த கஷ்டங்களையெல்லாம் சொல்லுகிறார்கள்.
நாராயணனும் வந்தவர்கள் பட்ட கஷ்டங்களையெல்லாம் தெரிய அவருக்கு ரயில் பிரயாணத்தில் தொந்தரவுகள் எவ்வளவு என்பது தெரியும்.
அது ரயில்வேக்களின் தப்பல்ல. முன்னைவிட இரண்டத்தனை ஜனங்கள் பிரயாணம் செய்கிறார்கள். இப்பொழுது பண்டங்களும் குறைந்துவிட்டன.
ஆமாம், நீங்கள் சொல்வது சரி. எல்லாப் பொருள்களின் விலைகளும் உயர்ந்துவிட்டன. இந்தப் பிரயாணச்செலவு இதுவரைக்கும் ரூ. 34 ஆகிவிட்டது. வீட்டிலேயே தங்கிவிட்டு இந்த ரூபாயைப் பரிசாக அனுப்பியிருந்தால் நன்றாக இருந்திருக்குமே.
அவசியமான பொருள்களை அனுப்ப முதலாவது இடம் அளிக்க வேண்டும். ஆகையால் இன்று பிரயாணம் செய்வது சங்கடமாக இருக்கிறது.
வீண் பிரயாணம் செய்யாதீர்கள்
RAA 853 TM

பிரமையும் பிரமோகமும்

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

திரிகர்த்தாதிபதி சுசர்மனை ஜயித்து விட்டு விராடராஜன் தன் நகரத்துக்குத் திரும்பினான். ஊர் ஜனங்கள் அவனை ஜெய கோஷங்களுடன் எதிர்கொண்டு வரவேற்றார்கள். அரசன் அந்தப்புரத்தில் உத்தரனைக் காணாமல், "உத்தரன் எங்கே?" என்று கேட்க அங்குள்ள ஸ்திரீகளும் மற்றவர்களும் அவன் கௌரவர்களை ஜெயிக்கப் போயிருக்கிறான் என்று மிக்க உச்சாகத்துடன் சொன்னார்கள். தங்கள் ராஜகுமாரன் உலகத்தையே ஜெயித்து விடுவான் என்பது அவர்கள் நம்பிக்கை. ஆகையால் அதைப்பற்றி அவர்கள் கவலையில்லாமல் விராடனிடம் பேசினார்கள். அரசன் திடுக்கிட்டு என்ன நடந்தது என்று விசாரித்தான். முழு விவரம் தெரிந்தவுடன் மிகுந்த பயமும் வருத்தமும் அடைந்தான்.

"நபும்ஸகன் ஒருவனைத் துணையாகக் கொண்டு ஆபத்தான காரியத்தில் பிரவேசித்து விட்டான். என் அருமைப் புத்திரன் இதற்குள் இறந்தே போயிருப்பான்: சந்தேகமில்லை" என்று சொல்லித் துக்கத்தில் மூழ்கினான்.

பிறகு மந்திரிகளை அழைத்து "சேனையைத் திரட்டுங்கள். உத்தரன் உயிரோடு இருந்தால் சென்று அவனை எப்படியாவது காப்பாற்றிக் கொண்டு திரும்புங்கள்" என்று உத்தரவிட்டான்.

மிக வேகமாக ஒரு படையை முதலில் அனுப்பி உத்தரன் கதியை அறிந்து வரவும் கட்டளையிட்டான்.

தருமபுத்திரனான கங்க சந்நியாசி விராடனைத் தேற்றப் பார்த்தார். "ராஜகுமாரனைப் பற்றி நீர் கவலைப்பட வேண்டாம். பிருகன்னளை சாரதியாகப் போயிருக்கிறான். அவனைப் பற்றி உமக்குத் தெரியாது, எனக்குத் தெரியும். அவன் சாரதியாக ஓட்டிய தேரில் நின்று யுத்தம் செய்யும் எவனும் நிச்சயமாக வெற்றி பெறுவான். சுசர்மன் தோல்வியடைந்தான் என்கிற செய்தியும் இதற்குள் அங்கே எட்டியிருக்கும். கௌரவர்கள் திரும்பி ஓட்டம் பிடிப்பார்கள்" என்று சொல்லித் தேற்றினார்.

இதற்குள் உத்தரனால் அனுப்பப்பட்ட தூதர்கள் வந்து சேர்ந்தார்கள். "உத்தரன் ஜெயித்தான். கௌரவசேனை சிதறியடிக்கப்பட்டது. பசுக்கள் மீட்கப்பட்டன" என்று தூதர்கள் சொன்னது விராடனுக்கு வியப்பாக இருந்தது. அவன் நம்பவேயில்லை.

"அரசனே! சந்தேகப்பட வேண்டாம். தூதர்கள் சொல்லுவது உண்மையாகவே இருக்க வேண்டும். பிருகன்னளை சாரதியாகப் போனபின் வெற்றியைப் பற்றிச் சந்தேகமே இல்லை. உம்முடைய குமாரன் ஜெயித்துவிட்டதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. தேவேந்திரனுடைய சாரதியும் கிருஷ்ணனுடைய சாரதியும் யாருமே பிருகன்னளைக்குச் சமானமாக மாட்டார்கள் என்பது எனக்குத் தெரியும்" என்று யுதிஷ்டிரன் அரசனுக்குச் சொன்னான்.

தூதர்கள் கொண்டு வந்த வெற்றிச் செய்தியைக் கேட்ட விராடன் மகிழ்ச்சி சாகரத்தில் மூழ்கினான். தூதர்களுக்கு ரத்தினங்களும் தனமும் ஏராளமாக வெகுமதி யளித்தான்.

"ஊரை அலங்கரியுங்கள், நான் சுசர்மனை வென்றது பெரிதல்ல. ராஜகுமாரனுடைய வெற்றியே வெற்றி. எல்லா ஆலயங்களிலும் அர்ச்சனை செய்யக் கட்டளையனுப்புங்கள். ராஜ வீதிகளில் கொடிகள் கட்டி மங்கள வாத்தியம் கோஷிக்கச் செய்யுங்கள். என் இளஞ்சிங்கத்தைத் தக்க முறையில் எதிர்கொண்டு வரவேற்க எல்லா ஏற்பாடுகளும் செய்யுங்கள்" என்றான்.

இவ்வாறு வெற்றியுடன் திரும்பி வரும் குமாரனை எதிர்கொண்டு அழைத்துவர மந்திரிகளையும் சேனையையும் கன்னிப்





பெண்களையும் அனுப்பிவிட்டு, விராடன் அந்தப்புரம் சென்று "ஸைரந்திரி, பாச்சிகைகள் கொண்டுவா! கங்கரே! என் சந்தோஷத்தைப் பொறுக்க முடியவில்லை. விளையாடுவோம் வாரும்" என்று சொல்லி அவனும் யுதிஷ்டிரனும் விளையாட உட்கார்ந்தார்கள்.

ஆடும்போது பேச்சும் நடந்தது. "பார்த்தீரா என் குமாரன் பூமிஞ்சயனுடைய சௌரியத்தை? புகழ்பெற்ற கௌரவ வீரர்களைத் துரத்தியடித்தான்" என்றான் விராடன்.

"ஆம். உம் குமாரன் பாக்யசாலி. அப்படியில்லாவிட்டால் பிருகன்னளை அவனுக்குத் தேர் ஓட்ட அமைந்திருப்பாளா? ராஜகுமாரன் அதிருஷ்டசாலி என்பதில் சந்தேகமில்லை" என்றான் யுதிஷ்டிரன்.

"என்ன நீர் நபும்ஸகனைப் பற்றியே திரும்பத் திரும்ப உளறுகிறீர்! என் குமாரனுடைய ஜெயத்தைப் பற்றி நான் பேசும் போது இந்த அலியின் சாமர்த்தியத்தை ஒரு பெரிய விஷயமாகச் சொல்லுகிறீர்" என்று விராடன் கோபமாகச் சொன்னான்.

"அப்படிச் சொல்லலாகாது. பிருகன்னளை சாதாரணமானவளல்ல. அவள் ஓட்டிய தேர் ஒரு நாளும் தோற்காது. அவள் நடத்தும் தேரில் நின்றவன் எதையும் செய்து முடிப்பான்" என்று திரும்பவும் கங்கர் சொல்ல அரசனுடைய கோபம் அதிகரித்தது.

"ஓய் பிராமணரே! இம்மாதிரி பேசாதேயும்" என்று சொல்லி விராடன் ஆட்டத்துக் காயை எடுத்து யுதிஷ்டிரன் முகத்தில் எறிந்து கையை ஓங்கி விரித்துக் கன்னத்தில் ஒரு அடி அடித்தான். யுதிஷ்டிரனுக்குக் காயமுண்டாகி ரத்தம் பெருக ஆரம்பித்தது.

உடனே பக்கத்தில் இருந்த ஸைரந்திரி தன் மெல்லிய உத்தரியத்தைக் கொண்டு காயத்தைத் துடைத்தாள். வஸ்திரம் நனைந்து போக அதை ஒரு பொன் கிண்ணத்தை எடுத்து அதில் பிழிந்தாள்.

"இது என்ன வேலை? ரத்தத்தை ஏன் கிண்ணத்தில் பிழிகிறாய்?" என்று கேட்டான் இன்னும் கோபம் ஆறாத விராடன்.

"அரசனே! சந்நியாசியின் ரத்தம் கீழே விழலாகாது. விழுந்தால் அந்த ரத்தத்தில் எத்தனை பிந்துக்கள் உண்டோ அத்தனை வருஷங்கள் உம்முடைய ராஜ்யத்தில் மழை இல்லாமல் போகும். அதனால் இவ்வாறு கிண்ணத்தில் பிழிந்தேன். கங்கருடைய மேன்மை உமக்குத் தெரியாது" என்றாள்.

இதற்குள் வாயில் காப்போன் வந்து "உத்தரனும் சாரதி பிருகன்னளையும் வந்திருக்கிறார்கள். அரசனைப் பார்க்க விரும்பி வாயிலில் ராஜகுமாரன் நிற்கிறான்" என்று சொன்னவுடனும் விராடன் பரபரப்புடன் எழுந்து "வரச் சொல்! வரச் சொல்" என்றான்.

யுதிஷ்டிரன் மெதுவாக த்வாரபாலகனிடம் "உத்தரன் ஒருவன் மட்டும் வரட்டும். பிருகன்னளை வரவேண்டாம்" என்று ரகசியமாகச் சொல்லியனுப்பினான்.

தன் முகத்தில் உண்டான காயத்தை அர்ஜுனன் பார்த்தால் கோபம் தாங்க மாட்டான். யுத்தத்தில் பட்ட காயங்களைப் பற்றி லட்சியம் செய்யவே மாட்டான். ஆனால் மற்ற விதமாக ஒருவன் தருமபுத்திரனுக்குச் செய்த அபராதத்தைப் பொறுக்கவே மாட்டான். ஏதாவது விபரீதம் நேரிடும் என்று யுதிஷ்டிரன் இவ்வாறு செய்தான்.

உத்தரன் உள்ளே வந்ததும் விராடனை நமஸ்கரித்து, கங்கனையும் வணங்கப் போனான். அப்போது, அவர் முகத்தில்

ரத்தப் பெருக்கைப் பார்த்துத் திகைத்தான். உத்தரனுக்குக் கங்கன் யுதிஷ்டிர மகாராஜா என்பது தெரியுமல்லவா?

"அரசனே! இந்த மகானை யார் உபத்திரவம் செய்தது? இது பெரும் விபத்துக்குக் காரணம் ஆகும்!" என்றான்.

விராடன் அப்போது மகனைப் பார்த்து "புத்திரனே! உன் வெற்றியைக் கேட்டு மகிழ்ந்து நான் உன்னைப் பற்றிப் புகழ்ந்து பேசியபோது இந்த பிராமணர் உனக்குத் தேரோட்டிய நபும்ஸகனைப் புகழ்ந்து உன் ஜெயத்தையும் வீரியத்தையும் குறைத்துப் பேசினார். அதை என்னால் பொறுக்க முடியவில்லை. இவர் அகுயைக்காரர். அவரை நான் அடித்துவிட்டேன். இதைப்பற்றி என்ன?" என்றான்.

"ஐயோ! பெரும் பிழை செய்து விட்டீர்! உடனே அவர் காலில் விழுந்து வணங்கி க்ஷமிக்கும்படி கேட்டு அவர் மன்னிப்பை அடையவேண்டும். இல்லாவிடில் நம்முடைய குலம் வேரோடு அழிந்து போகும்" என்று உத்தரன் பயமும் வருத்தமும் மேலிட்டுத் தகப்பனைக் கேட்டுக் கொண்டான்.

விராடனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. மனக் குழப்பமுற்று ஒன்றும் செய்யத் தோன்றாதவனாய் நின்றான்.

உத்தரன் மறுபடியும் மிகவும் வருந்தி வேண்ட விராடன் யுதிஷ்டிரனை வணங்கிப் பொறுத்தருள வேண்டும் என்று கேட்டுக் கொண்டான்.

பிறகு "அப்பனே! நீயல்லவோ வீரன்! கௌரவ சேனையை எவ்வாறு வென்றாய்? பசுக்களை எவ்வாறு மீட்டாய்? எல்லாம் விவரமாய்ச் சொல்லக் கேட்டு நான் மகிழ்ச்சியடைய வேண்டும். நடந்ததையெல்லாம் சொல்" என்று விராடன் மகனை ஆலிங்கனம் செய்து உட்காரச் செய்து நடந்ததையெல்லாம்சொல்லச் சொன்னான்.

உத்தரன் "மகாராஜாவே! நான் எந்தச் சேனையையும் ஜெயிக்கவில்லை. எந்தப் பசுக்களும் என்னால் மீட்கப்படவில்லை. எல்லாக் காரியத்தையும் ஒரு தேவகுமாரன் செய்தான். அவனே என்னைக் காப்பாற்றியது. அவனே கௌரவப் படையைச் சிதறியடித்தது. அந்த வீரனே பசுக்களை மீட்டது. நான் ஒன்றும் செய்யவில்லை" என்றான்.

"அந்த வீரன் எங்கே? அவனைக் கூப்பிடு. என் மகனை யமன் வாயிலிருந்து காப்பாற்றித் தந்த அந்த வீரனை நான் என் கண்களால் பார்த்து மகிழவேண்டும். என்னுடைய மகள் உத்தரையை அவனுக்குத் தருவேன். நான் அவனைப் பூஜிக்க வேண்டும். அவனை அழைத்துவா" என்றான் அரசன்.

"அந்த தேவகுமாரன் மறைந்து விட்டான்! ஆனால் அவன் இன்றோ நாளையோ வருவான் என்று எண்ணுகிறேன்" என்று சொன்னான் ராஜகுமாரன்.

விராடனுடைய ராஜசபை கூடிற்று. அரசனும் அரசகுமாரனும் அடைந்த வெற்றிகளைப் பாராட்ட நகரத்துப் பிரமுகர்கள் எல்லாரும் வந்து கூடி ஆசனங்களில் அமர்ந்தார்கள். விராடனுடைய ஜெயத்திற்குக் காரணமாகிய கங்கன், சமயற்கார வலலன், பிருகன்னளை, தந்திரிபாலன், தாமக்கிரந்தி இவர்களும் சபைக்கு வந்தார்கள். ராஜகுமாரர்களுக்கென்று அமைக்கப்பட்ட சிம்மாசனங்களில் அவர்கள் உட்கார்ந்தார்கள்.

அரமனைக் குற்றேவலில் அமைக்கப்பட்ட இவர்கள் அரசன் சொல்லித்தான் இவ்வாறு சிம்மாசனங்களில் உட்காரத் துணிந்தார்கள் என்று அனைவரும் எண்ணினார்கள். ஆபத்தான காலத்தில் அரசனுக்கு அவர்கள் செய்த பேருதவியும் வீரச் செயல்களும் இதற்குக் காரணமாயிருக்கும்; அந்த வீரர்களை அவ்வாறு கௌரவிப்பது சகஜம் என்றும் சரியே என்றும் நினைத்தார்கள்.



விராடராஜன் சபையில் பிரவேசித்தான். சந்நியாசிகளும் சமயல்காரனும் குதிரைக்காரனும் மாட்டுக்காரனும் ராஜகுமாரர்கள் உட்கார வேண்டிய ஆசனங்களில் சுகமாக உட்கார்ந்திருப்ப

தைப் பார்த்து மறுபடியும் கோபாவேசமானான். கொஞ்ச நேரம் வாக்குவாதம் நடந்தது. பிறகு வேடிக்கை போதும் என்று பாண்டவர்கள் தாங்கள் யார் என்பதைச் சபைக்கு வெளிப்படுத்தினார்கள். அனைவரும் வியப்பிலும் மகிழ்ச்சியிலும் பரவச மடைந்தார்கள்.

பாண்டவர்கள் ஐவரும் பாஞ்சாலியும் இவ்வளவு நாள் தான் அறியாமல் தனக்குத் தொண்டு செய்து கொண்டு அரமனைச் சேவகர்களாக இருந்ததையும் தனக்கும் உத்தரனுக்கும் அவர்கள் செய்த பேருபகாரத்தையும் எண்ணி எண்ணி விராடன் மனம் பூரித்து "இதற்கு நான் என்ன கைம்மாறு செய்ய முடியும்?" என்று கங்கரைப் பன்முறை ஆலிங்கனம் செய்தான்.

தன் ராஜ்யம் முழுவதையும் யுதிஷ்டிரனுக்குக் கொடுத்து மறுபடி அவனிடமிருந்து பெற்றுக் கொண்டான். தன் மகள் உத்தரையை அருச்சுனனுக்குக் கன்னிகாதானம் செய்தே தீர வேண்டுமென்றும் சொன்னான்.

அருச்சுனன், "அது தகாது. உத்தரை என்னிடத்தில் நாட்டியமும், கானமும் கற்றவள். அவளுக்கு நான் ஆசாரியனும், தகப்பனும் போலும் ஆவேன்" என்று அவளைத் தன் மகன் அபிமன்யுவுக்கு விவாகம் செய்வித்துத் தனக்கு மருமகளாக்கிக் கொள்ள அங்கீகரித்தான்.

* * *

இதன்பின் துராத்மாவும் வஞ்சகனுமான துரியோதனனிடமிருந்து தூதர்கள் வந்தார்கள்.

"குந்தி புத்திரரே! துரியோதன ராஜா உம்மிடம் எங்களை அனுப்பியிருக்கிறார். தனஞ்சயனுடைய அவசரச் செயலால் நீர் மறுபடி காட்டுக்குப் போக வேண்டியவர் ஆனீர். பதின்மூன்றாம் வருஷம் முடிவதற்குள் அவன் அறியப் பட்டான். ஆகையால் பிரதிஜ்ஞைப்படி மறுபடி பன்னிரண்டு வருஷம் வனம் செல்ல வேண்டியது" என்று தூதர்கள் யுதிஷ்டிரனிடம் சொன்னார்கள்.

தருமபுத்திரர் சிரித்துவிட்டு, "தூதர்களே! சீக்கிரமாகத் திரும்பிப் போய் துரியோதனனிடத்தில் சொல்லுங்கள். பிரதிஜ்ஞைப்படி பதின்மூன்றாவது ஆண்டு தீர்ந்ததா, இல்லையா என்பதைப் பாட்டனார் பீஷ்மரையும் சோதிடம் அறிந்தவர்களையும் கேட்டுத் தெரிந்து கொள்ளச் சொல்லுங்கள். பதின்மூன்றாவது வருஷம் பூர்த்தியான பின்னரே, தனஞ்சயனுடைய வில்லின் ஒலி சத்துருக்களை நடுங்கச் செய்தது!" என்றார்.

1944-ம் வருஷத்துக்
"கல்கி"
சிறுகதைப் போட்டி


மேற்படி சிறுகதைப் போட்டிக்கு வந்த சிறு கதைகளில் பரிசு பெற்ற ஆறு கதைகளைத் தவிர பின்வரும் கதைகள் 'கல்கி'யில் பிரசுரத்துக்காக ஏற்றுக் கொள்ளப்பட்டன. இவற்றில் முதல் நாலு கதைகள் ஏற்கெனவே "கல்கி"யில் பிரசுரமாகி விட்டன. ஐந்தாவது கதை இந்த இதழில் வெளியாகிறது. பாக்கியுள்ள கதைகள் வரப்போகும் 'கல்கி' இதழ்களில் பிரசுரமாகும்.

மற்றக் கதைகளில் தபால் தலையுடன் வந்தவைகள் பெரும்பாலும் திருப்பி யனுப்பி விடப்பட்டன; பாக்கி உள்ளவை அடுத்த வாரத்தில் திருப்பி யனுப்பப்படும்.

பிரசுரத்துக்கு எடுத்துக்கொண்ட கதைகள்

1. பெண்மனம்—ஸ்ரீமதி சசிதேவி.
2. நச்சுப்பல்—ஸ்ரீ எம். என். எம். எம். பாவலர்.
3. தெய்வ சங்கல்பம்—ஸ்ரீ சிவராம கிருஷ்ணன்.
4. காளிக் கிணறு — ஸ்ரீ அ. ராஜகோபால்.
5. புதுப்புடவை—என். பி.
6. இதய ஒளி—வி. ஆர். ஆர். மணி.
7. என் சரித்திரம்—ஸ்ரீ எஸ். ஆர். ராமானுஜம்.
8. யோக ஜாதகம்-ஸ்ரீ வி. கணேசன்.
9. சின்னம்மா—ஸ்ரீமதி செல்லம்.
10. அடுக்கு மல்லிகை — ஸ்ரீ ரா. ஸ்ரீ. சித்ராமணி.
11. கடவுள் சித்தம்—' ஆர். வி. '
12. எதிர்க் கட்சி—சுகி.
13. தேவியின் சிலை—ஸ்ரீ கே. என். கிருஷ்ணமூர்த்தி.
14. எது உண்மை?—ஸ்ரீமதி சசிதேவி.
15. என் கதை—ஸ்ரீமதி என். அலமேலு.
16. வாழ்க்கைப் புயல்—ஸ்ரீமதி கமலா தேவி.
17. வழிப்போக்கன்—அகிலன்.
18. இருளில் ஒளி—ஜி. எஸ். மணி.
19. மீனாட்சி—மாஜினி.
20. பிரத்யக்ஷ தெய்வம்—சூடாலை.
21. சௌந்தரத்தின் நாட்டுப் பெண்—ஸ்ரீமதி லக்ஷ்மி நாகராஜன்.
22. வாழ்க்கையும் கற்பனையும்—ஸ்ரீ பி. எஸ். சேஷாத்ரி.

குறிப்பு:—1945-ம் வருஷத்துக் 'கல்கி' சிறுகதைப் போட்டி பற்றிய அறிக்கை விரைவில் வெளியிடப்படும்.



இப்போது சேமிக்கப்படும் ஒவ்வொரு ரூபாயும் . . .

யுத்தம் நின்றவுடன் அதிகப் பொருள் வாங்க உதவும். இப்போதுள்ள உயர்ந்த விலையில், நாம் கொடுக்கும் தொகைக்குத் தகுந்த அளவு பொருள்கள் கிடைப்பதில்லையென்று சாதாரண அறிவு படைத்தவர்களுக்குக் கூடத் தெரியும். அன்றியும் விலைகள் குறைந்து கொண்டு வருகின்றன என்பதை நினைவில் வையுங்கள். ஒரு வருஷத்திற்கு முன்பு, துணி, உணவு தானிய வகைகள், மருந்து வகைகள் ஆகியவற்றின் விலைகளையும், இப்போது அவை விற்கும் விலைகளையும் ஒப்பிட்டுப் பாருங்கள். அறிவாளி, பணத்தைச் சேமித்தான். ஆகவே, முன்னைவிட இப்போது குறைந்த விலைக்கு வாங்கக் கூடும். இப்போது இயன்றவரை சேமித்து சமாதானம் மீண்டும் ஏற்பட்ட பிறகு, உங்கள் பணத்தைக் கொண்டு இரண்டு மடங்கு பொருட்கள் வாங்குவதுதான், எல்லாவற்றைவிட மகா புத்திசாலித்தனமான காரியம்.

நீங்கள் சேர்த்து வைக்கும் தொகையை பந்தோபஸ்தான வகையில் முதலீடு செய்கிறோமா என்பது பற்றி நிச்சயப் படுத்திக் கொள்ளுங்கள். இந்தக் காலத்தில் நகைகள், நிலம், கட்டடங்கள், செப்பொருட்கள், பண்டங்கள் முதலியவற்றின் மேல் போட்டு வைக்கும் தொகைகளால் கஷ்டந்தான். அவற்றின் விலைகள் அளவிற்கு மீறி அதிகமா யிருக்கின்றன. அவை என்றைக்காவது இறங்கத்தான் செய்யுமென்பது நிச்சயம்.

பத்திரமாயிருக்கும் பொருட்டும், தக்க பலனளிக்கும் பொருட்டும், பணத்தை, அரசாங்க கடன் பத்திரங்களிலும் நேஷனல் சேவிங்ஸ் சர்டிபிகேட்டுகளிலும், இன்ஷூரென்ஸ்களிலும், கூட்டுறவுச் சங்கங்களிலும், தபாலாபீஸ் சேமிப்பு நிதியிலும் போட்டு வையுங்கள்.

உங்களால் இயன்றவரை மிச்சப் படுத்துங்கள். மிச்சப் படுத்தியதை முதலீடு செய்யுங்கள்.

தேசியப் போர் முனையார் விடுக்கும் தேசிய வேண்டுகோள்

AAA 1113 TM

புதுப் புடவை



என். பி.

குமுதத்திற்குக் கோபம் குமுறிக்கொண்டு வந்தது. சனிக்கிழமை கூடவா அவள் புருஷன் சீக்கிரம் வீட்டிற்குத் திரும்பி வரக்கூடாது? அடுத்தாத்து மாமா நூறு ரூபாய் முழசாய்ச் சம்பாதிக்கிறாரே, அவரும் அதே ஆபீஸ் தானே? அவர் மாத்திரம் எப்படிச் சீக்கிரம் வருகிறார்? சனிக்கிழமை இரண்டு மணிக்கும், மற்ற நாட்களில் ஐந்தரை மணிக்கும் தவறாமல் வீட்டிற்கு வந்து விடுகிறாரே? இவருக்கு மாத்திரம் என்ன? எங்காவது ஊர் சுற்றிக் கொண்டிருந்துவிட்டு மெதுவாய் வீட்டிற்கு வருகிறது!

ஒரு நாள் அதைப் பற்றிக் கேட்டுக்கூட விட்டாள். அன்று ஆபீஸிலிருந்து கணபதி திரும்பி வரும்போது சற்றுச் சந்தோஷமாகவே வந்தான். சந்தோஷமாக வந்தான் என்றால் சிரித்துக் கொண்டு தமாஷாய் வந்தான் என்று அர்த்தமில்லை. வீட்டிற்குள் நுழையும்போது சாதாரணமாய் அவன் முகத்தில் காணப்படும் கடுகடுப்பு அன்று சற்றுக் குறைவாக இருந்தது. கோட்டைக் கழற்றி விட்டு, கைகால்களைச் சுத்தம் செய்து கொண்டு சமையலறைக்குள் நுழைந்தான். குமுதம் பூரியை ஒரு தட்டில் தயாராய் எடுத்து வைத்திருந்தாள். உட்கார்ந்து சாப்பிட ஆரம்பித்தான்.

"குமுதம், கொஞ்சம் தீர்த்தம் கொடு" என்றான்.

"குமுதம்" என்று பெயர் சொல்லி அழைத்தது அவளுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. எப்பொழுதும் "தண்ணீர் கொடு" என்பது போன்ற வார்த்தைகளைத் தவிர அவன் அதிகமாகவே பேச மாட்டான்.

குமுதத்திற்கு இது ரொம்பக் குறை. எதிர் வீட்டில் இருக்கும் கோமளத்தையும் அவள் கணவனையும் பார்க்கும் போதெல்லாம், இந்தக் குறை அவள் மனத்தில் தோன்றிக் கொண்டேயிருக்கும்.

சாயந்திரம் ஆபீஸிலிருந்து வரும் பொழுதே கைநிறையப் பக்ஷணத்துடன், வெகு நாளாய்க் காணாத குழந்தையைக் காண வரும் தாயைப்போல் அவர் உள்ளே வருவார். வாசலில் காத்துக் கொண்டிருக்கும் கோமளத்துடன் பேசிக் கொண்டே மாடிக்குப் போவார். சட்டை, கோட்டு முதலியவைகளைக் கழற்றி வைத்து விட்டு, சமையலறைக்கு வருவார். மாடிப்படி இறங்கும்போதுகூடவா இருவரும் ஜோடியாக இறங்க வேண்டும்?

சிற்றுண்டி அருந்தும்போது அன்று ஆபீஸில் இப்படி நடந்தது. அப்படி நடந்தது என்று எதாவது பேசிக்கொண்டே இருப்பார். இரவு சாப்பிடும்போதும் இப்படித்தான். இதெல்லாம் குமுதத்திற்கு ரொம்பப் பிடித்திருந்தது. தன் புருஷனும் என்



இப்படி இருக்கக் கூடாது என்று நினைத்துப் பெரிதும் ஏங்குவாள்.

இது நிற்க.

டம்ளரில் தண்ணீரை எடுத்து அவரிடம் கொடுத்து விட்டு, "ஏன் உங்களுக்கு மாத்திரம் வீட்டிற்கு வர நேரமாகிறது? அடுத்தாத்து அண்ணாசாமி அய்யரும் உங்கள் ஆபீஸ்தானே? அவர் சீக்கிரம் வந்து விடுகிறாரே?" என்றாள் குமுதம்.

"ஆபீஸில் வேலைத் தொந்தரவு அதிகம்" என்றான் நமது கதாநாயகன்.

"நந்தி அடிப்பதுபோல் பேசுகிறீர்களே? அதிருக்கட்டும். இதென்ன, முப்பத்தைந்து ரூபாய் சம்பளத்தைக் கொடுத்துவிட்டு இவ்வளவு வேலை வாங்குகிறானே பாவி!" என்றாள் அந்தப் பேதை.

தன் புருஷனைச் சீக்கிரம் வீட்டிற்கு வர முடியாமல் தடுக்கும் அந்த எஜமானர் மீது அவ்வளவு ஆத்திரம் அவளுக்கு.

"உன்னைக் கட்டாயப்படுத்தி நான் கல்யாணம் செய்து கொள்ள வில்லையே? அப்படியிருக்க, என் சம்பளத்தைப் பற்றி ஏளனமாகப் பேசுவானேன்?" என்றான் கணபதி, கோபமும் வருத்தமும்கலந்த பார்வையுடன்.

குமுதத்திற்குத் தூக்கிவாரிப் போட்டது. ஏதோ கேட்கப் போய் எதுவோ முடிந்ததே என்று அவளுக்கு வருத்தமாய் விட்டது. ஒன்றும் சொல்லத் தெரியாமல் திகைத்து நின்று விட்டாள்.

கணபதியோ ஆகாரம் சாப்பிடுவதையும் அத்துடன் நிறுத்திக் கொண்டு, காப்பியைச் சாப்பிட்டு விட்டு மாடிக்குச் சென்றான்.

சற்று சந்தோஷமாய் வீட்டிற்கு வந்த கணவனை வருத்த மடையச் செய்து விட்டோமே என்று அவளுக்குத் தாங்கலா யிருந்தது. மாடிக்குப் போய் அவரைச் சாந்தப் படுத்தலாம் என்ற நோக்கத்துடன் சமையலறையை விட்டு வெளியே வந்தாள். அப்பொழுது, "கோமளம், நீயும் மாடிக்கு வா. சற்று நேரம் பேசிக் கொண்டிருக்கலாம். பிறகு நான் கொஞ்சம் வெளியே போக வேண்டும்" என்று சொல்லிக் கொண்டே எதிர் வீட்டுச் சமையலறையிலிருந்து மாடிக்குப் போனார் கோமளத்தின் கணவன். என்ன தோன்றிற்றோ என்னவோ, குமுதம் உள்ளே திரும்பி விட்டாள்.

அன்றையிலிருந்து குமுதம் தன் கணவனிடம் அவன் சம்பளத்தைப் பற்றியாவது, அவன் காரியாலயத்திலிருந்து நேரம் கழித்து வீட்டிற்கு வருவதைப் பற்றியாவது பேசியதே கிடையாது.

கணபதி படித்தவன். இருந்தாலும் தன் மனைவி விஷயத்தில் மாத்திரம் தன்



மூளையை உபயோகிக்க மறந்தான். தன்னிடம் அவன் உண்மையான அன்புடன் இருக்கிறான் என்பதை அவன் அறிந்தானில்லை. தான் குறைவாகச் சம்பளம் வாங்குவதால் தன்னை அவன் மதிக்கவில்லை, அவனைச் சேர்ந்தவர்களும் மதிக்கவில்லை என்ற எண்ணம் அவன் மனத்தில் வேரூன்றி இருந்தது. அதனால், அவன் சாதாரணமாய் ஏதாவது பேசினாலும், தன் கற்பனா சக்தியால் அவன் சொல்லிய வார்த்தைகளுக்கும் தன் சம்பளத்திற்கும் ஏதாவது சம்பந்தம் கண்டு பிடித்து, கண்டபடி அவனை ஏதாவது பேசுவான்.

இது அவர்களுடைய வாழ்க்கையில் ரொம்பவும் சகஜமா யிருந்தது.

* * *

ஒரு நாள் கணபதி பார்க் ஸ்டேஷனிலிருந்து மாம்பலத்திற்கு மின்சார வண்டியில் வந்து கொண்டிருந்தான். தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு, தலைமைக் குமாஸ்தா அன்று இவன் வேலையில் செய்த தப்பைக் கண்டு பிடித்ததை யோசித்தபடி வந்து கொண்டிருந்தான்.

அப்பொழுது இவன் எதிரில் உட்கார்ந்திருந்த இரண்டு பெரியவர்கள் ஏதோ கல்யாண விஷயமாய்ப் பேசிக்கொண்டு வந்தார்கள். இவனையும் அறியாமல், அவர்கள் பேசுவது இவன் கவனத்தைக் கவர்ந்தது.

“ஏன் அந்தக் கோபாலனை வேண்டாம் என்று விட்டு விட்டீர்கள்? ஜாதகம் சரியாயிருக்கிறதாகச் சொன்னீர்களே!” என்றார் ஒருவர்.

“ஆமாம்; ஜாதகம் சரியாகத்தான் இருந்தது. ஆனால் அவன் எம். எஸ். எம். ரயில்வேயில் வேலையி லிருக்கிறான்” என்றார் இரண்டாமவர்.

முதலில் பேசியவர் இடியிடியென்று சிரித்தார். அவர் சிரித்தது நம் கணபதியின் மண்டையில் அடிப்பதுபோல் இருந்தது.

“ரயில்வேயில் இருந்தால் நல்லதாயிற்றே? வேலையை விட்டுத் தள்ளமாட்டார்கள். ‘பாஸ்’ உண்டு; ஊர்களுக்கு இனாமாகப் போகலாம். பிடிப்புப் பணம் வேறு உண்டு. பேஷான வரனாயிற்றே! விட்டு விட்டீர்களே?”

“ஆமாம்; அதெல்லாம் சரிதான். ஆனால் சம்பளம்......?” என்றார் இரண்டாமவர்.

“ஏன், சம்பளத்திற்கென்ன? ஐம்பது ரூபாய்க்குக் குறையாது.”

“உமக்குத் தெரிந்தது அவ்வளவுதான். அந்தச் சம்பளத்தைக் கேட்டால் உமக்குத் தூக்கிவாரிப் போடும். மாதம் இருபத்தைந்து ரூபாய் வாங்குகிறான். அவன் மனைவிக்குச் சோறு போட முடியுமா?” என்றார்.

அதற்குமேல் அவர்கள் பேசியதைக் கணபதி கவனித்தானில்லை. மாம்பலம் ஸ்டேஷனில் இறங்கினான். தன் மாமனாரும் தன்னைப் பற்றி இப்படித்தானே நினைப்பார்? தன்னை அதனால்தானே அவர் மதிப்பதில்லை? அவருடைய மற்றொரு மாப்பிள்ளை பணக்காரனா யிருப்பதனால்தானே அவனிடம் அவருக்கு அவ்வளவு பிரியம்? தன் மனைவிக்கும் தன்னிடம் அதனால்தானே அன்பும் மரியாதையும் இல்லை? — இப்படியெல்லாம் ஏதேதோ நினைத்துக் கொண்டே வீட்டை வந்தடைந்தான்.

அன்று காலை இவன் வீட்டை விட்டுக் கிளம்பும்போது சன்னமாயிருந்த குமுதத்திற்கு மத்தியானம் ஜுரம் வந்து விட்டது. தன்னால் முடிந்தவரை சமாளித்தும், முடியாததால், மாடியில் போய்ப் படுத்து விட்டாள். அவளால் உடம்பை அசைக்கவே முடியவில்லை.

தன் கணவன் வரும் நேரம் நெருங்குவதைக் கண்டதும், “ஐயோ, பாவம்! பசியுடன் வருவாரே! ஒன்றும் நம்மால் செய்து வைக்க முடியவில்லையே! காப்பியாவது போட்டு வைப்போம்” என்று நினைத்து மெதுவாய் எழுந்தாள். ஆனால் ஜுர வேகம் அவளை எழுந்திருக்க விடவில்லை.

"ஐயோ, பாவம்! பசியுடன் களைப்பாய் வருவார். சாப்பிடவும் ஒன்றுமில்லை. அத்துடன் நமக்கு ஜுரம் என்றால், அவருக்கு எவ்வளவு கஷ்டமாயிருக்கும்! ஏன் இந்த ஜுரம் நமக்கு வந்தது?" என்று ஏதோ தான் பெரிய குற்றம் செய்ததுபோல் ஏக்கமாயிருந்தாள்.

அப்படிப்பட்ட சமயத்தில்தான் நம் கதாநாயகன் உள்ளே நுழைந்தான். மாடியறையில் நுழைந்ததும் குமுதம் படுத்துக் கிடப்பதைக் கண்டு வியப்புற்றான்.

"என்ன உடம்பு?" என்றான்.

"ஒன்றும் இல்லை. உடம்பெல்லாம் வலியாயிருக்கிறது" என்றாள் மெதுவாக.

"ஜுரம் இருக்கிறதா? சரி, மருந்து வாங்கி வருகிறேன். உனக்குக் காப்பி, டீ ஏதாவது வேண்டுமா? ஏதாவது சாப்பிட்டாயா?" என்றான்.

என்ன இருந்தாலும் இனிய மனதுடையவனல்லவா? ஜுரம் என்றால் இந்த அக்கலாய்ப்புக்கூட இருக்காதா?

"ஒன்றும் வேண்டாம். பசியே இல்லை. நீங்கள் ஏதாவது சாப்பிட்டு விட்டு வாருங்கள்" என்றாள்.

வெளியே போய்க் காப்பி சாப்பிட்டுவிட்டு, குமுதத்திற்கும் காப்பி வாங்கிக் கொண்டு வந்தான். காப்பி சாப்பிட்டதும் அவளுக்குச் சற்றுத் தெம்பாயிருந்தது. எழுந்து உட்கார்ந்தாள்.

"சிக்ஷா கொண்டு வருகிறேன். டாக்டர் வீட்டிற்குப் போய்விட்டு வரலாம்" என்றான்.

"வேண்டாம், காலைக்குச் சரியாகப் போய்விடும். வீணாய் டாக்டருக்குப் பணம் கொடுக்கவேண்டாம்" என்றாள்.

"நன்றாயிருக்கிறது! ஜன்னியாய் விட்டால் என்ன செய்வது?" என்றான்.

இந்த நிமிஷம்தான் நம் குமுதத்தின் மேல் சனீஸ்வரன் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தான். அதுவும் அவள் மனதில் புகுந்து மூளையை மங்க வைத்து விட்டான். ஞாபக மறதியாய்ப் பின் வருமாறு சொல்லி விட்டாள்:

"ஒன்றும் ஜன்னியாகாது. இதற்கெல்லாம் வீணாய்ப் பணம் செலவழித்தால் எப்படி...?" என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தவள், தேள் கொட்டினது போல் திருத்திக்கொண்டாள். அந்தச் சாதாரணமான வார்த்தைகள் அவன் மனத்தில் வேறு விதமான அலைகளைக் கிளப்பி விடும் என்ற ஞாபகம் அப்பொழுதுதான் அவளுக்கு வந்தது. இருந்தாலும் இதுபோதாதா நம் கணபதிக்கு?

"அப்படி நான் பிச்சைக்காரனாய் விடவில்லை. உன்னை டாக்டரிடம் அழைத்துப் போனால், எங்கே செலவுக்குப் போதாமல் போய்விடப் போகிறதோ என்ற பயமோ?" என்றான் ஏளனமாக.

அவன் முகத்தில் கோர வெறுப்பு தாண்டவமாடிற்று. கம்மென்று சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டு, நாவல் படிக்க ஆரம்பித்து விட்டான்.

இம்மாதிரி தப்பான எண்ணங்களால் கணபதி தன் வாழ்நாளை வேம்பாக்கிக் கொண்டான். அவன் வாழ்க்கையும், அவளை உள்ளன்போடு நேசிக்கும் அவள் வாழ்க்கையும் சந்தோஷமில்லாத பாலைவனமாக்கினான்.

குமுதமோ தன் புருஷனுடைய சம்பளத்தைப் பற்றி யோசிப்பதே கிடையாது. தன் அத்திம்பேர் பணக்காரராய் இருக்கிறாரே, தன் சகோதரி தனி வீட்டில் சகல போகங்களுடனும் வசிக்கிறாளே என்ற எண்ணமே அவள் மனத்தில் உதிக்க வில்லை. தான் பணக்காரனை மணக்க வில்லையே என்ற எண்ணமும் அவள் மனத்தில் உதிக்கவில்லை. ஆனால் தன்னுடைய கணவன் தன்னைப் பற்றி இவ்விதம் நினைப்பது அவளுக்கு மிகவும் மன வருத்தத்தைக் கொடுத்த தென்பதைச் சொல்வது மிகையாகும்.



இம்மாதிரியே சில நாட்கள் கழிந்தது. ஒரு சமயம் குமுதத்தை அவள் தகப்பனார் ஊருக்கு அழைத்துக் கொண்டு போனார். அவளுக்கு என்னமோ அவரைத் தனியே விட்டுப் போகவே இஷ்டமில்லை. இருந்தாலும் அப்பா கட்டாயப்படுத்திக் கூப்பிட்டதால் போகவேண்டியிருந்தது.

அவள் உடல் பிறந்தகமாகிய திருவாரூரில் இருந்ததே யொழிய, அவள் எண்ணமெல்லாம் மாம்பலத்தைப் பற்றித்தான். சாப்பிடும் போதெல்லாம், "நாம் ஜோராய்யாக வீட்டில் சாப்பிடுகிறோம். இந்த இருட்டில் அவர் புது மாம்பலம் போய்ச் சாப்பிட்டு விட்டு வரவேண்டுமே!" என்று நினைப்பாள். படுக்கப் போகும்போது, "ஐயோ, பாவம்! அவருக்கு மெத்தையை உதறிப் போட்டுக் கொள்ளக் கூடத் தெரியாதே. அப்படியே விரித்துப் படுத்து விடுவாரே!" என்று ஏங்குவாள். தான்தான் புருஷனைக் கவனித்து வளர்க்க வேண்டும், தானில்லா விட்டால் புருஷனால் தன்னையே கவனித்துக் கொள்ள முடியாது என்று எண்ணுவது ஸ்திரீ ஸ்வபாவ மல்லவா?

இது அவள் தாய், தகப்பனுக்குக்கூடத் தெரிந்து விட்டது. ஒரு நாள் அவள் தாயார் தன் நாயகனிடம், "இந்தாருங்கோ, குமுதத்தை இன்றைக்கே பட்டணத்திற்குக் கொண்டு விட்டு விடுங்கள். எப்பொழுது பார்த்தாலும் மாப்பிள்ளையை நினைத்து உருகிக்கொண்டே யிருக்கிறாள்" என்றாள்.

திருடனின் யுக்தி!



அவளுடைய பிதா சிரித்துக்கொண்டே, "என்ன இருந்தாலும் புருஷன் நகையும் புடவையுமாய் வாங்கிச் சாத்துகிறாரோ இல்லையோ, அதனால்தான் அவளுக்கு அவ்வளவு ஆசை! ஏம்மா குமுதம், அப்படித் தானே?" என்றார் விளையாட்டாக.

இது சுருக்கென்று பட்டது நம் குமுதத்திற்கு. அழுது விட்டாள்!

ஒரு மாதம் கழித்து ஊருக்கு வந்தாள். மறுபடியும் பழைய ராமாயணம்!

மூன்று மாதங்கள் கழிந்தன. குமுதத்தின் தம்பிக்குப் பூணூல் கல்யாணம் என்று கடிதம் வந்தது.

"அப்பாவுக்கு அநேக நமஸ்காரம். கலியாணக் கடிதம் வந்து சேர்ந்தது. ஆனாலும் நான் கலியாணத்திற்கு வர முடியாததற்கு வருந்துகிறேன். வாராததற்கு வேறு காரணமில்லை. என் புருஷன் ஏழை. ஆகையால் நானும் ஏழை. ஏழைகள் பந்தலில் தோன்றினால் உங்கள் அந்தஸ்திற்குக் குறைவுண்டாகாதா? ஆகையால் என் புருஷன் எனக்கு நகையும் புடவையும் வாங்கி அபரிமிதமாய்க் கொடுக்கும்போது நாங்கள் திருவாரூருக்கு வருகிறோம்" என்று எழுதிவிட்டாள்.

கணபதிக்கு இதைப் படித்தவுடன் பிரமிப்புத் தோன்றிவிட்டது. தன்னிடம் அவ்வளவு அன்பா என்று வியந்தான். நன்னாக அந்தக் கடிதத்தைக் கிழித்தெறிந்தான் என்று சொல்லவும் வேண்டுமா? பூணூல் கலியாணத்திற்குப் போய் விட்டு வந்தார்கள் என்று சொல்வது தான் தேவையா?

அன்றையிலிருந்து வேறு கணபதி. தன் கணவன் தன் மனம்படி இருப்பதைக் கண்டு குமுதம் மனம் பூரித்தாள். இருவரும் ஆனந்த மயமான வாழ்க்கை நடத்துகிறார்கள்.

"நாளைக்குச் சம்பளம் வருகிறது" என்றான் கணபதி.

"பெரிய சம்பளம்; அதற்குச் சொல்ல வேறு வேண்டுமா?" என்றாள் குமுதம்.

கணபதி சிரித்தான்! என்ன மாறுதல்?

"அதற்காகச் சொல்லவில்லை. இந்த மாதத்திலிருந்து எனக்கு எழுபத்தைந்து ரூபாய் சம்பளம் வருகிறதே. ஜனவரி இல்லையா?" என்றான் சிரிப்பின் நடுவில்.

"ஆமாம், மறந்தே விட்டேன். அதிகப்படியாக வரும் அந்த ரூபாய்க்கு நல்ல உடுப்பாக ஏதாவது வாங்கிக் கொள்ளுங்கள். உங்கள் கோட்டுகளும் சட்டைகளும் நன்றாகவே இல்லை!"

"முடியவே முடியாது. அந்த ரூபாய்க்கு உனக்கு ஒரு புடவைதான் வாங்கப் போகிறேன்" என்றான் கணபதி குழந்தை கொஞ்சுவதைப்போல்.

வெகு நேரம் சண்டையிட்டு ஒருவிதமான முடிவுக்கு வந்தார்கள். இந்த மாதம் புடவை வாங்குவது; அடுத்த மாதம் கணபதி உடுப்புகள் வாங்கிக் கொள்வது என்று தீர்மானம் செய்யப்பட்டது.

"நீ வருகிறாயா, அல்லது நானே புடவையை வாங்கி வந்து விடவா?" என்றான் நமது கதாநாயகன்.

"அடேயப்பா, உங்களுக்குப் புடவை வாங்கக்கூடத் தெரியுமா?" என்றாள் குமுதம்.

'க்யூ' வரிசை



முதல் தேதி சாயந்திரம் மணி ஆறு இருக்கும். "என்ன, இன்னும் வரவில்லையே?" என்று தன்னையே கேட்டுக் கொண்டாள்.

"ஓஹோ! புடவை வாங்கிக் கொண்டு தானே வரவேண்டும்?" என்று தானே பதில் சொல்லிக் கொண்டாள். அவள் மனம் கட்டுக் கடங்காக் குதூகலத்துட னிருந்தது. புடவை வருகிறதாலல்ல அந்தச் சந்தோஷம். தன் புருஷன் அன்பாகப் புடவை வாங்கித் தருகிறான் என்றால் ஆனந்த மில்லையா?

மணி ஏழு இருக்கும். கணபதி கதவை இடிக்கும் சத்தம் கேட்டது. குமுதம் ஓட்டமாக ஓடிக் கதவைத் திறந்தாள்.

"குமுதம்! இதோ!" என்று ஒரு பையை அவள் கையில் கொடுத்தான். குமுதம், முகம் மலர, மெய் சிலிர்க்க, பையைத் திறந்து புதுப் புடவையைக் கையில் எடுத்தாள். சிவப்புக்கரை போட்ட கருப்புப் புடவை!

"புடவை பிடித்திருக்கிறதா?" என்றான் கணபதி.

"பேஷாக இருக்கிறது! ஆனால் இது எப்படி யிருக்கிறது என்று சொல்லுங்கள்!" என்று சொல்லிவிட்டு அலமாரியிலிருந்து ஒரு காகிதப் பொட்டலத்தைக் கொண்டு வந்தாள்.

"என்ன இது?" என்று கேட்டுக் கொண்டே கணபதி அதைப் பிரித்துப் பார்த்தான். நாலைந்து கதர் வேஷ்டிகளும், சட்டைத் துணியும், இரண்டு கதர் ஜரிகை அங்கவஸ்திரமும் இருந்தது.

"இதெல்லாம் வாங்கினாயா?" என்றான் கணபதி ஆச்சரியத்துடன்.

"ஆமாம்; நானும் அடுத்தாத்துக் கோமளமும் போய்க் கதர்க் கடையில் வாங்கி வந்தோம்."

"உனக்கு ஏது பணம்?"

"ஒற்றைக்கல் மூக்குப் பொட்டு ஒன்று இருந்ததல்லவா, அதை இப்பொழுது நான் போட்டுக் கொள்வதில்லை. அதைக் கோமளத்திடம் கொடுத்து விட்டு நாற்பது ரூபாய் வாங்கினேன்."

"அதை விற்பானேன்? எனக்குத் துணிமணிக்கு இப்பொழுது என்ன அவசரம்? அடுத்த மாசம் வாங்கிக் கொள்ளலாமென்றுதான் காலையில் சொன்னேனே?"

குமுதம் ஒருகணம் மௌனமா யிருந்தாள்.

"நீங்கள் கிழிந்த சட்டையையும் வேஷ்டியையும் கட்டிக்கொண்டு ஆபீசுக்குப் போகும்போது எனக்கு எப்படிப் புதுப் புடவை கட்டிக்கொள்ள மனசு வரும்?" என்று சொல்லும்போதே அவள் குரல் கம்மிற்று. கண்களில் நீர் துளித்தது.

கணபதி மேலே பேசவில்லை.

குழந்தைகள் நாடகம்

வி.எஸ்.ஆர்.

[குழந்தைகள், மிருகங்கள் வேஷம் போட்டுக் கொண்டு கோர்ட்டு நாடகம் நடிக்கிறார்கள்.]

சிங்கராஜா:—ஐயா, மானரே! இந்தக் கணக்குப் பிள்ளை கழுதையாருக்கும் உமக்கும் தானே இந்தத் தகராறு?

மானர்:—ஆம் பிரபோ!

சிங்கம்:—இது, கணக்கு சம்பந்தமான சண்டைதானே? நல்லது; எங்கே முதலில் கணக்குப் புத்தகத்தை இப்படிக் கொடும், பார்க்கலாம்.

மானர்:—இல்லை பிரபு. கணக்குப் புத்தகம் இலலாததினல்தான் இந்த வழக்கே வந்திருக்கிறது. ஆம்; கணக்குப் பிள்ளை, கழுதையார் கணக்குப் புத்தகங்களையெல்லாம் சாப்பிட்டு விட்டார். அதைத் தீர விசாரித்துத் தாங்கள் தீர்ப்பு அளிக்க வேண்டும்.]

கழுதையார்:—பிரபு! கணக்குப் புத்தகங்களைச் சாப்பிடாமல் நான் கண்ணாடித் துண்டையா சாப்பிடுவேன்?



சிங்கம்:—கடைக்காரரே! கணக்குப் புத்தகங்கள் கழுதையாரிடம் அகப்படும்படி ஏன் வைத்திருந்தீர்?

மானர்:—கணக்குப் பிள்ளையிடம் கணக்குப் புத்தகத்தைக் கொடுக்காமல் வேறு யாரிடம் கொடுப்பது? அவர் அடிக்கடி புத்தகத்தைத் தின்பதைப் பார்த்துப் பல தடவை நான் கண்டித்தேன். என் எச்சரிக்கையைக் கொஞ்சமும் லட்சியம் செய்யாமல், முக்கியமான நாலு கணக்குப் புத்தகத்தை இன்று காலையில் ஒரே மூச்சில் சாப்பிட்டு விட்டார்.

[இந்தச் சமயத்தில் கழுதையின் பார்வை கோர்ட் குமாஸ்தாவின் புத்தகத்தின் பக்கம் சென்றது. குமாஸ்தா கணக்குப் புத்தகத்தைக் கழுதையின் வாய்க்கெட்டாத தூரத்தில் தள்ளி வைக்கிறார்.]

சிங்கம்:—ஏ, கடைக்காரரே! இது வரை கழுதையார் எவ்வளவு புத்தகங்களைச் சாப்பிட்டிருக்கிறார்?

மானர்:—இதுவரை 123½ கணக்குப் புத்தகங்களைச் சாப்பிட்டிருக்கிறார்.

கழுதை:—இல்லை, பிரபு! இது முழுப் பொய்!

மானர்:—நான் சொல்வது நிஜம் தான்!

சிங்கம்:—இப்படிச் சொன்னல் போதாது! எவ்வளவு புத்தகங்களைத் தின்றிருக்கிறார் என்று எழுத்து மூலமாகக் காட்டவேண்டும்.

மானர்:—எழுதி வைத்திருந்த அந்தப் புத்தகத்தைக் கூடக் கழுதையார் தின்று விட்டாரே!

கழுதை:— ஆமாம் பிரபு! இப்பொழுது கணக்குச் சரிதான். நான் 124½ புத்தகம் தின்றது வாஸ்தவம்.

சிங்கம் (கோபத்துடன்):—இந்தக் கணக்கு வைத்துக் கொள்ளத்தான் உம்மை வேலைக்கு வைத்துக் கொண்

டார் போலிருக்கிறது! கழுதையாரே! எதற்காக இப்படிப் புத்தகங்களைச் சாப்பிடுகிறீர்?

கழுதை :—பிரபு! எனக்கு மானார் கொடுக்கும் எட்டு ரூபாய் சம்பளம் சலவைக் கூலிக்குக்கூடப் போதவில்லை. இத்துடன், சாப்பிடக் காகிதமும் இப்பொழுது அகப்படுவதில்லை. முன்பெல்லாம் தெருவில் கிடக்கும் பழைய பத்திரிகைகளைத் தின்று காலம் தள்ளி வந்தேன். இப்பொழுது பத்திரிகைகளே கிடைப்பதில்லை. தப்பித் தவறிக் கிடைத்தாலும் அதில் ஒரே யுத்தச் செய்தியாக இருக்கிறது. அதைச் சாப்பிட்டால் என் வயிற்றைக் கலக்குகிறது.

[கோர்ட்டில் சிரிப்பு.]

சிங்கம் :—அதெல்லாம் நான் கேட்கவில்லை. நீர் மானாரின் கடைக் கணக்குப் புத்தகங்களைச் சாப்பிட்டது உண்டா, இல்லையா?

கழுதை :—நான் இரண்டு வருஷமாகத்தான் கணக்குப் புத்தகங்களைத் தின்று வருகிறேன். இத்தனை நாள் அது குற்றமாயில்லாதது இப்பொழுது மட்டும் எப்படிக் குற்றமாகும்?

சிங்கம் :—கடைக்காரரே! இதற்கு என்ன சொல்கிறீர்?

மானார் :—அதை ஏன் கேட்கிறீர்கள்? முதலில் எலியாரைக் கணக்குப்பிள்ளை வேலைக்கு வைத்துக்கொண்டேன். ஆனால் அவரை நம்பிக் கடையை விட முடியவில்லை. அரிசி மூட்டைகளை ஒரு கை பார்த்து விட்டார். அதுவும் போனால் போகிறதென்றால், ஏதாவது பூனை ஒன்று சாமான் வாங்க வந்தால் திடீர் திடீரென்று கடையை விட்டு ஓடிப் போவார்! அப்புறம் பூனையை விட்டே அவரைப் பிடித்துக்கொண்டு வரச் சொல்லும்படி ஆகிவிடும்! யாரை வைத்துக்கொண்டாலும் கடைசாமானுக்குத் தலைவலி வந்துவிடுகிறது.

சிங்கம்:—கடைசாமானைத் தொடாத மிருகமாகப் பார்த்து வேலைக்கு வைத்துக் கொள்வதுதானே?

மானார் :—புலியாரைச் சிலநாள் வேலைக்கு வைத்துக் கொண்டேன். அவர் என்னையே சாப்பிடப் பார்த்து விட்டார்! ஆகையினால், கழுதை யாரை வைத்துக் கொண்டே காலந் தள்ளுவதென்று தீர்மானித்தேன்!

சிங்கம் :—பின், எதற்காகக் கழுதையார் பேரில் இந்த வழக்குக் கொண்டு வந்திருக்கிறீர்?

மானார் :—நான் அவர் பேரில் வழக்குத் தொடுக்கவில்லையே! கழுதையார்தான் என் மேல் வழக்குத் தொடுத்திருக்கிறார்.

சிங்கம் :—ரொம்ப நியாயம்தான்! குற்றத்தை வேறு செய்து விட்டு, கடைக்காரர்மீது வழக்கு வேறு தொடுத்திருக்கிறாரா?

கழுதையார் :—பிரபு! மானார் என்னை வேலையிலிருந்து நீக்கி விட்டார். முன்பு கிடைத்த ஒன்றிரண்டு கணக்குப் புத்தகத்துக்கும் இனிமேல் வழி கிடையாது. என் பிழைப்புக்கு நீங்கள் வழி செய்ய வேண்டுமென்பதற்காகவே நான் இந்த வழக்கைக் கொண்டு வந்தேன்.

சிங்கம் (சிறிது யோசித்து விட்டு):—இங்கே பழைய கோர்ட்டு தஸ்தாவேஜுகளை ஒழிக்க வேண்டியிருக்கிறது. ஆகையால் தஸ்தாவேஜுகளை ஒழிக்கும் ஆபீஸராக உம்மை இரண்டு வருஷத்துக்கு நான் நியமித்திருக்கிறேன்.

[கோர்ட் ஆரவாரத்துடன் கலைகிறது.]



தென் இந்தியா ரயில்வே

கும்பகோணத்தில் மகாமக உத்ஸவம்

பிப்ரவரி 1945

★

1945 பிப்ரவரி மாதம் கும்பகோணத்தில் நடக்கப் போகும் மகாமக உத்ஸவத்தின் பொருட்டு எந்த விதமான விசேஷ ஏற்பாடும் செய்ய இயலாமல் இருப்பதையும் ஷை உத்ஸவ காலத்தில் யாதொரு ஸ்பெஷல் டிரெயினும் விடுவதற்கு இல்லை என்பதையும் தென் இந்தியா ரயில்வேயார் மிகமிக வருத்தத்துடன் பொது ஜனங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள். டிரெயின்களில் ஜன நெருக்கடி ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு ஸ்டேஷன்களில் டிக்கட் கொடுப்பது கட்டுப்படுத்தப்படும். ஆகையால் ஷை உத்ஸவத்தின் பொருட்டு கும்பகோணத்திற்கு ரயில் மூலம் பிரயாணம் செய்ய வேண்டாம் என்று பொது ஜனங்கள் எச்சரிக்கப்படுகிறார்கள். யுத்த கால நிலைமையின் காரணமாக இவ்வாறு முடிவு செய்யும் படியான நிர்ப்பந்தத்தை எவ்வளவுதான் வருந்திய போதிலும் தவிர்க்க முடியாத வகையில் ரயில்வேயாருக்கு நேர்ந்திருக்கிறது.

பாரதியார் ஞாபகார்த்த நிதி

சென்ற இதழில் "மற்ற நன்கொடைகள்" என்று குறிப்பிட்டிருந்த ரூ. 165—7—0க்கு விவரம்:

ரூ. 10—0—0: ஸ்ரீமான்கள் ஆர். சிவசுப்ரமணியன், பருத்தித்துறை, இலங்கை; ஸ்ரீ. வெங்கடாசலம், உபாத்தியாயர், போர்டு ஹைஸ்கூல், விருத்தாசலம்; பி. கே. எஸ். ஹைஸ்கூல் "திருவள்ளுவர் கழகம்" திருமங்கலம், (ஸ்ரீ எஸ். லக்ஷ்மிநரஸிம்மன் மூலம்); ராவ் சாஹிப் ஆர். கே. நாயுடு, பம்பாய்.

ரூ. 7—0—0: மானேஜர், ஏ.ஜெ.எஸ்.ஏ. காதிவஸ்திராலயம், உடுமலைப்பேட்டை, ரூ. 5-8-0 ஸ்ரீ ஆர். ராமச்சந்திரனும், ஆர் வெங்கிடராமனும் சாக்குளியா; ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் எஸ். கோபால அய்யர், கண்டி, இலங்கை; ஸ்ரீமதி சீதாலக்ஷ்மி சங்கரநாராயணன், நாக்பூர். நடராஜய்யர், மதுரை; என. எஸ். பாலசாமி, காசிப்பதிச்சி ஆரிய வைஸ்ய வாலிபர் சங்கம் சத்யமங்கலம்; பி. எஸ். பஞ்சநதியா பிள்ளை, கசிவலந்தநல்லூர்; ஏ. ராமகிருஷ்ண பிள்ளை பி.ஏ. பவகளூர்; எஸ். எஸ். வாசுதேவன் பி.எஸ்ஸி., பூனா; ஆர். ராமநாதன், பூனா; எம். எஸ். கணேசன், மாதுங்கா, பம்பாய்; கெ. எஸ். ராமசுப்பன், வால்டேர்; வி. நாராயணசாமி உடையார், சேலம்; ரூ. 4-4-0: ஸ்ரீ எம். ஆர். நாகலிங்கம், ஜெ. எஸ். வி., எஸ். வி. ஓ. டிரெயினிங் ஸ்கூல், ஜலாலி; ரூ. 3—12—0: அன்னூர் நெசவுத் தொழிலாளர்கள் திருப்பூர் (ஸ்ரீ பி.எம்.சுந்தரம் மூலம்); ரூ. 3—0—0: ஸ்ரீமதி எம். கே. ஜெயலக்ஷ்மி, நுங்கம்பாக்கம்; கஸ்தூரிபா இலவச வாசகசாலை, தேவதானப்பட்டி; ஸ்ரீ டாக்டர் திருநாவுக்கரசு பிள்ளை, திருப்பூவணம்; ஸ்ரீ வி. கிருஷ்ணமூர்த்தி, காக்கி; ரூ. 2—8—0: ஜனாப் கே. எம். மொகுதீன், எருவாடி, திருநெல்வேலி; கிருஷ்ணமாச்சாரி, சேலம்; ரூ. 2-2-0: ஸ்ரீ அ. கோவிந்தசாமி பிள்ளை, தஞ்சாவூர்; ரூ. 2—0—0: ஸ்ரீமதி கமலா பத்மநாபன், பங்களூர்; ஸ்ரீமான்கள் டி.வி. ராமகிருஷ்ணன், விழுப்புரம்; ஏ. வி. பாலசுப்ரமணியன், வேலூர்; எஸ். சேதுராமன், ஜலாலி; க. ஆறுமுகக் கவுண்டர், வெள்ளியணைப் பட்டணம்; கா. வீரபத்திர பிள்ளை, மேலபாளையம்; வி. கே. கிருஷ்ணா, பூனா; டி. ஆர். ராஜகோபால், ஜப்பல்பூர்; கிருஷ்ணகான சபா, எளையாத்தக்குடி, கீழ்ச்செவல்பட்டி; ரூ. 1 4—0: ஓர் அபிமானி, சித்தூர் கிராமம்; ரூ. 1—1—0: ஸ்ரீ பி. அப்பாசாமி, வில்-பரேல்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் கே. ராமசுப்பையர், மதுரை; ரு. வள்ளிநாயகம், கசிவலந்தநல்லூர்; கா. பாலசுப்ரமணியன், தியாகராயநகர்; எஸ். எஸ். நாராயணன், ம. காசிம், கோயமுத்தூர்; எஸ்.எஸ். குமார், கல்கத்தா; வி. திருமலை, உதகமண்டலம்; கே. ஆர். ராமச்சந்திரன், கீழ்வண்ணூர்; ஆர். சுப்பிரமணியன், அரவங்காடு; ஆர். கிருஷ்ணன், சென்னை; நா. கல்யாணசுந்தரம், பூனா; வி. ஆர். சேஷாத்திரி, பூனா.

சென்ற இதழில் "அன்பர்கள் மூலம் வந்த நன்கொடைகள்" என்று குறிப்பிட்டிருந்த ரூ 621—12—8க்கு விவரம்:

இலங்கை, மடுவக்கொல்லை, ஸ்ரீ எம். பெரியண்ணன் மூலம்:

ரூ. 5—0—0: ஸ்ரீ வே. நடேசன்; ரூ. 3-8-0: ஸ்ரீ மு. பெரியண்ணன்; ரூ. 3—0—0: ஸ்ரீ வை. கருப்பையா; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் எட். முருகன் கங்காணி, ஜே. நாராயண அய்யர், செ. க. ரத்னம்; ரூ. 1-1—0: ஸ்ரீ பெரி. அருணாசலம்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் பெரி. தேவராய பிள்ளை, பெரு. சிதம்பரம் பிள்ளை, வே. அருணாசலம் பிள்ளை, வை. க. வையாபுரி பிள்ளை, மு. பெரியசாமி பிள்ளை, செ. துரைசாமி க. பி., ந. ஆறுமுகம், சொ. சந்தனம் கங்காணி, ச. முத்தையா, செ. சிதம்பரம் கங்காணி, கப. முத்துலக்கன் ஆசாரி, மு. ம. சந்தனம் கங்காணி, செ. நெல்லையப்ப ரெட்டியார், அர. பெரியசாமி பிள்ளை, அ. அருணாசலம், செல்லையா, எட். கோபால் கங்காணி, கோ. சுந்தரம், பெ. ஆறுமுகம் பிள்ளை, வே. பொன்னுசாமிப் பிள்ளை, மாணிக்கம்; ரூ. 2—0—0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடை.

ஆக ரூ. 41—0—0

நாகர் கோவில், கல்கி ஏஜண்டு, ஸ்ரீ கே. கும்பலிங்கம் மூலம்:

ரூ. 8—7—0: தே. வி. டி. ஹைஸ்கூல் மாணவர்கள்; ரூ. 5—0—0: ஸ்ரீ பி. சிவகுருநாதன் செட்டியார்; ரூ. 3—0—0: ஸ்ரீமான்கள் டாக்டர் எஸ். முத்துக்கருப்ப பிள்ளை, வி. உமைநாதன் பிள்ளை; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் வி. எஸ். சிவராமகிருஷ்ணய்யர், எஸ். முனுஸ்வாமி, எஸ். எம். சுப்ரமணிய முதலியார், தெ. பெ. பெருமாள், எம். சுப்பையா, எ. சங்கரன் பிள்ளை, கெ. பத்மநாப பிள்ளை, கெ. கும்பலிங்கம் பிள்ளை; ரூ. 1-8-0: ஸ்ரீ பி. அய்யம் பிள்ளை; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் டி. எஸ். சுப்பிரமணிய அய்யர், எஸ். மாதேவன், ஆர். உடையார் பிள்ளை, எஸ். சுப்ரமணிய அய்யர், பி. நாணு பிள்ளை, எஸ். ஸ்ரீதரன் நாயர், எம். அருணாசலம் பிள்ளை, வித்வான் க. சிதம்பர நாணு, எ. சிவகுருநாதன் செட்டியார், பி. பத்மநாபன், எஸ். எம். அல்லிசாஹிப், எம். சங்கரநாராயண செட்டியார், சொ. சுப்பிரமணிய செட்டியார், ஆ. சி. பிச்சாண்டி செட்டியார், சி. சொக்கலிங்கம் செட்டியார், எஸ். ராம சுப்பு செட்டியார், ஆர். சுப்பையா, ஏ. கெ. பெருமாள், கு. பெருமாள் பணிக்கர், க. பி. ப. மு. ம. முகம்மது சாஹிப், அ. ராமசுவாமி ஐயர், எஸ். சிவன் பிள்ளை, வி. ராமச்சந்திர அய்யர், எஸ். சுப்பிரமணியன், டி. எம். சுந்தரம், வி. வேலாயுதம் பிள்ளை, கெ. பூதலிங்கம், எஸ். பி. எ. எ. எஸ். முத்துஸ்வாமி, டி. எஸ். வேலாயுதம், டி. நீலகண்டன், எஸ். ராமச்சந்திரன், எஸ். ஆறுமுகம், வி. ஏ. ராஜேந்திரன், க. நா. முத்துநாதன் முதலியார், எஸ். பி. பொன்னையா, எம். பகவதி, வி. சுப்பிரமணிய நாடார், ஆர். எம். காசிலிங்கம், எ. பெருமாள் பிள்ளை, எ. நாராயண பிள்ளை, பி. சுப்பிரமணிய பிள்ளை, சிதம்பரம் பிள்ளை, ஒரு அன்பர், ரூ. 4—12—0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடை.

ஆக ரூ. 84—11—0

சென்னை, ஆர்டினன்ஸ் பாக்டரி ஸ்ரீ ஆர். எஸ். மணி மூலம்:

ரூ. 3—0—0: ஸ்ரீ ஆர். சஞ்சீவி; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் ரா. க. மணி, எஸ். முத்துசாமி, பி. எஸ். சங்கரன்; ரூ. 1—8—0: ஸ்ரீ ஏ. எஸ். வெங்கிடராமன்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் எஸ். ஆர். எஸ். மணி, கே. ராமகிருஷ்ணன், பி. சுப்பராயன், எஸ். நீலகண்டன், ஆர். சுப்பிரமணியன், ஏ. நாராயணசாமி, பி. ஆர்.

சேஷாத்திரி, சி. ஸ்ரீனிவாஸன், வி. சுந்தரராஜன்: ரூ. 9—8—0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடை. ஆக ரூ. 29—0—0

சிதம்பரம், கல்வி ஏஜண்டு, ஸ்ரீ சி. செ. கனகசபை மூலம்:

ரூ. 10—0—0: ஸ்ரீமான்கள் எஸ். ஸ்ரீநிவாச ரெட்டியார், வ. மு. கலியாணசுந்தர நாடார்; ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் சி. செ. கனகசபை, எல். எஸ். சுப்பராய பிள்ளை, ஆர். எஸ். ராமானுஜ செட்டியார், வி. ஆர். நடேசம் பிள்ளை, ஆ. லெ. லெட்சுமணஞ் செட்டியார், பழ. நா. பழனியப்ப செட்டியார், எம். நடனசபாபதி அய்யர், செ. ரெத்தினசாமி செட்டியார், நா. மு. பொன்னம்பலம் பிள்ளை, சா. கோபால்சாமி அய்யர்; ரூ. 3—0—0: ஸ்ரீமான்கள் டி. கே. மகாதேவ நாயர், து. கோவிந்தசாமி படையாச்சி, சி. கண்ணுசாமி நாயுடு அன் சன்ஸ், ஏ. எஸ். ராமகிருஷ்ணய்யர், ச. சபாபதி பிள்ளை, கே. ஏ. அப்துல் ஹமீத்கான் சாயபு, மு. தண்டபாணி செட்டியார், என். கணபதியா பிள்ளை, சா. விநாயகம் பிள்ளை, எஸ். மணி அய்யர்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் சி. எஸ். வரதாச்சாரியார், வி. ராதாகிருஷ்ணய்யர், டி. என். தியாகராஜய்யர், கு. தெய்வநாயகஞ் செட்டியார், என். ராமமூர்த்தி, என். ஆர். வைத்தியநாதய்யர், எஸ். நாராயணசாமி செட்டியார்.

ஆக ரூ. 100—0—0

மேலூர், கல்வி ஏஜண்டு, ஸ்ரீ எஸ். டி. முதலியார் மூலம்:

ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் செ. ராம. மு. இராமநாதன் செட்டியார், வி. திருவேங்கடசாமி நாயுடு, நித்யானந்த ஸ்டோர்; ரூ. 1—12—0: ஸ்ரீ எம். எஸ். வெள்ளைச்சாமி; ரூ. 1—4—0: ஸ்ரீ ஏ. கே. ஆதிநாராயண குப்தா; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் ஏ. வேலுசேர்வை, என். குருஸ்வாமி நாயுடு, மரகதவல்லி ஸ்டோர்ஸ்; ரூ. 3—0—0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடை.

ஆக ரூ. 15—0—0

இலங்கை பேராதெனியா, ஸ்ரீ கே. வி. ராமையா மூலம்:

ரூ. 3—0—0: ஸ்ரீ கே. வி. ராமையா; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் எஸ். எம். ரெங்கஸ்வாமி, கே. வி. செந்தில்வேலு; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் என். எம். அருணாசலம், என். எம். வேலாயுதம், கே. மாணிக்கம், வி. பி. சின்னத்தம்பி, எஸ். எம். ராமசாமி, பி. ஏ. சுப்பையா, கே. கே. பெருமாள், பி. கருப்பண்ணன், பி. சின்னையா, டி. ஆர். பழனியப்பன், டி. எம். கருப்பையா, வி. இராஜரத்தினம், எஸ். டி. சுப்பையா, ஆர். அழகர்; ரூ. 0—8—0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடை.

ஆக ரூ. 21—8—0

சென்னை, சவ்ட் ஏஷியாடிக் கம்பெனி (இந்தியா) லிமிடெட், ஸ்ரீ எஸ். ஆதிநாராயணன் மூலம்:

ரூ. 5—0—0: ஸ்ரீ வி. சுப்பிரமணிய பிள்ளை; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் எஸ். பி. விட்டல்ராவ், பி. எஸ். நாராயணன், பி. நரசிம்மாச்சாரி, கே. நரசிம்ஹன், எஸ். ஆதிநாராயணன்; ரூ. 1—8—0: ஸ்ரீ வி. எஸ். எஸ். மணியன்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் எஸ். எஸ். ராமமூர்த்தி, பி. என். சக்கரவர்த்தி, டி. எஸ். சுப்பாராவ், வி. ராமரெத்தினம், ஏ. மார்டின், டி. ஆர். கிருஷ்ணசுவாமி முதலியார், கே. வி. ஜானகிராம் நாயுடு, எஸ். காசிநாதன், பி. வி. நரசிம்ஹ முதலியார், பி. நரசிம்ஹன், வி. நடனசபாபதி அய்யர், எம். நாதாசார்லு, பி. கிருஷ்ணய்யா, ஆர். ரெங்கஸ்வாமி, சி. டி. சங்கரன், எம். ராமய்யா, ஆர். வரதராஜன், கே. எஸ். நாராயணன், கே. ஹென்ரி, கே. வீரபத்ரன், ஜி. ராமசந்திரன், டி. ஆர். வேலுசிங், ஜி. ராதாகிருஷ்ணன்; ரூ. 14—0—0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடை.

ஆக ரூ. 53—8—0

ஹைதராபாத் சமஸ்தானம், தான்டேட், ஸ்ரீ வி. பி. கணபதி மூலம்:

ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் வி. கிருஷ்ணசாமி ஐயர், லோகநாத் என். முதலியார், ராதாகிருஷ்ண எஸ். வி. பி. கணபதி; ரூ. 4—0—0: ஸ்ரீ சி. வி. ராஜபூஷணம்; ரூ. 3—0—0: ஸ்ரீமான்கள் ராமமூர்த்தி, கிருஷ்ணன்; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் பி. என். ரெட்டி, எச். எல். ராமன்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் கயம்பு, எஸ். பச்சையப்பன், தேசிகாச்சாரி, சந்தர், நடேசன், பி. ஜி. கிருஷ்ணமூர்த்தி.

ஆக ரூ. 40—0—0

கான்பூர், நயாகன்ஜ், ஸ்ரீ ஆர். ராமநாதன் மூலம்:

ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் எஸ். வி. நாதன், டி. எஸ். பி. அய்யர்; ரூ. 4—0—0: ஸ்ரீ பி. என். வெங்கிட்டரமணி; ரூ. 3—0—0: ஸ்ரீ வி. எஸ். கிருஷ்ண செட்டியார் சன்ஸ்; ரூ. 2—8—0: ஸ்ரீமான்கள் எம். எஸ். ரெத்தினம், முத்துக் கிருஷ்ணன்; ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் ஒ. வெங்கிடாசலம், டி. ராமநாதன் செட்டியார், கோ. மல்லையன், முத்துக்கிருஷ்ணன், வா. நதன், ராமசாமி, சச்சிதானந்தம், எஸ். கோதண்டராமன்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் ஏ. ஏ. காசிஅண்ணாமலை நாடார், மு. சிவசங்கரன், ப. ஜெகரக்ஷகன், சி. வெங்கிட்டராமன், கி. வெங்கிட்டராமன் செட்டியார், ஆசீர்வாதம், கோ. சேதுராமன், கு. குருசாமி, தொ. ரவி, கே. வி. சுப்புசாமி, கே. பி. அய்யர், மணி, கிருஷ்ணமூர்த்தி, கோ. கிருஷ்ணமூர்த்தி, ஏ. சுப்பா ராவ், கே. ஜெயராமன், ஏ. சேதுபதி அய்யர், தர்மராஜ், வாசுதேவன், ஏ. அனந்தராமன், எஸ். வீரமணி, ஏ. ஆறுமுகம், எஸ். வேம்பு, பி. எஸ். ஜான், கே. ஜெகன்னாதன், பாசி, என். ராமஜெயம், ஜான், கே. வி. சங்கரநாராயணன், தியாகராஜன், எம். எஸ். மகாதேவ ஐயர், ராமமூர்த்தி; ரூ. 5—8—0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடை.

ஆக ரூ. 75—8—0

ஜப்பல்பூர், தேபோர்டவுன், ஸ்ரீ ஏ. சோமசுந்தரம் மூலம்:

ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் ஏ. சோமசுந்தரம், டி. ஆர். கிருஷ்ணமூர்த்தி, எம். பூரான், ஒய். என். நாராயண ராவ், கே. பத்மநாபன், பி. ராமலிங்கம், வி. நடராஜன், ஆர். பாஷ்யம், எம். என். பட், ஆர். நாராயணன், டி. எஸ். வி. மணி, எஸ். கிருஷ்ணசாமி, ஏ. ஆசீர்வாதம், கே. வெங்கிடரமண ராவ், டி. பாலசுப்பிரமணியன், ஏ. பி. பட்டாசார்ஜி, ஏ. அருணாசலம், ஏ. எஸ். வெங்கிடராமன், வி. கணேசன், எஸ். சேஷாத்திரி, எம். ஆர். ஸ்ரீனிவாஸன்; ரூ. 6—0—0: மூன்று அனுதாபிகள்; ரூ. 13—8—0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடை. (மணியார்டர் கமிஷன் நீங்கலாக)

ஆக ரூ. 40—0—0

பம்பாய், தாதர், ஸ்ரீ கே. எஸ். ராமச்சந்திரன் மூலம்:

ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் கே. எஸ். ராமச்சந்திரன், ஆர். ராமலிங்கம், வி. புருஷோத்தமன், கோபால்ராஜ், கோபால கிருஷ்ண மேனன்.

ஆக ரூ. 5—0—0

கொழும்பு, ஸ்ரீ செல்லையா பர்ணாந்து மூலம்.

ரூ. 3—0—0: ஸ்ரீமான்கள் எம். சேவியர் மொத்தா, சந்தியாகு தேவராஜ்: ரூ. 2—0—0: ஸ்ரீமான்கள் பனிமய மொருயீஸ், ஜே. பீனாவிபர்ணாந்து, செல்லையா பர்ணாந்து, ஜி. சவரிமுத்து பிள்ளை, சேவியர் சோமநாதன், எம். ஞானதீபம் பிள்ளை, நானியல் எப். பாய்வ, இன்னொசென்ட் சேசின், தாசன் சொர் நீகோ, பீட்டர் பெர்ணாந்து: ரூ. 1-0-0: ஸ்ரீமான்கள் கே. ஜோசப் பர்ணாந்து, எம். அல்போன்ஸ் பர்ணாந்து, பீ ஜெகநாதன் பிள்ளை, செலஸ்தீன் பெர்ணாந்து, ஜே. பயஸ்டயஸ், அந்தோனிதாஸன் பர்ணாந்து, பீடூனஸ் பூபாலராயன், சைமன் பர்ணாந்து, அல்போன்ஸ் சேவியர் பர்ணாந்து, ஞானப்பிரகாசம் பிள்ளை, எஸ். மைக்கேல் பர்ணாந்து, எஸ். ஏ. ஜோசப், தாசன் டிமெல், பிலிப்பின், பேட்ரிக் கொரேரா, மைக்கேல் பர்ணாந்து, மரியநாயகம் பிள்ளை, தனிஸ்லாஸ் கொரேரா, ஆர். பொன்னையா பர்ணாந்து, ஜோசப் ஏ. சில்வா, ஜே ஜெயராயன் பர்ணாந்து, ராஜரெத்தினம் பர்ணாந்து, அன்டோ கொரேரா, ஜேம்ஸ் வில்லவராயர், டி. தனிஸ்லாஸ் பர்ணாந்து, பங்கிராஸ் கொரேரா, ஒரு தமிழன்.

ஆக ரூ. 53—0—0

அதிராம் பட்டணம், ஸ்ரீ ஆர். சம்பந்தமூர்த்தி செட்டியார் மூலம்:

ரூ. 7—0—0: ஸ்ரீமான்கள் ஆர் வரதராஜலு நாயுடு, டி. கனகசபை, என். ஸ்ரீராம், ஆர். சம்பந்த மூர்த்தி செட்டியார்: ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் பி. கனகசபாபதி, எம். கோவிந்தராஜலு, என். சுவாமிநாதன், பி. சுப்பராய பிள்ளை, பி. பண்டரிநாத நாயுடு, வி. வெங்கடேசன், ஆர். மருதுவேலு: ரூ. 5—0—0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடை. ஆக ரூ. 20—0—0

சென்னை, இண்டி, நாசநகர் ஹாஸ்டல், ஸ்ரீ எ. வீரசேகர பாண்டியன் மூலம்:


ரூ. 5—0—0: ஸ்ரீமான்கள் எ. வீரசேகர பாண்டியன், எம். கோபாலகிருஷ்ணன்: ரூ. 2—1—0: ஸ்ரீ ஜே. வஜ்ராங்க பாண்டியன்: ரூ. 2—0—0: ஸ்ரீ எஸ். சந்திரசாமி ரூ. 1—2—8: ஸ்ரீ எஸ். எஸ். வெள்ளையப்பன் ரூ. 1—1—0: ஸ்ரீ கே. வெங்கிடகிருஷ்ணன்; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் ஜோதி, எஸ். பி. ஆசிர்வாதம், என். பக்ரு சுப்பிரமணியன், ஜே. பர்னபாஸ், பி. ஜேம்ஸ் நியோபட், ஆர். எம் முத்துக்கிருஷ்ணன், எஸ். சேதுராமன், எஸ். கிருஷ்ணமூர்த்தி, எஸ். ஞானதேசிகன் வி. ஆவுடைநாயகம், எம். நடராஜன், டி. கே. வெங்கடராமன், அழகர்சாமி, கே. ஸ்ரீனிவாசன், கே. கிருஷ்ணசாமி, கே. துரைசாமி, டி. ஆர். ஸ்ரீனிவாசன், வெங்கிடராமன், ஆதிமூலம், எஸ் சுந்தரசாமி, மாத்ருபூதம், நரசிம்மன், பாலசுப்பிரமணியன்: ரூ. 3—12—0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடை. ஆக ரூ. 43—0—8

ஜப்பல்பூர், ஸ்ரீ பி. ஜெயராமன் மூலம்:

ரூ. 10—0—0: ஸ்ரீ பி. ஜெயராம்: ரூ. 9—0—0: ஸ்ரீ டி. எம். சர்மா: ரூ. 6—0—0: ஸ்ரீமான்கள் டி. எம். ஜகந்நாதன், டி. எம். ராமசந்திரன், என் நாகராஜ், எம். எஸ். சுப்பிரமணியம், பி. கே. கோபாலரத்னம், எஸ். நாமன், பி. கே. கௌரிசங்கர், ஒர் அன்பர்: ரூ. 3—0—0: ஸ்ரீமான்கள் கே. ஸ்ரீனிவாசன், கி எஸ். நாராயணசாமி, பி. ஆர். ஜி. தேவர், கே. துரைசுவாமி, எஸ். கிருஷ்ணய்யர், ஏ. கே. ஸ்ரீனிவாசன், ரூ. 2— —0: ஸ்ரீமான்கள் எஸ். ஆர். பிள்ளை, ஏ. ஜே. பிரான்சிஸ், கே. பி. தக்கர்ஸிங், வி. டி. சுவாமி; ரூ. 1—0—0: ஸ்ரீமான்கள் ஆர். சுப்பாராயன், எஸ். கேசரி. என். எஸ். மணி, ஏ. சிவராம், ஆர். கோபாலகிருஷ்ணன், டி. பி. ஸ்ரீனிவாசன், என். சுப்பிரமணியம், எஸ். சீதாராமன், டி. கே ஜெயராம், எஸ். போஸ், கி. ஜி. சங்கரன், எம். வி. கார்லேகர், எச். கெ. சாட்டர்ஜி, எச். கே. டட்டகுப்தா, வி. ஆர். டாமில், ஆர். என். முதுல்கர், கே. ராமன் நாயர், ஏ வி சிவராம், ஜே. பி. பிரபு, என். பி. சர்க்கார், டி. வி. அப்ரகாம், எம் குட்டாய், டி. ஜே. தனராஜ்: ரூ. 1-8-0: ஒரு ரூபாய்க்குட்பட்ட நன்கொடை.

ஆக ரூ. 115—8—0

கிட்டுவின் கேள்வி — 4.



கிட்டு:—அப்பா! ஏன் இவ்வளவு பேர் மோட்டார் சைகிளில் போகிறார்கள்?

தகப்பனார்:—இது தெரிய வில்லையா கிட்டு? இந்த நாளில் ரயிலிலேதான் அக நெருக்கடியாயிருக்கே, கூட்டத்தில் இடிபடணுமே என்றுதான்.

ஹலோ! யார் அது?

ஜோமாஸ்

நேரம்: மாலை மணி ஐந்து. இடம்: சுந்தரராமன் வீடு.

[ஆபீஸிலிருந்து வந்த சுந்தரராமன் வீட்டுக்குள் நுழைகிறான். அவன் மனைவி சரஸ்வின் பிரசவத்துக்கு இது மாதமாகையால் அவன் முகத்தில் கவலைக்குறி காண்கிறது. அதற்கேற்றாப்போல் அவன் உள்ளே நுழையும்போதே அவன் தங்கை உமாவும் அவள் சிநேகிதை சாந்தாவும் டெலிபோனில் பின்வருமாறு பேசிக் கொண்டிருக்கிறார்கள்.]

உமா :—ஹலோ! யாரது?

சாந்தா :—ஹலோ! ஆமாம். நான்தான் சாந்தா பேசுகிறேன். என்ன ஆயிற்று?

உமா :—சுகப்பிரசவம் தான்! ஆஸ்பத்திரியிலே கொண்டுபோய் விட்டு விட்டேன்.

சாந்தா :—ஆஸ்பத்திரியிலே விடும்படியாக அவ்வளவு சிரமமாக இருந்ததா?

உமா :—அண்ணாவும் வீட்டில் இல்லை. நான் தனியாக வீட்டிலே வைத்துக்கொண்டு என்ன பண்ணுவது? உன்னை நேரில் கண்டு சொல்லணும்னு பார்த்தேன். ரொம்ப நேரம் பஸ்ஸுக்குக் காத்துக் கொண்டிருந்தேன். பஸ் கிடைக்கவில்லை.



புதிதாகக் குடிவந்தவர் (வீட்டுக்காரரிடம்):—என்ன ஸார்! வீட்டில் நன்றாய்க் காற்று வரும் என்று சொன்னீர்களே; துளிக் காற்று வரவில்லையே?

வீட்டுக்காரர் :—என்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்? இந்த வீடு தெற்கு பார்த்த வீடு ஐயா; பேயான காற்று வரும்!

குடி வந்தவர்:—அப்படியா! இந்த வீடு தெற்கு பார்த்த வீடா? அடடா, எனக்கு இத்தனை நாளாய்த் தெரியாமல் போச்சே! இது சோவிக்கவரைப் பார்க்கும் வீடு என்னல்லவா எண்ணிக் கொண்டிருந்தேன்?

சாந்தா :— அது இருக்கட்டும். ஆஸ்பத்திரிக்குப் போய்ப் பார்த்தாயே, எப்படியிருக்கிறது?

உமா :—கேட்கணுமா? அப்படியே அம்மாளை உரித்து வைத்திருக்கிறது. கன்னங் கறேலுன்னு மயிர் வெல்வெட் மாதிரி வழுவழுன்னு இருக்கிறது. நீ பார்த்தால்......!

சாந்தா :—எனக்கு இப்போதே ஓடி வந்து பார்க்கணும் போல ஆசையாயிருக்கிறதடி! ஒரு வாரம் ஜுரமாய்ப் படுத்ததில் ரொம்ப பலஹீனமாயிருக்கிறது. இன்னும் இரண்டொரு நாட்களில் வருகிறேன்.

உமா :—போட்டோ எடுத்து வைத்திருக்கிறேனடி. எவ்வளவு அழகாயிருக்கிறது தெரியுமா?

சாந்தா:—அதற்குள்ளாகவா போட்டோ? நீ அவசரக்காரியடி!

உமா :—போட்டோ ஆஸ்பத்திரியிலேயே எடுத்தார்கள். அடேடே எத்தனையென்று சொல்லவில்லையே!

சாந்தா (ஆச்சரியத்துடன்):—இரட்டையா?

உமா:—இல்லையடி! நாலு.

சாந்தா :—நாலா? இது ரொம்ப அதிசயப் பிரசவம் அல்லவா? அதனாலேதான் ஆஸ்பத்திரியிலேயே போட்டோ எடுத்திருக்கிறார்கள். நாலும் நன்றாயிருக்கிறதா?

உமா :— நன்றாயிருக்கிறது, மூக்கும் முழியுமாக. நாலும் கறுப்புதான். வால் மட்டும்......


சாந்தா :—என்ன? வாலா? என்னடி உமா உளறுகிறாய்? யாரைப்பற்றி......?

உமா :—நீ யாரைப்பற்றிக் கேட்டாய்?

சாந்தா :—நம்ம சரஸுக்கு இது மாசமல்லவா? அதை நினைத்துக் கேட்டேன்.

உமா :—சரஸுக்கு இப்போது உடம்பு ஒன்றுமில்லை. அவள் அதோ சமையலறையில் இருக்கிறாள். நீ நமது நாய் ரோஸியைத்தான் கேட்கிறாய் என்று நினைத்து இத்தனை நாழியும் அதைப்பற்றி யல்லவா சொல்லிக் கொண்டிருக்கிறேன்!

[டெலிபோன் ரிஸீவரை 'டக்' என்று வைக்கும் சத்தம் கேட்கிறது.]





அவன் திருட்டு விற்பனையை ஒழிக்க உதவுகிறான்

தேசிய போர்முனையின் பிரசாரம்

AAA 1384—A. TM

KALKI—28-1-1945

26-1-1945 முதல்

★

நாகப்பட்டணம்
ஸ்டார்
டாக்கீஸில்



கும்பகோணம்
விஜயலக்ஷிமி
டாக்கீஸில்

★ ★ ★ ★

★

சாலிவாஹன்

பெங்களூர் பிள்ளை பிலிம் சர்க்யூடாரின் வெளியீடு!



தபால் விநோதம்

கு. சண்முகசுந்தரம்

தபாலாபீஸ்களில் நடக்கும் வேடிக்கைகள் பலவற்றுள், கடிதங்களில் விநோதமான விலாசங்கள் எழுதுகிறார்களே, அதனால் ஏற்படும் வேடிக்கையும் ஒன்று. நான் ஒரு போஸ்ட் மாஸ்டர். சில மாதங்களுக்கு முன் கீழே கண்ட நூதனமான விலாசம் ஒரு கவரில் எழுதப்பட்டிருந்தது கண்டு அதிக ஆச்சரிய மடைந்தேன்.

"18 வருஷம் 7 மாதம் 3 நாட்களுக்கு முன் இறந்து போன சுந்தரம் தங்கை குப்பம்மாள் கையில் கொடுப்பது."

சுந்தரம் என்பது யார்? ஆண் பாலா? பெண் பாலா? எந்தத் தெரு? இப்படி விலாசம் எழுதவேண்டிய அவசியம் என்ன? காரணம் பின்வரும் சம்பவமாக இருக்கலாமோ?

சில வருடங்களுக்கு முன்பு நான் ஒரு அமெச்சூர் நாடகத்தில் யமன் தர்பார் சீனில் சித்திரகுப்தனாக நடிக்கும்படி நேரிட்டது. அப்பொழுது என் பக்கத்தில் ஒரு பெரிய ஏட்டுச் சுவடிக் கட்டு இருந்தது. அந்த ஏட்டுக் கட்டில் இறந்தவர்கள், இறக்கப் போகிறவர்கள், அவர்களுடைய வரலாறுகள், பாவ புண்ணியங்கள் முதலிய எல்லா விவரங்களும் அடக்கமென்பதாக நடிப்பு. "இந்தப் போஸ்ட் மாஸ்டர்தான் சித்திர குப்தனாச்சே, அவருடைய ஏட்டுக் கட்டில் தான் எல்லா விவரங்களும் இருக்கிறதே! இறந்த நபரின் பெயர், வருஷம், மாதம், தேதி மட்டும் கொடுத்து விட்டால் அட்டவணையின் உதவியால் சுந்தரத்தின் விலாசத்தை ஏட்டிலிருந்து கண்டு பிடித்து, அதன் மூலம் தங்கை குப்பம்மாளுடைய விலாசத்தையும் அறிந்து கவரை 'டெலிவரி' செய்து கொள்ளட்டுமே!" என்று எண்ணினாரோ?

• • •

இவ்வளவு தூரம் நாகரிகம் முன்னேற்ற மடைந்த பிறகு கூட இன்னும் சிலர், மணியார்டர் பாரத்துடன் அவர்கள் கொடுக்கும் பணத்தையும் அப்படியே கட்டி அந்தந்த ஊர்களுக்கு அனுப்புவதாக நினைத்துக் கொண்டிருப்பது மிகவும் ஆச்சரியத்தை அளிக்கிறது. சில நாட்களுக்கு முன்பு ஒரு நபருக்கு அவருடைய மருமகனிடமிருந்து மணியார்டர் வந்தது. கரன்ஸி நோட்டுகளாகக் கொடுத்தேன் "என்ன, ஐயா! தில்லுமாறித்தனம் பண்றீங்க! என் மருமகன் எழுதியிருக்கிற கடுதாசியைப் பாருங்க, ஐயா!" என்று கோபமாகச் சொல்லி, அன்று அவருக்கு வந்த கடிதத்தையும் காண்பித்தார். கடிதத்தின் ஒரு பாகம் வருமாறு:—

'இப்பவும் தாங்கள் விரும்பியபடி, ரொம்ப சிரமப்பட்டு நோட்டுகளை ரூபாய்களாக மாற்றி மணியார்டர் செய்திருக்கிறேன். வெள்ளிப் பணம் கிடைப்பது குதிரைக் கொம்பா யிருக்கிறது. ஆனபோதிலும் தாங்கள் அவசியம் வெள்ளிப் பணமாக வேண்டுமென்று எழுதியிருந்த படியால், சிரமத்தைப் பாராட்டாமல் மாற்றி யனுப்பி யிருக்கிறேன்!"

• • •

ரிஜிஸ்தர் செய்வதற்காக வந்த கிழவர் ஒருவர் என்னிடம் கவரையும் ஸ்டாம்புக்காகப் பணத்தையும் கொடுத்து விட்டு, ரசீது எழுதுவதற்குள்ளாக வெற்றிலை போட்டுக்கொள்ள எண்ணி, தன்னுடைய வெற்றிலைப்



"என் குடையை எங்கேயோ வைத்து விட்டேன், காண வில்லை......"

"அதுதான் உன் தோளிலேயே இருக்கிறதே?"

"நல்ல வேளையாய்ப் போச்சு. நீங்கள் சொல்லா விட்டால் குடை யில்லாமலேயே வீட்டுக்குப் போயிருப்பேன்."

பையை மடியிலிருந்து எடுத்தார். சிறிது வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை முதலியவற்றை எடுத்துக்கொண்டு அப் பையைச் சுருட்டி, பக்கத்திலிருந்த சுவரில் பதிக்கப்பட்டிருந்த தபால் பெட்டியின் வாயில் வைத்து விட்டு வெற்றிலை போட ஆரம்பித்தார். பையை வைத்த இடம் தபால் பெட்டி யென்பது அவருக்குத் தெரியாது. பை உள்ளே பெட்டிக்குள் விழுந்து விட்டதும் தெரியாது. என்னிடம் ரசீதை வாங்கிக் கொண்டு தேடிப் பார்த்தார். பையைக் காணோம். அங்கு நின்ற இளைஞர் மேல் கண்ணோட்டத்தைச் செலுத்தினார். அவரைத் தவிர வேறு யாரும் அச்சமயம் ஆபீஸிற்கு வரவில்லை யென்று அறிந்த கிழவர், அவ்வாலிபர் தான் தம்மைக் கேலி செய்யும் பொருட்டுப் பையை எடுத்து ஒளித்து வைத்து விட்டதாக நிச்சயம் செய்துவிட்டார்.

ஆகவே, "நேரமாச்சு, தம்பி! வீட்டுக்குப் போகணும்! எடுத்து வச்சிருக்கிறதைக் கொடுத்துடு. என்னைக் கேலி பண்ணாதே!" என்று கிழவர் கேட்க ஆரம்பித்து விட்டார். தாம் எடுக்கவில்லை என்று இளைஞர் எவ்வளவு சொல்லியும் கிழவர் கேட்கவில்லை. இரண்டு பேரும் வரிந்து கட்டிக் கொண்டு சண்டைபோட ஆரம்பித்து விட்டார்கள்!

நான் எழுந்திருந்து வெளியே வந்தேன். 'என்ன ஐயா, ஆபீஸிலே சண்டை?" என்று கேட்டேன்.

"சாமி! நீங்க கேளுங்க! உங்ககிட்ட ரிஜிஸ்தர் செய்ய கவர் கொடுத்தேனா? அப்புறம் என் வெற்றிலைப் பையிலிருந்து கொஞ்சம் வெற்றிலை பாக்கு எடுத்துக்கிட்டு, பையைச் சுருட்டி இந்த மாடத்திலே வச்சேன்! உங்ககிட்ட ரசீதை வாங்கிக் கிட்டுப் பார்த்தா, பையைக் காணோம்! இவர் எடுத்து ஒளிச்சு வச்சுக்கிட்டு என்னிடம் ரகளை பண்ணுறாரு!" என்றார் கிழவர்.

"எந்த மாடத்திலே ஐயா வச்சே?" என்று திருப்பிக் கேட்டதற்கு, அந்தக் கிழவர் தபால் பெட்டியைச் சுட்டிக் காண்பித்தார். தபால் பெட்டியை ஒரு மாடம் என்று நினைத்துக் கொண்டிருக்கிற பிரகிருதியை என்னவென்று சொல்வது!

பொங்கல் வாழ்த்து!

பகீரதன்

பொங்கலன்று என் நண்பரைப் பார்த்து விட்டு வரலாம் என்று மாம்பலத்துக்குப் போயிருந்தேன். "எப்படி ஸார், பொங்கல்?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்த என்னைப் பார்த்தவுடன், எங்கே பொங்கல் சாப்பிடத்தான் வந்து விட்டேனோ என்று என் நண்பர் தம் கையிலிருந்த தினசரியைத் தமக்கு எதிரே இருந்த சர்க்கரைப் பொங்கலின் மீது போட்டுவிட்டு, "எங்கள் வீட்டில் இந்த வருஷம் பொங்கல் கிடையாது, ஸார்!" என்றார். நானும் அதைக் கவனிக்காதவன் போல் அவர் பக்கத்தில் உட்கார்ந்தேன்.

"எனக்குப் புது முறையிலே ஒருவர் பொங்கல் வாழ்த்து அனுப்பியிருக்கிறார், பாருங்கள்!" என்று பழைய முறையில் பனை ஓலையில் எழுதி அனுப்பியிருந்த ஒரு பொங்கல் வாழ்த்து ஓலையைக் கொண்டு வந்து என்னிடம் கொடுத்து விட்டு, "இப்படி அன்போடு வாழ்த்து அனுப்பிய அந்த நண்பரை மட்டும் எனக்கு யார் என்று தெரியவில்லை!" என்றார் நண்பர்.

"பெயர்தான் பாலகப்பு என்று போட்டிருக்கிறதே, ஸார்!" என்றேன் நான்.

"யாரது பாலகப்பு?"

"அடிக்கடி மறந்து போவது பெரிய மனுஷர் சுபாவம் போலிருக்கிறது!"

"இல்லை, ஸார்! உண்மையாகவே தெரியவில்லை."

"என்ன ஸார், நீர்தானே எனக்குக் கூட அவரை அறிமுகப்படுத்தி வைத்தீர்! ஒரு நாள் வைத்தியக் கல்லூரிக்குப் போகும் போது பிரமாதமாகக் கூப்பிட்டுச் சாப்பாடு கீப்பாடு எல்லாம் போட்டு அனுப்பி வைத்தாரே!"



"எனக்கு எப்பொழுதும் இப்படித்தான் ஸார்! ரொம்ப வேண்டியவர்களைக் கூட மறந்து விடுகிறேன்."

"அப்படி மறந்து போவதில் சற்று முன் உங்களுக்கு எதிரே இருந்த சர்க்கரைப் பொங்கலும் ஒன்று போலிருக்கிறது!"

"ஆமாம், ஸார்! மறந்து விட்டேன்! மன்னித்து விடுங்கள், ஸார்!" என்றார் என் நண்பர் தம் முகத்தில் அசடு வழிய.

"அவர் எப்பொழுதுமே இப்படித்தான்டா! எதையாவது சொல்லி விட்டு அப்புறம் மன்னித்து விடு, மறந்து விட்டேன் என்பார்!" என்று சொல்லிக் கொண்டே ஒருவர் உள்ளே வந்தார்.

"அடே! பாலகப்புவா! எப்பொழுது ஸார் வந்தீர்கள்?" என்று அவரைத் தழுவிக் கொண்டார் எனது நண்பர்.

எனக்குக் கோபம் கோபமாய் வந்தது. "இத்தனை நாழி 'பாலகப்பு என்றால் யார் என்று தெரியவில்லையே?' என்று வாதாடினீரே, அதெல்லாம் வெறும் வேஷமா?" என்று ஆத்திரத்துடன் கேட்டேன்.

"நீங்கள் நம்முடைய பாலகப்பு என்று எங்கே சொன்னீர்கள்? சொல்லியிருந்தால் தெரிந்திருக்கும்!" என்றார் என் நண்பர்.

"சரி சரி! இப்பொழுதிலே இந்த வருஷம் உங்கள் வீட்டில் பொங்கல் இல்லை யென்பதையும் மறந்துவிடப் போகிறீர்கள்!" என்று சொல்லிக்கொண்டே தான் என் நண்பருக்கு எதிரே இருந்த சர்க்கரைப் பொங்கலை எடுத்து நண்பர் பாலகப்புவுக்கு எதிரே வைத்தேன்.



உடுமலை பழநியாண்டவர் மில்ஸ் மானேஜிங் ஏஜண்டும் பெருங்கொடையாளரும், கம்மவார்குல திலகரும், பெருநிலக் கிழாருமாகிய பெதப்பம்பட்டி — ராவ் பகதூர் R. குருசாமி நாயுடு.

இவர், உடுமலைத் தாலூகா, பெதப்பம்பட்டியில் கம்மவார்குலத்தில், பெருஞ் செல்வம் நிறைந்த குடும்பத்தில் 1885-ம் ஆண்டு பிறந்தவர். இளமையில் அருந்தமிழ் பயின்றவர். சற்குண சம்பன்னர் உடுமலை, பொள்ளாச்சி தாலூகா போர்டுகளின் உறுப்பினராயும், கோவை ஜில்லா தேவஸ்தானக் கமிட்டியின் மெம்பராயும் பல வருடங்கள் இருந்து தொண்டாற்றியவர் பல நூல்மில்களிலும், உடுமலை நில அடமான பேங்கிலும் டைரக்டராயும், உடுமலை கவர்ன்மெண்ட் ஹாஸ்பிடல் அட்வைசரி கமிட்டியிலும், கோவை ஜில்லா யுத்தக் கமிட்டியிலும் அங்கத்தினரா யிருந்து தொண்டாற்றி வருகிறார். இவர் பெதப்பம்பட்டியில், ஆஸ்பத்திரி பள்ளிக்கூடம் முதலியவற்றிற்குரிய கட்டிடங்களை நவீன முறையிற் கட்டி யுதவியுள்ளார். சமீபகாலத்தில், உடுமலை அரசாங்க ஆஸ்பத்திரியில் அறுபதினாயிரம் ரூபாய் செலவில், தமது மனைவியார், R. G. இரத்தினம்மாள் அவர்களின் ஞாபகார்த்தமாக, பிரசவ விடுதி யொன்று அதற்குரிய சகல நவீன உபகரணங்களுடன் கட்டி உதவியுள்ளார். இவ் விடுதி, சென்ற ஆண்டு, மேன்மை தங்கிய சென்னை கவர்னர் சர் ஆர்தர் ஹோப் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. சென்ற இரண்டு மாத காலமாய், பழநியாண்டவர் மில்ஸ் பாக்கிய லட்சுமி ஹாலில், முத்தமிழ்ச் சொற்பெருங் கொண்டல் புரிசை சு. முருகேச முதலியார் அவர்களைக் கொண்டு கம்ப ராமாயணப் பிரசங்கத்தை நடத்தி, பட்டாபிஷேகமும் முடித்து பொது ஜனங்களின் நன்மதிப்பையும் பெற்ற பிரமுகர். இத்தகைய இவருடைய தர்மச் செயல்களைப் பாராட்டி, அரசாங்கம் இவருக்கு இவ்வாண்டு புது வருடப் பரிசாக ராவ் பகதூர் பட்டம் வழங்கி யிருக்கிறது. சிறப்பு வாய்ந்த இப் பெரியார் நீடூழி வாழ்க.

பெரியம்மா

செல்லம்

வனஜாவுக்குப் பெரியம்மாவின் இஷ்டப்படிதான் சீர் செனத்திகள் செய்து கல்யாணம் செய்தார்கள். அவள் அண்ணா சேதுவுக்கும் பெரியம்மாள் எப்படி சொல்லுகிறாளோ அப்படியே சீர் செய்து பெண்ணைக் கொடுத்தார்கள். சம்பந்தியாருக்கெல்லாம் பெரியம்மா என்றால் உள்ளூற நடுக்கம்தான். யாரையும் லட்சியம் செய்ய மாட்டாள். பெரிய ராணி போல்தான் பேசுவாள். அப்படி யாராவது தப்பித் தவறி ஒரு வார்த்தை சொல்லிவிட்டால் போச்சு! "இதுகளுக்கு என்ன தெரியும்? இரண்டு பெண்ணையும், பிள்ளையையும் பெற்றால் போதுமா? நாலு இடத்தில் சம்பந்தம் செய்தால்தானே தாரதம்யம் தெரியும்?" என்பாள்.

தலை கார்த்திகை. பெரியம்மா சொல்படி வனஜாவுக்குச் சீர் வகையறாக்களெல்லாம் செய்து வைத்திருந்தார்கள். ஆனால் நாளைக்குக் கார்த்திகை. இன்று வரையில் அவள் புக்ககத்திலிருந்து ஒருவரும் வரவில்லை. வனஜாவுக்குக் காரணம் தெரியும். ஆனால் எப்படி பெரியம்மாவிடம் சொல்வது? அப்பா, அம்மாவிடம் வேண்டுமானால் சொல்லலாம். சொல்லி என்ன பிரயோஜனம்? எல்லோருக்கும்தான் பெரியம்மாவிடம் பயமாச்சே! ஆகையினால் வனஜா ஒருவரிடமும் சொல்லவில்லை. மனதிற்குள்ளேயே வருத்தப்பட்டுக் கொண்டிருந்தாள். சேதுவின் மனைவியைப் பெரியம்மா சொல்படி அப்பா போய் அழைத்து வந்தார்.

கார்த்திகை. புதுப் புடவை உடுத்திக் கொண்டு வனஜாவும், அவள் மன்னியும் விளக்கேற்றி வைத்தார்கள். எல்லோரையும் நமஸ்காரம் செய்து விட்டு, அண்ணாவை நமஸ்காரம் செய்வதற்காக வனஜா மாத்திரம் தனிமையாய் மாடிக்குப் போனாள். உள்ளே இருவர் பேசும் குரல் கேட்டது. அது அவள் அண்ணாவும் மன்னியும்தான்.

"வனஜாவும் கார்த்திகைக்குப் புக்ககம் போயிருப்பாள் என்று நினைத்தேன். என் அவர்கள் அழைக்கவில்லை?" என்றாள் மன்னி.

"அதை யார் கண்டார்கள்? நீ வந்தது எனக்கு ரொம்ப சந்தோஷம். ஒருவேளை எங்கு நீ வராமல் இருந்து விடுவாயோ என்று......"

"நான் மாத்திரமா வந்தேன்? உங்களுக்கு என்று ஒரு சாமான் கொண்டு வந்திருக்கிறேனே! எங்கே, கையை நீட்டுங்கள்."

நீட்டின கையில் மன்னி ஏதோ கொடுத்தாள்.

"பேஷ்! கெட்டிக்காரி! நான் ஆசைப் பட்டது கிடைத்து விட்டது. விரலுக்கு ரொம்ப சரியாக இருக்கிறதே! அழகான வைரமோதிரம். சரி, உனக்கு நான் பதிலுக்கு என்ன அளிப்பது?" என்றான் சேது.

அதற்குமேல் வனஜாவால் அங்கு நிற்க முடியவில்லை. — இந்த வைர மோதிரத்தினால்தான் எனக்கு அவரைக் காணும் பாக்கியம் கிடைக்கவில்லை. பெரியம்மா பிடிவாதக்காரி. நான் படும் கஷ்டம் அவளுக்கு என்ன தெரியும்? "வனஜா! புதுப் புடவை கட்டிக்கொள். நகையெல்லாம் எடுத்துப் போட்டுக்கொள்" என்று சட்டமிடுகிறாள். நான் யாரிடம் அன்பு கொண்டேனோ அவர் மட்டும் வரவில்லை. எனக்கு எதற்கு அலங்காரம்?

கீழே போய்ப் புதுப் புடவை, நகையெல்லாம் கழட்டி வைத்து விட்டு வனஜா இருண்ட மூலையில் போய்ப் படுத்துக் கொண்டு அழுதாள்.

"எங்கெல்லாம் உன்னைத் தேடினேன்? கண்ணைத் துடைத்துக்கொள், வா" என்று மன்னி வனஜாவின் கையைப் பிடித்துத் தூக்கினாள். வனஜாவும் மன்னியின் பிடியிலிருந்து தப்ப முடியாமல் அவளுடன் மாடிக்குச் சென்றாள்.

இருவரும் சம வயதுடைய சிறுசுகள் தானே? அவர்கள் தங்கள் கணவன்மாரைப் பற்றிப் பேச ஆரம்பித்தார்கள்.

"எல்லாம் இந்தப் பெரியம்மாவினால்தான் வந்தது. தீபாவளிக்கு வந்தவரை என்ன பாடு படுத்தினாள், தெரியுமா? முதலில் பெரியம்மாவை நமஸ்காரம் பண்ண வில்லையாம். என்னை மதிக்காதவனுக்கு வைரமோதிரம் போட முடியாது என்று அப்பாவிடம் கண்டிப்பாய்ச் சொல்லி விட்டாள். அப்பாவோ பெரியம்மாவுக்குத் தெரியாமல் ஒரு காரியமும் செய்யமாட்டார். நான் எவ்வளவோ சொன்னேன். அவரைக் கெஞ்சியும் கேட்டேன். அவர் உங்கள் பெரியம்மா இருக்கும் வரையில் நாம் சந்தோஷமாய் வாழ முடியாதென்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். இந்தக் கார்த்திகைக்காவது அழைப்பார், அதைக் கொண்டு அவரை மெள்ள சரிப்படுத்தலாமென்று நினைத்தேன். அதுவுமில்லை. இப்பொழுது அவரோ படிப்பு விஷயமாக, பம்பாய்க்குப் போகிறாராம். வர ஒரு வருடம் ஆகுமாம். அது வரை என்னைச் சமத்தாய் இருக்கும்படி கடிதம் எழுதியிருக்கிறார்" என்றாள் வனஜா.

"கடிதம் வந்தது பெரியம்மாவுக்குத் தெரியுமா?"

"ஏன் தெரியாது? நன்றாய்த் தெரியும். 'தானே வருகிறான் பயல்!' என்கிறாள். நான் படும் வேதனை அவளுக்கு என்னமாய்த் தெரியும்? என் மாமனாரும் 'வைர மோதிரம் போட லாயக்கில்லாதவா வீட்டில் என்னடா சம்பந்தம்?' என்கிறாராம். அவர் எவ்வளவோ நல்லவர்தான். இருந்தாலும் பெரியம்மா எல்லோரையும் இப்படி அவமதிக்கக் கூடாது. நானும் அவருக்கு எவ்வளவோ கடிதம் எழுதினேன், பெரியம்மாவுக்குத் தெரியாமல் வைரமோதிரம் போடுகிறேன் என்று. அவரும் பிடிவாதக்காரர் மனமில்லாமல் செய்வது வேண்டாமென்கிறார். ஆகையினால், எனக்கு ஆதரவு அளிப்பவர் ஒருவரும் இல்லை" என்று அழுதாள் வனஜா.

இதற்குள் பெரியம்மா அழைக்கவே, இருவரும் கீழே இறங்கிப் போய்விட்டார்கள்.

மறு வருடம் துலா ஸ்நானம் பண்ணினதில் பெரியம்மாவுக்கு உடம்பு சரியாக இல்லாமலிருந்தது. ஒரே படுக்கையாய்ப் போய்விட்டது. வர வர உடம்பு துரும்பாய் இளைத்தது. வைத்தியன் பிழைப்பதே கடினம் என்று சொல்லி விட்டான். எல்லோரும் வந்து பார்த்து விட்டுப் போய் விட்டார்கள். "வனஜாவின் கணவன் என்னை வந்து பார்க்கவில்லையே? அவன் வந்து பார்த்து, அவன் கையில் வனஜாவை ஒப்புவித்தால்தான் என் மனம் நிம்மதி யடையும். ஒரு வைர மோதிரத்திற்காக என் குழந்தையின் வாழ்வைப் பாழடித்தேனே!" என்று தினமும் புலம்ப ஆரம்பித்து விட்டாள் பெரியம்மா

பெரியம்மா சொல்படி வனஜாவின் கணவருக்குத் தந்தி கொடுக்கப்பட்டது. தந்தி கிடைத்ததும் அவரும் வந்தார். "பெரியம்மா! எப்படி இருக்கிறது உடம்பு?" என்றார்.

"வந்தாயா? வாடா, அப்பா! உன்னைப் பார்க்காமல் வனஜாவின் உடம்பு துரும்பாய் இளைத்துப் போய் விட்டது" என்றாள் பெரியம்மா.

"உங்களுக்கு உங்கள் பெண்தான் பெரிசு! என்னைப் பார்த்தீர்களா? என் உடம்பு எப்படிக் குச்சியாய்ப் போயிருக்கிறது, கவனிப்பார் இல்லாமல்!" என்று வனஜாவைக் கடைக் கண்ணால் பார்த்துக் கொண்டே சொன்னார் அவர்.

பெரியம்மாள் உள்பட எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள். வனஜாவை வெட்கம் பிடுங்கித் தின்றது.

"வனஜா! என் தலைமாட்டின் கீழ் சாவி இருக்கு, பார்! அதை எடுத்துக் கொடு!" என்றாள் பெரியம்மா. வனஜா அதை எடுத்துக் கொடுத்தாள். கைப்பெட்டியைக் கொண்டு வரச் சொல்லி, அதிலிருந்து ஒரு சிறு பெட்டியை எடுத்து வனஜாவின் கணவரிடம் நீட்டினாள் பெரியம்மா. அவர் அதை வாங்கித் திறந்தார். அதில் வேறு ஒன்றுமில்லை; அது வரை மனஸ்தாபத்திற்குக் காரணமான வைரமோதிரமே!

மனத்திற்குச் சாந்தி கிடைத்ததும், பெரியம்மாவின் ஜீவனும் கூட்டிலிருந்து விடுதலையடைந்தது.

அடுத்த கார்த்திகை யன்று வனஜா புதுப்புடவை உடுத்திக் கொண்டு சந்தோஷமாக விளக் கேற்றுகிறாள். கையில் பழத் தட்டுடன். கணவனைத் தேடிக் கொண்டு மாடிக்குச் செல்லுகிறாள். அவன் கையைப் பிடித்து, அதில் பெரியம்மாள் கொடுத்த வைர மோதிரத்தை இட்டு, "இனி உன்னையும், உன் கை மோதிரத்தையும் கைவிடேன்!" என்று அவள் இரு கைகளையும் சேர்த்துப் பிடித்துக் கொள்கிறான் அவள் கணவன்.

ஹாஸ்ய ரஸம்

சிரிப்புக்கு நிரந்தரமான ஸ்தானம் மனித வாழ்க்கையில் உண்டு என்பதை ஸ்தாபிப்பதே கஷ்டமான காரியம். ஆசிரியர்கள், புலவர்கள், அரசியல் வாதிகள் எல்லோருமே ஹாஸ்யம் அகௌரவம் என்று கருதுகிறார்கள். அதோ, அழுத கண்ணும், சிந்திய மூக்குமாக சுத்தப் பிரம்மத்தைப் பற்றி ஓயாமல் கதறிக் கொண்டிருக்கிறாரே, அந்தத் தத்துவ சாஸ்திரியார், அவர் ஏன் முகத்தை ஒன்றரை முழம் தொங்க விட்டுக் கொண்டு பேசுகிறார்? அப்பொழுதுதான், விஷயத்துக்குக் கௌரவம் கொடுப்பார்கள் பொதுமக்கள் என்று அவர் நினைக்கிறார். ஆனால், அவர் எவனைப் பற்றிக் கதறுகிறாரோ, அவன் எல்லையற்ற ஹாஸ்ய ரசிகன் என்பதை சாஸ்திரியார் மறந்து விடுகிறார். பொருமையும், அகங்காரமும், ஆணவமும் தாண்டவமாடிய திரிபுரத்தை இறைவன் கண்ணினாலல்ல, நெற்றிக் கண்ணால் அல்ல, கொவ்வைக் கனி வாயின் குமின் சிரிப்பினால் அல்லவா பஸ்பமாக்கினான்?

"சீராரூர் மேவும் சிவனே
—சிரிப்பன்றோ
நேராரூர் அச்ச நிலை"

என்றார் ஒரு புலவர்.



தத்துவ சாஸ்திரியார்

சிரிப்புக்கு அவ்வளவு தெய்விக சக்தியிருக்கிறது. அழுமூஞ்சிச் சித்தர்களை, தொங்குமூஞ்சி சித்தாந்தங்களை, தீமையை, போலித்தனத்தை முறியடித்துத் தவிடு பொடியாக்க வேண்டுமேயானால், 'கொல்'லென்று சிரிப்பால் உலகத்தைக் குலுக்க வேண்டும்; குலுக்கி மனித வாழ்க்கையைப் புனிதமாக்க வேண்டும்.

மனிதனுடைய சிரிப்பானது கடவுள் தந்த வரப் பிரஸாதம் என்று கண்டார் ரவீந்திரநாத் டாகூர். குழந்தையின் முகத்திலே கொப்புளித்து அரை நொடியில் மறையும் புன் முறுவலைக் கண்டு மோகித்து அவர் சொன்னார்:— "வஸந்த காலச் சந்திரனின் வெள்ளிக் கதிர்கள் நீலமேகத்தின் முன்றானையைப் பிடித்து முத்தமிடும் போதல்லவா, உன் தெய்விகப் புன் சிரிப்புத் தோன்றியிருக்க வேண்டும்!" என்று அதிசயித்தார்.

சிரிப்பைக் காட்டிலும், சிரிப்புக்கு மூலகாரணமாக நிற்கும் மனோபாவம் தான் பிரதானமானது. நகைச் சுவையிலே பலரகமுண்டு. கேவலம் வார்த்தைகளுடைய பொருந்தாமையினால் ஏற்படுகிற சிரிப்பு சாரமில்லாதது. "சின்னக் குதிரைக்குக் கொஞ்சம் புல் போடு" என்று சொல்ல நினைத்த அயல் நாட்டான், "கொஞ்சக் குதிரைக்குச் சின்னப் புல் போடு" என்று சொல்லுகிறான். அவனுடைய வார்த்தை முரண்பாட்டிலே ஏற்படும் சிரிப்பு மட்டமான சிரிப்பு

ஒரு செயலுக்கும் மற்றொரு செயலுக்கும் உண்டான பொருந்தாமை காரணமாக ஏற்படும் நகைச் சுவையானது ஒரு படி மேலானது.

பல வருஷங்களுக்கு முன், நான் மாணவனாக இருந்த காலம். எங்கள் கணக்கு வாத்தியாருடைய ஸ்வரூபம் மனக் கண் முன் வந்து தோன்றுகிறது— நெற்றி மேலணிந்த மூக்குக் கண்ணாடியோடும், அங்கையில் அடக்கிய நத்தப் பொடி டப்பியோடும், கம்பு சமேதராக வருகிற காட்சி.

ஒரு நாள் அவர் முக்கோணத்தின் மர்மங்களைக் கரும் பலகையில் விஸ்

தகித்துக் கொண்டிருந்தார். நாங்கள் கொட்டாவி விட்டுக் கொண்டிருந்தோம். என் பக்கத்திலிருந்த மாணவன் ஒருவன் ஒரு சிமிட்டா பொடியை எடுத்து உறிஞ்சினான். அதைப் பார்த்துவிட்டார் வாத்தியார். இடி போல் முழங்கிக் கரடிபோல் உறுமி என் சிநேகிதனைப் பார்த்து, "ஏறு கழுதை, பெஞ்சு மேலே!" என்று கட்டளையிட்டார். அவனுடைய பொடி டப்பியைப் பறிமுதல் செய்து, தன்னுடைய மேஜை மேல் வைத்தார். வகுப்பு முழுவதும் கோர மௌனம் சூழ்ந்து கொண்டிருந்தது. இரண்டு நிமிஷம் கழிந்தது. வாத்தியாருடைய கை தன்னை அறியாமலேயே மேஜை மேலிருக்கும் பொடி டப்பியை நாடியது. டப்பியைத் திறந்து ஒரு சிமிட்டாவை யெடுத்து நஸ்யம் செய்தார். உடனே அவர் முகத்திலேயிருந்த கோபம் மாறி சாந்தி பிறந்தது. "பொடி நல்லாயிருக்கு, கழுதை! உட்காரு!" என்று சொல்லி வாத்தியார் கோப சாந்தி செய்து கொண்டார்.

வார்த்தை, செயல், சந்தர்ப்பம் இவைகளை அடிப்படையாகக் கொண்ட நகைச் சுவையைக் காட்டிலும், மனித வாழ்க்கையிலுள்ள இன்ப துன்பங்கள், சிருஷ்டி தத்துவத்திலுள்ள வக்ரங்கள்—இவைகளை அஸ்திவாரமாகக் கொண்ட ஹாஸ்யமே மகோன்னதமானது. இந்த ஹாஸ்யத்தை உணர்ந்து அனுபவிப்பதற்குத் தத்துவம், கலை இவைகளில் ஈடுபட்டுப் பண்பட்ட பரிபக்குவ நிலையை யடைந்தால்தான் முடியும். காலச் சக்கரத்தின் சுழற்சியிலே ஏற்படும் விபரீதங்களை மனிதன் அறிவதில்லை. தான் சாகா வரம் பெற்று வந்த சிரஞ்சீவி என்று அவன் தர்பார் நடத்துகிறான். அவனுடைய உண்மை நிலையைத் திக்கதரிசிகளான நாய்களும், நரிகளும் அறியும் என்ற தோரணையில் பட்டினத்தார் பாடுகிறார்:—

"பருத்த தொந்தி
நம்மதென்று நாமிருக்க
நாய் நரிகள் பேய்கழுகு
நம்மதென்று தாமிருக்கும் தான்"

என்ற முத்தாய்ப்பிலே, வாழ்க்கையில் உள்ள முரண்பாட்டைப் பட்டினத்தார் அபரிமிதமான நகைச் சுவையோடு அனுபவித்திருக்கிறார் என்று தெரிகிறது.

உண்மையில், உயர்தரமான ஹாஸ்யத்தின் எல்லையை சோகத்தின் சிகரத்



"பொடி நல்லாயிருக்கு, கழுதை!"

தில் நின்று கொண்டுதான் பார்க்க முடியும். கண்ணீரை வடித்தெடுத்து அதிலிருந்து ஹாஸ்யத்தை இறக்கும் ரஸவாதத்திலே கம்பரைப் போன்ற மகாகவிகள் கை தேர்ந்தவர்கள். அரண்மனை வாழ்க்கை யல்லாமல் வேறு துன்ப வாழ்க்கை யறியாத சீதை ராமனோடு வனவாசம் செய்யப் புறப்பட்டாள். காடு என்பது சோலைப்புறம் என்று நினைத்துக் கொண்டிருந்தாள் சீதை. அயோத்தி நகரிலே யுள்ள வீதிகளைக் கடந்து இன்னும் கோட்டை வாசலைத் தாண்டவில்லை. அதற்குள், "கானகம் வந்து விட்டதா?" என்று ராமனைக் கேட்டாள் அந்தப் பேதை.

இந்தச் சம்பவத்தை அசோக வனத்திலே சோகத்தால் உருகிக் கொண்டிருந்த சீதைக்கு ஞாபகப் படுத்துகிறார் கம்பர். காடு என்பது என்ன, அதன் பயங்கரம் என்ன, வனவாசத்தின் விபரீதம் என்ன என்பதை யெல்லாம் அனுபவ மார்க்கமாக உணர்ந்த அசோக வனச் சீதைக்கு, பேதையாய், பிள்ளையாய், உல்லாச விளையாட்டு விளையாடிக் கொண்டிருந்த அயோத்திச் சீதையை ஞாபகப் படுத்துகிறார், ஹனுமான் மூலமாக:

"நீண்ட முடி வேந்தனருளேந்தி
நிறை செல்வம்
பூண்டதனை நீங்கி நெறி
போதலுறும் நாளில்

ஆண்டநர் ஆரையொடு
வாயில கலாமுன்
'யாண்டையது கான்?' என
இசைந்தும் இசைப்பாய்."

அசோக வனச் சிதைக்கும், அயோத்திச் சிதைக்குமுள்ள பொருத்தமையிலே பெரு மூச்சு கலந்த ஹாஸ்ய மிருக்கிறது; கண்ணீர் தோய்ந்த சிரிப்பு இருக்கிறது.

உண்மையில் ஒவ்வொரு மனிதனுக்குமே இந்த நிலை ஏற்படுகிறது. அறுபதாவது வயதிலே ஒரு மனிதன் தன் சென்ற கால வாழ்க்கையைப் பின் நோக்காகப் பார்க்கிறான். தான் பட்ட கஷ்டங்களை, தன் பால்யப் பேதைமைகளை யெல்லாம் நினைக்கும்போது, இல்லாத ஆனந்தத்தை யடைகிறான்.

பள்ளிப் பிள்ளையா யிருக்கும்போது 'சடுகுடு' விளையாட்டிலே சண்டை வந்து என் பல்லை உடைத்தானே அந்த ராமசாமி, அவனை என்னுடைய விருந்தாப்பியத்திலே நான் சந்திக்கும்போது கோபமா வருகிறது? இன்ப ஊற்றல்லவா பெருக்கெடுத் தோடுகிறது! "அடேய், ஐம்பது வருஷத்துக்கு முன் உலகம்மன் கோயிலுக்கு முன் 'சடுகுடு' விளையாடும்போது, நீயும் ஒன்னரைக் கண்ணு வீராசாமியும் என் பல்லை உடைத்தது ஞாபக மிருக்கிறதா? அடடா. அந்தக் காலமெல்லாம் திரும்பியா வரப்போகிறது. என்ன ஆனந்தமான காலம்!" என்றுதானே சொல்லத் தோன்றுகிறது! பல் உடைபட்டபோது இருந்த அவஸ்தையும், அவமானமும் இன்பத்தைக் கொடுக்கக் கூடிய ஆனந்த நினைவுகளாக மாறி விடுகின்றன, ஐம்பது வருஷங்களுக்குப் பின்னால்!

மனிதனுடைய கோபம், வெறி, ஆணவம், டம்பம் எல்லாம் காலச் சக்கரத்தில் ஹாஸ்யச் சுழற்சியிலே நிறம் மாறி, குணம் மாறி, அழிவற்ற இன்ப மலராக மலர்ந்து விடுகிறது. இந்த ரஸ வாதத்துக்கு இன்றி யமையாத சாதனமா யிருப்பது நகைச்சுவை. நகைச் சுவையற்றவர்களுக்குப் பண்பாடு இல்லையென்று சொன்னார் வள்ளுவர். சிரிக்கத் தெரியாதவனுடைய மனதில் பட்டப் பகலிலும் படர்ந்து நிற்பது அந்தகாரம், ஞான சூன்யம் என்பதைக் குறளாசிரியர் ரொம்பக் காரமாகச் சொன்னார்:

"நகல்வல்லர் அல்லார்க்கு
—மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன்று இருள்"

என்பது குறள்.

காலக்ஷேபம்

காரணம் சரிதான்!

ஜட்ஜ்:—சரி, நீர் அந்தப் பெண்ணுடன் தனிமையில் பேசிக் கொண்டிருந்தபோது திருடன் உள்ளே நுழைந்தானா?

சாக்ஷி:—ஆமாம்.

ஜட்ஜ்:—திருடன் வந்ததும் வராததும் ஏன் சுவர் மீது ஏறி வெளியே குதித்தீர்?

சாக்ஷி:—அந்தப் பெண்ணின் தகப்பனார் தான் வந்து விட்டாரோ என்று நினைத்து விட்டேன். —டி. ஏ. கிருஷ்ணமூர்த்தி.

★

வீண் கேள்வி

பிரசங்கி:—சகோதரர்களே! நம் தேசத்தில் அரிசிப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் அதிகப்படி கோதுமையை உற்பத்தி செய்து உபயோகிக்கவும் வேண்டும்.

கூட்டத்தில் ஒருவர்:—வைக்கோல் உற்பத்தி செய்ய வேண்டாமா?

பிரசங்கி:—நான் இப்பொழுது மனிதர்களின் உணவைப் பற்றிப் பேசுகிறேன். முடிந்தவுடன் உங்கள் விஷயத்திற்கு வருகிறேன். —கே. ராமசாமி.

★

நல்ல காரணம்

பாடகர்:—இன்று காலை நான் பாடிக் கொண்டேயிருக்கும் போது என் செவிட்டு அத்தை திடீரென்று மூர்ச்சை போட்டு விழுந்து விட்டாள்.

நண்பர்:—ஏன்? அவளுக்குக் காது கேட்க ஆரம்பித்து விட்டதோ?

—ஆர். கே. ரங்கராஜன்.

★

சரியான பதில்

ஒரு சில்லறை வியாபாரி ஒரு பெரிய கம்பெனிக்குச் சொற்ப சாமான்களுக்கு ஆர்டர் செய்திருந்தார். வெகு காலமாகியும் தன்னுடைய ஆர்டருக்கு ஒருவித பதிலும் வரவில்லை. உடனே அவர், "என் ஆர்டரை 'கான்ஸல்' செய்து விடவும்" என்று கம்பெனிக்குத் தந்தி யடித்தார். மறு தபாலில் கம்பெனிக்காரர்கள் கீழ்க் கண்டவாறு பதிலளித்தனர்.

"வேலை ஜாஸ்தியாக இருப்பதால், உங்கள் வேண்டுகோள் சிறிது பொறுத்தே கவனிக்கப்படும்."

—கே. வி. ராமசுப்ரமணியம்.

உடம்பு சரியில்லை!

வேலைக்காரன்:—எசமான், உங்களைப் பார்க்க டாக்டர் வந்திருக்கிறார்.

எஜமானன் (ஞாபக மறதியாக):—எனக்கு உடம்பு சரியாயில்லை; பார்க்க முடியாதென்று சொல்லி விடு. —எஸ். ஹேமலதா.

★

போலீஸ் கெடுபிடி

போலீஸ்காரர்:—ஸார்! நிறுத்துங்க, சைகிளில் விளக்கு இல்லாமல் போறீங்களே!

வந்தவர் (சப்-இன்ஸ்பெக்டர்):—டேய்! நாக்கிப்பதிஜெண்ணு! உனக்கு ஜெயில் வார்டிலே இப்போ டியூடி போட்டிருந்தா இக்கெல்கேடா சத்தமே?......

—என். ஞானசம்பந்தன்.

★

தெரியாத விஷயம்!

மோட்டார் ஓட்டி:—மோட்டார் ஓட்டுவதைப்பற்றி எனக்குத் தெரிந்த விஷயம் அவ்வளவையும் எழுத ஒரு முழு புஸ்தகமே தேவையாயிருக்கும்.

கான்ஸ்டேபிள்:—இருக்கலாம். ஆனால் அதைப் பற்றி உமக்குத் தெரியாத விஷயத்துக்கு ஒரு முழு ஆஸ்பத்திரியே தேவை.

—வி. ராமநாதன்.

★

கொசு ரேஷன்

"ஸார்! இந்தக் கொசு உபத்திரவத்துக்கு என்ன செய்கிறீர்கள்?"



"நான் இரண்டு பேர்களை என் பக்கத்தில் படுக்க வைத்துக் கொள்கிறேன். எல்லாக் கொசுவும் என்னைக் கடிக்காமல் அவர்களுக்குக் கொஞ்சமாகக் கடிக்கும்படி ரேஷன் செய்து விடுகிறேன்."

—என். கிருஷ்ணமூர்த்தி

குறிப்பு:—இந்த இதழிலிருந்து பரிசு பெற்ற காலக்ஷேபத் துணுக்குக்குப் பத்து ரூபாய் பரிசு அளிக்கப்படும்.



நண்பர்கள், ஜாக்கிரதை!

நாடோடி

"இலக்கிய நண்பர்கள் சங்கம்" என்று ஒரு சங்கம் சென்னையில் கொஞ்ச காலமாக நடந்து வருகிறது. இச்சங்கத்துக்குத் திடீரென்று ஒரு நாள் தன் அடிப்படையிலேயே சந்தேகம் வந்துவிட்டது. பல கூட்டங்கள், பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தவர்கள் திடீரென்று ஒரு நாள், "இலக்கியம் என்றால் என்ன?" என்று ஒருவரையொருவர் கேட்க ஆரம்பித்துவிட்டார்கள்.

இதற்கு அடுத்த கூட்டத்தில், "நண்பர்கள் என்றால் யார்?" என்று அவர்கள் கேட்டுக் கொள்வதற்கு முன், நண்பர்களைப் பற்றிய என் அபிப்பிராயத்தைத் தெரிவித்து விடுவது என்று தீர்மானித்துவிட்டேன்.

நம்முடைய பெரியவர்கள் எத்தனையோ விஷயங்களில் தவறுதலான அபிப்பிராயம் கொண்டிருந்ததுபோல் நண்பர்கள் விஷயத்திலும் தவறுதலான அபிப்பிராயமே கொண்டிருந்தார்கள்.

நண்பர்கள் யார் என்பதைப் பற்றி நம் பெரியவர்கள் கொண்டிருந்த அபிப்பிராயத்தை இப்பொழுது நினைத்துப் பார்த்தாலும் எனக்குச் சிரிப்புச் சிரிப்பாக வருகிறது.

நண்பர்கள் என்றால் எப்பொழுது பார்த்தாலும் தன் நண்பனுக்கு எப்பொழுது ஆபத்து வரப் போகிறது என்று பக்கத்தில் இருந்து காத்துக் கொண்டே இருக்க வேண்டுமாம், ஆபத்து வந்ததும் உடனே ஓடிப் போய் தனக்கு அதனால் வரும் கஷ்டத்தையோ, ஆபத்தையோ பொருட்படுத்தாமல் நண்பனுக்கு வேண்டிய உதவியைச் செய்ய வேண்டுமாம்.

இதுதான் நண்பர்களைப் பற்றி நம் பெரியவர்கள் கொண்டிருந்த கருத்து!

இக் கருத்தை வலியுறுத்துவதற்காகப் பெரியவர்கள் எத்தனையோ கதைகள் எழுதி வைத்தார்கள். தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாயும் என்பதுபோல் பெரியவர்களையும் தூக்கியடிக்கும் படியாய்ச் 'சிறியவர்கள்' கதை எழுதிக்கொண்டு வருகிறார்கள்.

இக்கதைகளில் கதா நாயகன் மாறி மாறி ஏதாவது ஒரு ஆபத்தில் அகப்பட்டுக் கொண்டே போவான். அவன் இப்படி ஆபத்தில் அகப்பட்டுக் கொள்வதைப் பார்க்கும்போது வேண்டுமென்றேதான் செய்கிறானோ என்று கூடத் தோன்றும். தன் நண்பனைச் சோதிப்பதற்காகவே ஆபத்தில் அகப்பட்டுக் கொள்ளும் கதா நாயகர்களும் உண்டு!

இப்படி வரும் ஒவ்வொரு ஆபத்துச் சமயத்திலும் தான் எங்கிருந்தாலும் ஓடி வந்து கதாநாயகனைக் காப்பாற்ற வேண்டியது நண்பனின் கடமை! நண்பன் கதாநாயகனைக் காப்பாற்றிய பிறகு உத்தம நட்பு என்றால் என்ன என்று நூலாசிரியர் பத்துப் பக்கத்துக்கு எழுதியிருப்பதை வாசிப்பது நம் கடமை!

நட்பைப் பற்றித் தாமே சொன்னால் நாம் கேட்போமோ, மாட்டோமோ என்று ஒரு நூலாசிரியர் ஒரு தந்திரம் செய்தார். ஒரு கரடியை விட்டே இந்த உபதேசத்தை, அதுவும் நம் சிறு வயதிலேயே நமக்குச் சொல்லச் சொல்லிவிட்டார்.

இரண்டு நண்பர்கள் காட்டு வழியாக நடந்து போகிறார்கள். அப்பொழுது ஒரு கரடி வருகிறது. உடனே ஒரு நண்பன் மரத்தின் மீது ஏறிக் கொண்டு விடுகிறான். இன்னொரு நண்பன் கீழே படுத்துக் கொண்டு, செத்தவன் போல் பாசாங்கு செய்கிறான். கரடி கீழே

படுத்துக் கொண்டிருக்கிறவன் காதில் ஏதோ சொல்லிவிட்டுப் போகிறது. கரடி போனதும் மரத்தின்மீதிருந்தவன் கீழே இறங்கி வருகிறான். "கரடி என்ன சொல்லிற்று?" என்று கேட்கிறான். அதற்குக் கீழே படுத்தவன், "ஆபத்துக் காலத்தில் உதவாத நண்பர்களை நம்பாதே!' என்று கரடி சொன்னதாகச் சொல்கிறான் — என்று இரண்டாவது வகுப்பில் வாசித்தோமே அந்தக் கதையைத்தான் குறிப்பிடுகிறேன்.

இது எவ்வளவு அபத்தமான கதை, இதைச் சிறுவர்களுக்குப் பாடமாக வைத்துப் போதிப்பதே எவ்வளவு தவறு என்று இதோ எடுத்துக் காட்டுகிறேன்.

மரத்தின் மீதேறியவன் மரத்தின் மீதேறியது பிசகு. அப்படியில்லாமல் இரண்டு பேருமாகச் சேர்ந்து கரடியை எதிர்த்திருக்க வேண்டும் என்பது கதை எழுதியவரின் நோக்கம்.

என்ன பயித்தியக்காரத்தனம்! இரண்டு பேருமாக எதிர்த்தால் ஒன்று இரண்டு பேருமாகச் சேர்ந்து கரடியைக் கொன்றிருக்கப் போகிறார்கள், அல்லது இரண்டு பேரையும் சேர்த்துக் கரடி கொன்றிருக்கப் போகிறது.

கரடி பலசாலியா, அல்லது, மனிதர்கள் பலசாலியா, என்பதைத் தவிர நாம் இதனால் வேறு ஒன்றும் தெரிந்து கொள்ளப் போவதில்லை.

ஆனால் இப்பொழுதோ, அதாவது நண்பர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று பெரியவர்கள் எதிர்பார்க்கிறார்களோ, அந்த முறையில் மரம் ஏறியவன் நடந்து கொள்ளாததால், எத்தனையோ புது உண்மைகளைத் தெரிந்து கொண்டிருக்கிறோம். கரடிகளிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்கு இரண்டு புது வழிகள் தெரிந்து கொண்டோம். கரடிக்கு மரம் ஏறத் தெரியாது, ஆகவே கரடியைக் கண்டதும் மரத்தின் மீதேறி தப்பித்துக் கொள்ளலாம் என்பது ஒரு வழி. செத்தவர்களைக் கரடி தின்னாது. ஆகவே செத்தவர்களைப் போல் பாசாங்கு செய்து தப்பித்துக் கொள்ளலாம் என்பது இரண்டாவது வழி.

ஆகக்கூடி நண்பர்கள் என்றால் யார் என்பதைப் பற்றிப் பெரியவர்கள் இத்தகைய கடுமையான விதிகள் போட்டதனால்தானோ, என்னவோ உலகில் நண்பர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வரத் தொடங்கியது. இன்னும் கொஞ்ச காலம் போனால் நண்பர்கள் என்ற நாமதேயமே இல்லாமல் போய்விடுமோ என்று எல்லாரும் பார்த்துக் கொண்டிருந்த சமயத்தில், திடீரென்று ஒரு மாறுதல் ஏற்பட்டது.

நண்பர் என்ற பதத்துக்குக் கொடுக்கப்பட்டிருந்த பழைய அர்த்தம் மாறி இப்பொழுது ஒரு புது அர்த்தம் ஏற்பட்டு விட்டது. இப்புது அர்த்தத்தின்படி நண்பர்கள் என்றால் யார் தெரியுமா? இதோ ஒன்றிரண்டு உதாரணங்கள் கொடுக்கிறேன்.

முதல் உதாரணமாக எனக்கு அடுத்த வீட்டு அண்ணாசாமி அய்யர் எப்படி நண்பரானார் என்று சொல்லுகிறேன்.

நான் முதல் முதலில் மாம்பலத்துக்குக் குடி போனதும் எங்கள் வீட்டு வேலைக்காரி வழக்கம் போல் குப்பையை அடுத்த வீட்டுக் கொல்லையில் கொண்டு போய்க் கொட்டினாள். உடனேயே அடுத்த வீட்டு வேலைக்காரி அவர்கள் வீட்டுக் குப்பையை எங்கள் வீட்டுக் கொல்லையில் கொண்டு வந்து கொட்டினாள்.

அவ்வளவுதான். உடனே சண்டைக்குப் புறப்பட்டாள் என் சகதர்மிணி. அடுத்தவீட்டு அண்ணாசாமி அய்யரின் மனைவியும் சளைத்தவளா என்ன? அவளும் கிளம்பினாள்.

என் மனைவிக்குத் துணையாக நான் கிளம்பினேன். தம்முடைய மனைவிக்குத் துணையாக அடுத்த வீட்டு அண்ணாசாமி அய்யர் கிளம்பினார்.



வக்கீல் (சாக்ஷியாக வந்திருக்கும் தச்சனைப் பார்த்து):— சண்டை நடந்த இடத்தில் உனக்கும் வாதிக்கும் சுமார் எவ்வளவு தூரம் இருக்கும்?

சாக்ஷி:— சரியாக இருபத்து மூன்று அடி ஏழு அங்குலம் இருக்குங்க.

வக்கீல்:— அதெப்படி உனக்கு அவ்வளவு கணக்காகத் தெரியும்?

சாக்ஷி:— இந்த மாதிரி முட்டாள் கேள்வி யாராவது கேப்பாங்கன்னுதான், அளந்துட்டே வந்தேனுங்க!

அன்று எனக்கு நண்பரான அண்ணாசாமி அய்யர்தான் எனக்கு இன்றுவரை நண்பராக இருக்கிறார். குப்பைச் சண்டையிலிருந்து வேலிச் சண்டை, வேலிச் சண்டையிலிருந்து இரைச்சல் சண்டை, இரைச்சல் சண்டையிலிருந்து சம்பந்திச் சண்டை, என்று இப்படிச் சண்டை மாறிச் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறோம். நான் அவரை நண்பர் என்றுதான் அழைத்து வருகிறேன். அவரும் என்னை நண்பர் என்றுதான் அழைத்து வருகிறார்.


தற்கால நண்பருக்கு இன்னொரு உதாரணம் சொல்லுகிறேன். கேளுங்கள்.

ராமன் என்னும் நண்பருக்குக் கிருஷ்ணன் என்னும் இன்னொரு நண்பரின் உதவி வேண்டியிருக்கிறது. ராமன் ஒரு புதுத் தொழிலில் இறங்க ஆசைப்படுகிறார். அதற்கு வேண்டிய மூலதனம் அவரிடம் இருக்கிறது. ஆனால் தொழில் விஷயமாக ஒன்றும் தெரியாது. ஆனால் கிருஷ்ணனோ தொழிலை நன்கு அறிந்தவர். ஆனால் கையில் மூலதனம் கிடையாது.

ஆகவே தமக்கு வரும் லாபத்தில் கிருஷ்ணனுக்கு ஒரு பங்கு தருவதாக வாக்களித்து முதலாளி ராமன் கிருஷ்ணன் உதவியுடன் தொழில் நடத்த ஆரம்பிக்கிறார். தொழில் நன்கு நடக்கிறது. கொள்ளை கொள்ளையாக லாபம் கிடைக்கிறது. தாம் வாக்களித்தபடி கிருஷ்ணனுக்கு லாபத்தில் பங்கு கொடுத்தால் தாம் என்ன கொடுக்க வேண்டுமென்று முதலாளி ராமன் கணக்குப் பார்க்கிறார். ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் கொடுக்கும்படி ஆகிறது.

"ஐயோ! இத்தனையா!" என்று பயந்து, பணம் கொடுக்காமல் கிருஷ்ணனுக்கு எப்படி நாமம் போடலாம் என்று யோசிக்கிறார். நாமம் போடுவதற்கு இன்னொரு நண்பர் வழி சொல்லிக் கொடுக்கிறார். கடைசியில் நண்பர் ராமன் நண்பர் கிருஷ்ணனுக்கு நாமம் போடுகிறார்.

தற்காலத்தில் இத்தகைய நண்பர்களே அதிகரித்துக் கொண்டு வருகிறார்கள். இவர்கள் எத்தனை சௌக்கியமாக வாழுகிறார்கள் என்று நினைத்துப் பார்க்கும்போது, ஆபத்தில் உதவுகிறவன்தான் நண்பன் என்று பழங்காலத்துப் பயித்தியக்காரர்கள் உளறி விட்டுப் போயிருக்கிறார்களே என்று நினைக்க நினைக்க ஆச்சரியமாய் இருக்கிறது.



எந்த நல்ல சந்தர்ப்பத்திற்கும்

சிநேகிதர்களின் கூட்டுறவு காலங்களில் டெனார் சிகரெட்டு உங்களெல்லாருக்கும் ஆனந்தத்தை அளிக்கும். டெனார் சிகரெட்டின் நறுமணத்தை சந்தோஷத்துடன் இக் காலங்களில் நீங்கள் அனுபவிப்பீர்கள். உங்களில் மெல்லிய தொண்டையுடையவர்கள் இதையே விரும்புவார்கள். உத்தரவாதமுள்ள 100% பொறுக்கின வர்ஜீனியா புகையிலைதான் டெனார்ஸ் செய்யப்படுகிறது. சுகம் நிறைந்த இந்த சிகரெட்டை நீங்கள் வாங்கி உங்கள் சிநேகிதர்களுடன் அனுபவித்துப் பாருங்கள்.

டி லக்ஸ் டெனார் சிகரெட்டு
ஜேம்ஸ் கார்ல்டன் லிட், லண்டன்

tenor

is truly a de Luxe Cigarette

JAMES CARLTON LTD. LONDON.

கல்கி



ALKI ஜனவரி 28 1945 4 அண



ஜம்மியின் லிவர் க்யூருக்கு வந்தனம்

எல்லாவிதமான சிகிச்சையாலும் கைவிடப்பட்ட, முற்றிப்போன ஈரல்குலைப் பெருக்கத்தினின்றும் என் உயிரைக் காப்பாற்றியது.

ஈரல் குலைக்கட்டி முதலியவைகளுக்கு இது ஒரு அதி அற்புத நிவாரணி.

எல்லா மருந்து ஷாப்பிலும் கிடைக்கும்.

ஜம்மி வெங்கடரமணய்யா & சன்ஸ்
மயிலாப்பூர் மதராஸ்

சப் ஆபீஸ்: கும்பகோணம்

பிராஞ்சுகள்: பம்பாய், கல்கத்தா, லக்னௌ, திருச்சிறாப்பள்ளி, பெங்களூர்.



அரைக்கீரை விதைத் தைலம்

●

அரைக்கீரை விதையுடன் 72-வித சரக்குகளும், அநேக பச்சிலைகளும் சேர்த்துத் தயாரிக்கப்பட்டது. இத் தைலத்தை வாரம் இரு முறை தேய்த்து ஸ்நானம் செய்து வர சிரசைப் பற்றிய சகல வியாதிகளைப் போக்குவதுடன் கண் எரிச்சல், கண் மறைப்பு முதலிய கண் சம்பந்தமான வியாதிகளையும், காது குத்தல், காதில் சீழ் வருதல் முதலிய வியாதிகளையும் கண்டிக்கக் கூடியது.

●

தயாரிப்பவர்கள்:

டி. எஸ். ஆர்.
அண்டு கோ., கும்பகோணம்.

●


மதராஸ் ஸிடி ஏஜெண்டுகள்:
மெஸர்ஸ். புஷ்பவனம் ஸ்டோர்ஸ்
பைக்ராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி.

●

ஸ்டாக்கிஸ்டு:
லில்லி பர்ப்யூமரி மார்ட், திருச்சி.

Regd. No. M. 4392

உங்களுடைய சாமான்களை வெளியூர்களுக்கு அனுப்ப



இனி கவலை வேண்டியதில்லை

உங்கள் ஏற்றுமதி, இறக்குமதி எவ்வளவு இருந்தாலும் அவைகளை திருப்திகரமாயும், சிக்கனச் செலவிலும், உங்களுக்கு ஒருவித சிரமமில்லாமலும், குறித்த காலத்திலும், அநேகமாய் நேரே உங்கள் வீடோ அல்லது கிடங்குகளிலேயே கொண்டு போய்ச் சேர்க்கும்படியான வசதிகளை நாங்கள் செய்கிறோம்.

விவரங்களுக்கு எழுதவும் :

ஸ்ரீ ராம விலாஸ் சர்வீஸ் லிமிடெட்

மவுண்டு ரோடு (போன் : 8586) மதராஸ்

Edited, Printed and Published by K. Krishnamurthy at the "Kalki" Press.
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.